


ஹிந்தி சந்திரலேகா : சென்னை வெலிங்டனில்
கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்!


கடாவ்
வாயில்கள்



தமிழ் நாடெங்கும்
நடைபெறுகிறது!
விஜய
குமாரி
விழியாலே மொழிபேசும் நடிப்பு,
உள்ளத்தை உருவகப்படுத்தும் நடனங்கள்,
சொல்லமைப்பால் சுவைபயக்கும்
பாடல்கள், அனைத்தும் ஒன்றிய கற்பனை
குன்றாத திரைச் சித்திரம்........
டைரக்ஷன்-ஏ.எஸ்.ஏ.சாமி
ஜூபிடர் தயாரிப்பு
ஸ்டுடியோ-செண்ட்ரல்

Tushar

விடமின் சத்துக்களடங்கிய வனஸ்பதி



நல்ல ருசி வாய்ந்தது
மீக்க போஷாக்களிப்பது
அதிக திருப்தி யளிப்பது



சமையலுக்கு
சிறந்த
சாதனம்



துங்கபத்ர
இண்டஸ்ட்ரீஸ்
கர்நூல் (மதராஸ்)

பிரதம விநியோகஸ்தர்கள் :

தமிழ்நாடு, ஆந்திரதேசம், மதராஸ் : டி. கன்னு & கோ., கசீல் மான்ஷன்ஸ், 35, மவுண்ட் ரோடு, மதராஸ்
மைசூர் சமஸ்தானம் : செட்டி குன்னப்ப நாராயணஸ்வாமி & கோ., 200, சுல்தான்பேட்டை, பெங்களூர் சிடி
ஹைதராபாத் சமஸ்தானம் : காசாராம்லால் & கோ., 8568/1 & 2, ஜேம்ஸ் தெரு, செகந்திராபாத்
மேற்கு கடற்கரைப் பிரதேசங்கள் : டி. கன்னு & கம்பெனி, *(பிரதம மொத்த வியாபாரிகள்)*
கசீல் மான்ஷன்ஸ், 35, மவுண்ட் ரோடு, மதராஸ்



கல்கி


பொருளடக்கம்

★

மலர் 9 இதழ் 30 | ஏப்ரல் 30 | விக்ருதி ௵ சித்திரை 18

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

அசோக் - சாந்தி பேட்டி!


இந்தியாவிலிருந்து வந்துள்ள அசோக், சாந்தி என்னும் யானைக் குட்டிகளைப் பேட்டி காண்பதற்காக ஒரு அமெரிக்க நிருபர் சென்று "குட்மார்னிங்" என்றார். அவை "ஜே ஹிந்த்!" என்று கூறி வரவேற்றன.
"உங்கள் பிரயாணம் வசதியாக இருந்ததா?"
"விமானத்தில் வர விரும்பினோம். ஆனால் கப்பலில் தான் இடம் கிடைத்தது."
"நேரு-லியாகத் ஒப்பந்தத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"
"அந்த உதாரணத்தை ட்ருமனும் ஸ்டாலினும் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறோம்."
"உங்களை ட்ருமன் பார்த்தாரா?"
"ஆம், எங்களைப் பார்த்த பின் இளைத்த கீழ் நாடுகளுக்கு உதவி செய்யும் யோசனையை அவர் கைவிட உத்தேசித்திருப்பாரோ என்று அஞ்சுகிறோம்."
"காந்திஜி அரைத் துணி உடுத்தினார் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். நீங்கள் அது கூட உடுத்தவில்லையே? இந்தியாவில் அவ்வளவு துணிப் பஞ்சமா?"
"சீ! போ! நாங்கள் குழந்தைகளுக்கு வேடிக்கை காட்ட வந்தோம். உன்னோடு வம்பு பேச வரவில்லை!"

மலர் 9

கல்கி

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 39

என்ன சேதி?

ஏகோபித்த தீர்ப்பு

சென்ற வாரத்தில் சென்னை மாகாணத்தில் ஒரு விந்தையைக் கண்டோம். தென்னிந்தியாவிலுள்ள அத்தனை பத்திரிகைகளும் ஒரு விஷயத்தைப் பற்றி ஏகோபித்த அபிப்பிராயத்தைத் தெரிவித்தன. அதாவது உத்தரப் பிரதேச (பழைய ஐக்ய மாகாண) சர்க்கார் அவ்விடத்து அழுகல் அரிசியைச் சென்னை மாகாணத்தின் தலையில் அநியாய விலைக்குக் கட்டி விட்ட கொடுமையைக் கண்டிப்பதிலேதான். அரிசியோ மிக மட்டம்; விலையோ இங்கு விளையும் நல்ல அரிசியின் விலையைக் காட்டிலும் அரை மடங்கு அதிகம். இந்த மோசத்தைப் பற்றி, "பகற்கொள்ளை" "படுமோசம்" "அதர்மம்" "அக்கிரமம்" "அடாத செயல்" என்றெல்லாம் சென்னைப் பத்திரிகைகள் ஏகோபித்துக் கூறின. இந்தக் காரியத்தைச் சென்னை சர்க்காரும் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். இந்தியப் பார்லிமெண்டில் உள்ள நமது பிரதிநிதிகளில் சிலர் காரசாரமாகப் பேசியிருக்கிறார்கள். ஆயினும் உணவு மந்திரி ஜயராம்தாஸ் தவுலத்ராம் காற்றுக்கு நிற்காத அபத்த வாதங்களைச் சொல்லி மேற்படி அக்கிரமத்துக்குச் சப்பைக் கட்டுக் கட்ட முயற்சித்தார். தமிழ்நாட்டில் சில காலத்துக்கு முன்பு "திராவிட நாடு திராவிடருக்கே" என்றும் "தனித் தமிழ் அரசு வேண்டும்" என்றும் அர்த்த மற்ற கோஷங்கள் கிளம்பி வந்தன. இந்தக் கோஷங்களைச் சில நாளாக அவ்வளவு பெருங் குரல்களில் நாம் கேட்பதில்லை. "திராவிட நாடு" "தனித் தமிழரசு" கூக்குரல்களுக்குப் பலம் கொடுப்பதற்காகவே உத்தரப் பிரதேச சர்க்காரும் இந்தியாவின் உணவு மந்திரியும் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வது போலக் காணப்படுகிறது. தீர்க்க திருஷ்டியின்றிச் சுயநலங் கொண்டு இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் லாபம் சம்பாதிக்கப் பார்ப்பது நாளைக்குப் பல கோடி ரூபாய் நஷ்டமாய் முடியலாம் என்பதை வடநாட்டு அரசியல் வாதிகளுக்கு எடுத்துக் காட்டி எச்சரிக்கை செய்யவேண்டும்.

வள்ளுவர் வாக்கு

சுதந்திர இந்தியா எத்தனையோ இன்னல்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் மாகாணத்துக்கு மாகாணம் குரோதம் வளரும்படியான காரியம் எதுவும் செய்யக்கூடாது; அத்தகைய சூழ்நிலையும் ஏற்படக்கூடாது. இப்போது ஏற்பட்டிருக்கும் அருவருப்பான நிலைமைக்கு அடிப்படையான காரணம் என்னவென்று பார்க்க வேண்டும். அது இந்தச் சென்னை மாகாணத்துக்குத் தேவையான உணவு இங்கே உற்பத்தியாகாமலிருப்பதுதான். தமிழ் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் கட்டாயமாக இவ்வளவு குறள்களை நெட்டுருச் செய்தாகவேண்டும் என்று காங்கிரஸ் மந்திரிகள் உத்தரவு போட்டிருக்கிறார்கள். தெய்வக் குறள் மீது நம் பிள்ளைகளுக்கு வெறுப்பு உண்டாக்குவதற்கே இந்தக் கட்டாய உத்தரவு பயன்படும் என்று நம்மில் அறிஞர்கள் கருதுகிறார்கள். இப்படிப் பிள்ளைகளைக் கட்டாயப்படுத்தி நெட்டுருப் பண்ணச் செய்வதைவிட நம்முடைய மந்திரிமார்கள் திருக்குறளில் ஒரு பாவில் கவனம் செலுத்திக் காரியத்திலும் நடத்தி வைத்தால் இம்மாதிரி நாம் கோடிக்கணக்காக நஷ்டப்பட வேண்டி

யிராது. பிற மாகாணத்தார் மீது கோபங் கொள்ளவும் அவசியமும் ஏற்பட்டிராது. அந்தக் குறள் இதுதான் :—

"கொளற்கரிதாய்க் கொண்ட கூழ்த்தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீரதரண்"

இந்தப் பாவில் 'கூழ்' என்பது உணவைக் குறிக்கும். ஒரு கோட்டையைப் பத்திரமாகப் பாதுகாப்பதற்கு அவசியமான சாதனங்களில் 'போதுமான உணவு' ஒரு முக்கிய சாதனம் என்று குறளாசிரியர் தம் தெய்வ வாக்கில் கூறுகிறார். கோட்டைக்குச் சொன்னது நாட்டுக்கும் பொருந்தும். ஒரு நாட்டைப் பாதுகாப்பதற்கு வேறு எத்தனை சாதனங்கள் இருந்தாலும் பயனில்லை. அந்த நாட்டு மக்களுக்கு வேண்டிய உணவு அந்த நாட்டில் உற்பத்தியாக வேண்டும். இந்த உண்மையைச் சென்ற மகா யுத்தத்தின் போது பிரிட்டிஷ் மக்கள் கண்டார்கள். ஒரு பெரு முயற்சி செய்து தங்களுக்கு வேண்டிய உணவைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளத் தொடங்கினார்கள். அதில் பெரும்பாலும் வெற்றி பெற்று விட்டார்கள். இந்த நாட்டில், முக்கியமாகச் சென்னை மாகாணத்தில், உணவுப் பெருக்கத்தைப் பற்றிய பேச்சுக்களை நாம் ஏராளமாகக் கேட்டு வருகிறோம். காரியத்திலோ 'நாளுக்கு நாள் நகர்ந்தது காண் அம்மானாய்!' என்ற நிலையிலேயே இருந்து வருகிறோம்.

பாரதியார் சொன்னார்!

ஒரு விஷயத்தில் இந்த மாகாண சர்க்கார் உடனே உறுதி கொள்ள வேண்டும். அதாவது வேறு உணவுப்பொருள் ஏதேனும் வெளிநாட்டிலிருந்து தருவிக்கும் அவசியம் இருந்து தருவித்தாலும் அரிசி மட்டும் வெளிநாடுகளிலிருந்து தருவிப்பதில்லை யென்று திடமாயிருக்க வேண்டும். இதற்காக இப்போது கொடுக்கும் ரேஷன் அரிசியில் இன்னும் இரண்டு அவுன்ஸ் குறைத்தாலும் பாதகமில்லை; உணவு உற்பத்தியாளருக்குக் கொடுக்கும் பதினாறு அவுன்ஸ் அரிசியிலும் இரண்டு அவுன்ஸ் குறைத்தால் குற்றமில்லை. இந்த இரண்டு அவுன்ஸ் குறைவினால் மக்கள் செத்துப் போய் விட மாட்டார்கள். உயிரை எப்படியாவது பிடித்து வைத்துக் கொண்டு நல்ல காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். அரிசிக்குப் பதிலாக வேறு கோதுமை, சோளம் முதலிய தானியங்களை எந்த அளவுக்கு அத்தியாவசியமோ, அந்த அளவுக்குக் கொஞ்ச காலம் தருவித்துக் கொள்ளலாம். மகான் பாரதியார் இது விஷயமாக என்ன சொல்லியிருக்கிறார், தெரியுமா?

"கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவேரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்"

என்று தான் சொல்லியிருக்கிறார். வெளி மாகாணங்களிலிருந்து கோதுமை வாங்கினால் அதன் விலையை உயர்த்தி நம்மைக் கொள்ளை அடிக்க முடியாது. ஏனெனில் கோதுமை விலை அகில இந்தியாவுக்கும் ஏறக்குறைய ஒன்றாகவே நிர்ணயிக்கப்படும். தேவைக்கு அதிகமாகக் கோதுமையை வாங்கவும் மாட்டோம். ஆனால் சென்னை மாகாணத்தார் அரிசிப் பித்து பிடித்தவர்கள் என்று அறிந்து தான் பிற மாகாணத்தாரும் பிற நாட்டாரும் நம்மை மொட்டை யடிக்கப் பார்க்கிறார்கள். இதற்கு நாம் இடங் கொடுப்பது படுமுட்டாள்தனமாகும். பட்டினி கிடக்க நேர்ந்தாலும் வெளியிலிருந்து அரிசி தருவிப்பதில்லை யென்று மக்களும் சர்க்காரும் கங்கணங் கட்டிக் கொண்டு உறுதியாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் உலகத்தார் நமக்குப் பைத்தியக் காரப் பட்டம் கட்டி விடுவார்கள்!

அறுபத்தைந்தில் ஒன்று!

இந்திய பூமியில் பிரஞ்சுக்காரர்கள் தங்களுக்கு இருந்து வரும் சபலத்தில் அறுபத்தைந்தில் ஒரு பகுதியை இப்போது கைவிட்டிருக்கிறார்கள்! பாரத நாட்டிலே பிரஞ்சுக்காரர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் நூற்றுத்தொண்ணூற்றாறு சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசங்கள் இருந்து வருகின்றன. அவற்றுள் மூன்று சதுரமைல் பரப்புள்ள சந்திர நாகூரை இந்திய சர்க்காரின் நிர்வாகத்தில் ஒப்புவித்துவிட பிரஞ்சு சர்க்கார் இசைந்திருக்கிறார்கள். அவ்விஷயமாக நடந்த இந்திய சர்க்கார், பிரஞ்சு சர்க்கார், மேற்கு வங்காள சர்க்கார் பிரதிநிதிகள் அடங்கிய மகாநாட்டில் மே மாதம் இரண்டாம் தேதி சந்திர நாகூரின் நிர்வாகத்தை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொள்வதென்று முடிவாகியிருக்கிறது. இந்த முடிவுக்கு இனி பிரஞ்சுக்காரர்களால் எவ்வித முட்டுக் கட்டையும் ஏற்படாதென நம்பலாம். ஏனெனில் அவர்கள் தங்களால் இயன்ற இடையூறுகளை யெல்லாம் செய்து பார்த்த பின்புதான் வேறு வழி எதுவுமின்றி மேற்படி முடிவுக்கு வந்திருக்கிறார்கள். எனவே, இந்தியாவிலுள்ள பிரஞ்சுப் பிரதேசங்களுக்குள் முதன் முதலாக இந்தியாவுடன் ஐக்கியமடையும் பாக்கியம் சந்திர நாகூருக்குக் கிடைத்திருக்கிறது.



தென்னிந்தியப் பத்திரிகையாளர் சம்மேளனத்தில் 'டேபிள் டென்னிஸ்' விளையாட்டுப் பந்தயம் சென்ற வாரம் நடைபெற்றது. அந்தப் பந்தயத்திலே வெற்றி பெற்ற ஸ்ரீ எம். எஸ். வி. ரமணிக்கும் ஸ்ரீ கே. எஸ். ராஜனுக்கும் சம்மேளனத் தலைவர் ஸ்ரீ என். ரகுநாத ஐயர் அவர்கள் வெள்ளிக் கோப்பைகளை வழங்குகிறார். அவருக்குப் பக்கத்தில் முகமலர்ச்சியுடன் நிற்பவர் சம்மேளனத்தின் 'ஸ்போர்ட்ஸ் கிளப்' காரியதரிசி ஸ்ரீ கே. எஸ். நரசிம்மன்.

போகிற போக்கிலே ....

சந்திர நாகூரின் சிறந்த உதாரணத்தை இனி மற்றப் பிரஞ்சுப் பிரதேசங்களும் பின் பற்றும் என்பதில் சந்தேகம் இருக்க இடமில்லை. ஏனென்றால், சந்திர நாகூரில் பிரேஞ்சுக்காரர்கள் எத்தனையோ விதவிதமான சூழ்ச்சிகளைக் கையாண்டு பார்த்தார்கள். அந்த நகரிலே பலிக்காத அவர்களுடைய சூழ்ச்சிகள் மற்றப் பிரதேசங்களிலும் பலிப்பதற்கு வழி இல்லையல்லவா?

எனினும் அவர்கள் சந்திர நாகூரில் ஏற்பட்ட படிப்பினையை மனதில் கொண்டு மற்ற இடங்களைக் கண்ணியமாக இந்தியாவினிடம் ஒப்புவித்து விடுவார்கள் என்று தோன்றவில்லை.

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் சர்வஜன வாக்கு எடுத்து அவைகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று இந்திய சர்க்காருக்கும் பிரஞ்சு சர்க்காருக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு இரண்டு வருஷங்கள் ஆகின்றன. ஆனால், அந்த ஒப்பந்தம் நிறைவேருமல் இருப்பதற்கான காரியங்களையே பிரஞ்சு சர்க்கார் இன்று வரை செய்து வந்திருக்கிறார்கள். பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களின் கமிஷனர் பதவியிலிருந்து விலகிச் செல்லும் ஜீன் சாம்பான் போகிற போக்கிலே ஏதோ உளறிவிட்டுச் சென்றிருக்கிறார். "புதுச்சேரி மக்களின் பண்பும் வாழ்க்கையும் இந்தியாவைக் காட்டிலும் பிரான்சுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால் புதுச்சேரி இந்தியாவுடன் சேரும் என்று நினைப்பதற்கே இடமில்லை" என்று கூறியிருக்கிறார். அவர் அவ்வாறு கூறியது பிரஞ்சு இந்திய ஜனங்கள் எல்லோரையும் அவமதிப்பதாகும். அவ்வாறு தங்களை அவமதித்த ஜீன் சாம்பானின் கூற்று முழுப் பொய் என்பதை பிரஞ்சு இந்தியர்கள் சர்வ ஜன வாக்கு எடுக்கப்படும்போது சந்தேகமின்றி நிரூபிக்கவேண்டும். காலம் கடத்தாமல் நேர்மையுடன் சர்வஜன வாக்கு எடுக்கும்படியும் அவர்கள் பிரஞ்சு இந்திய அதிகாரிகளை வற்புறுத்த வேண்டும்.

கடலில் எறியுங்கள்

இலங்கை இந்தியர்கள் ஏகோபித்து நின்றதன் பலனாக மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டப்படி இந்தியர்கள் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளலாம் என்று இலங்கை சர்க்கார் உத்தரவு பிறப்பித்து ஒரு வருஷத்துக்கு மேல் ஆகிவிட்டது.

தங்களுடைய உத்தரவுக்கு அடிபணிந்து பதினாயிரக் கணக்கான இந்தியர்கள் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்வார்கள் என்று இலங்கை சர்க்கார் கனவு கண்டு வந்தனர். பதினாயிரக் கணக்கானவர்கள் பதிவு செய்துகொண்டு விட்டால் லட்சக் கணக்கான இந்தியர்கள் இலங்கைப் பிரஜைகள் அல்ல என்பது சட்டபூர்வமாக உறுதியாகிவிடும் என்றும் இலங்கை சர்க்கார் எண்ணிக் கொண்டிருந்தனர். இந்தியர்கள் அவ்வாறு பதிவு செய்து கொள்வதற்காக சர்க்கார் பல்வேறு யுக்திகளையும் பிரசார முறைகளையும் கைக்கொண்டனர்.

ஆனால் இலங்கை சர்க்கார் நம்பிக்கையுடன் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாகக் காரியங்கள் நடந்திருக்கின்றன.

உலகத்திலே வேறெந்த நாட்டிலும் இராத அநீதிகள் நிறைந்து கிடக்கும் இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டத்தை அங்குள்ள இந்தியர்கள் பகிஷ்காரம் செய்யவேண்டும் என்று சென்ற வருஷம் நடந்த இலங்கை இந்தியர் காங்கிரஸிலே தீர்மானம் நிறைவேறியது.

அந்தத் தீர்மானத்தை இலங்கை இந்தியர்கள் இப்போது செயலிலும் நிறைவேற்றி விட்டார்கள்.

இலங்கையிலுள்ள எட்டரை லட்சம் இந்தியர்களில் சர்க்காரின் கோரிக்கைக்கு இணங்க ஆயிரத்து ஐந்நூறு பேர்கூடப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ள முன்வரவில்லை!

எனவே, இலங்கை இந்தியர் பிரச்னை முடிந்துபோன விஷயம் என்று பிடிவாதம் செய்த இலங்கை சர்க்காரே அதை மறுபடியும் புனராலோசனை செய்யும்படி நேர்ந்திருக்கிறது.

இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டம் நிறைவேறியது நிறைவேறியதுதான் என்றும், இனி அதை யாராலும் மாற்ற முடியாது என்றும் கூறிய இலங்கைப் பிரதம மந்திரி ஸ்ரீ சேனநாயகா அந்தச் சட்டத்தைத் திருத்தத் தீர்மானித்திருக்கிறார் என்றால், அது இலங்கையிலுள்ள இந்திய மகா ஜனங்களுக்கு வெற்றியல்லவா?

எனினும் இலங்கை இந்தியர்கள் தங்களுக்குக் கிடைத்துள்ள வெற்றியைக் கண்டு இறுமாப்பு அடையாததுடன், தாங்கள் எந்த க்ஷணத்திலும் சமரசத்துக்குத் தயார் என்பதையும் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சென்றவாரம் மாத்தளையிலே ஸ்ரீ கே. ராஜலிங்கம் தலைமையில் நடந்த இலங்கை இந்தியர் காங்கிரஸ், பகிஷ்காரத் தீர்மானத்தை வாபஸ் பெறக் காரியக் கமிட்டிக்கு அதிகாரம் அளித்திருப்பது போற்றத்தக்க காரியம்.

இலங்கை இந்தியர் காங்கிரசின் சமயோசிதமான அந்தத் தீர்மானத்தை ராஜாஜி பாராட்டியிருக்கிறார்.

"இலங்கை இந்தியர் பிரச்னையை நிரந்தரமாகத் தீர்ப்பது சாத்தியமான காரியமே என்பதில் சந்தேகமில்லை. அந்தப் பிரச்னை தீர்ந்தால்தான் அங்கு இந்தியர்கள் மற்றப் பிரஜைகளைப் போல் அமைதியான ஜனநாயக வாழ்க்கையை நடத்த முடியும். பார்லிமெண்டிலுள்ள சிங்கள அங்கத்தினர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் மேற்படி பிரச்னையைத் தைரியத்துடனும் அனுதாபத்துடனும் கற்பனா சக்தியுடனும் தீர்க்க முற்படவேண்டும்" என்று ராஜாஜி அரிய யோசனை கூறியிருக்கிறார்.

• • •

அநீதியான இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டம் ஒருபுறமிருக்க, அங்கு புதிது புதிதாக முளைத்து வரும் கட்டுப்பாடுகளும் நிபந்தனைகளும் இலங்கை இந்தியர்களின் வாழ்க்கையை நரக வேதனைக்கு உள்ளாக்கி வருகின்றன.

இலங்கையிலிருந்து தற்காலிகமாக இந்தியாவுக்கு வருவோர் திரும்பவும் அங்கு செல்ல முடியாமல் தடுக்கப்படுகிறார்கள். இலங்கைப் பிரஜைகளாவதற்கு உரிய எல்லா யோக்கியதாம்சங்களும் உடையவர்கள் கூட அவ்வாறு சர்க்காரால் தடுக்கப் படுவதுதான் விபரீதமாக இருக்கிறது.

இலங்கைப் பிரஜைகளாக முடியாமல் இந்தியர்களுக்குப் பலவிதமான முட்டுக்கட்டைகள் போடப்படுவதோடு, அவர்களை இலங்கையிலிருந்து விரட்டுவதற்கான சில அரசியல், பொருளாதார ஆயுதங்களையும் இலங்கை சர்க்கார் பிரயோகித்து வருகிறார்கள்.

அத்தகைய ஆயுதங்களில் செலாவணிக் கட்டுப்பாடு என்பதும் ஒன்று.

இலங்கைக்கு இனி திரும்பி வருவதேயில்லை என்ற தீர்மானத்துடன் இலங்கையிலிருந்து வெளியேறுவோர் தங்களுடைய சொத்துக்களை விற்றுவிட்டுத் தொகையை எடுத்துக்கொண்டு செல்லலாம் என்று கூறினார்கள்.

ஆனால் அவ்வாறு எடுத்துச் செல்வதற்கும் இப்போது அர்த்தமற்ற தடைகள் விதிக்கப்படுகின்றன.

ஓர் இந்தியர் தம்முடைய வாழ்க்கை முழுவதும் இலங்கையில் உழைத்துத் தேடிய ஆஸ்தி ரூபாய் அறுநூறை எடுத்துக் கொண்டு இந்தியாவுக்குப் புறப்படுகையில் அவரை அறுபது ரூபாய்க்கு மேல் எடுத்துச் செல்லக் கூடாது என்று இலங்கை சர்க்கார் தடுத்து நிறுத்தி விட்டார்களாம்.

இதுபோன்ற பல உண்மைகளை ஸ்ரீ ராஜலிங்கம் தமது தலைமை உரையில் உருக்கமாக விவரித்திருக்கிறார்.

இவ்வாறாக இலங்கை இந்தியர்கள் இந்தியாவிலுள்ள தங்கள் பெண்டு பிள்ளைகளுக்குப் போதிய பணம் அனுப்ப முடியவில்லை; இந்தியாவுக்குச் சொத்துக்களையும் எடுத்துச் செல்ல முடியவில்லை; இலங்கையிலே பிரஜா உரிமையும் பெற முடியவில்லை என்றால் அவர்களுடைய கதி என்ன ஆவது?

இந்த நிலைமையில், இலங்கையிலுள்ள எட்டரை லட்சம் இந்தியர்களையும் நிர்க்கதியான அரசியல் ஆண்டிகளாகச் செய்வதே இலங்கை சர்க்கார் சட்டங்களின் நோக்கம் என்று இலங்கை இந்தியர் காங்கிரசின் வருஷ அறிக்கை வர்ணிப்பதில் தவறு என்ன?

தலைமுறை தலைமுறையாய் இலங்கையின் செழுமைக்காக உடல் நலிய உழைத்த ஏழை இந்தியர்களைத்தான் இலங்கை சர்க்கார் அற்பத் தொகைக்கு மேல் எடுத்துச் செல்லக் கூடாது என்று கட்டுப்படுத்தி யிருக்கிறார்கள்.

இலங்கையிலுள்ள வெள்ளையர்கள் தங்கள் இஷ்டப்படி எவ்வளவு தொகை வேண்டுமாயினும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப் படுகிறார்களாம்!

அதாவது எத்தனையோ வருஷங்களாக இலங்கையைச் சுரண்டி வந்த, இலங்கைப் பிரஜைகளாக இருப்பதை விரும்பாமல் வெளியேறும் வெள்ளையர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் கூட, இலங்கைக்காக எத்தனையோ வருஷங்கள் பாடுபட்டு உழைத்து இலங்கையையே தாய்நாடாகக் கொள்ள விரும்பும் இந்தியர்களுக்கு அளிக்கப்படுவதில்லை.

இந்த அநீதியை எதிர்த்தே சென்ற பல மாதங்களாக இலங்கை இந்தியர் காங்கிரஸ் போராடி வருகிறது.

* * *

“இந்தியாவும் இலங்கையும் எந்த விஷயத்திலும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும். இரு நாடுகளும் அவ்விதம் ஒத்துழைத்துத்தான் தீர வேண்டும் என்பதையே சரித்திரம் வற்புறுத்துகிறது. இந்தியா—இலங்கையின் நல்லுறவுக்குப் பங்கம் விளைவிக்கும் முறையில் இந்தியரோ இலங்கையரோ நடந்துகொள்ளக் கூடாது. இதே கருத்தை, இதே உணர்ச்சியை இலங்கையும் பிரதிபலிக்குமாயின் இந்தியா—இலங்கை சம்பந்தமான எந்தப் பிரச்னையையும் எளிதில் தீர்க்கலாம்.

“இந்த நாட்டுக்காக உழைத்து, இங்குள்ள தோட்டங்களைப் பண்படுத்தி அபிவிருத்தி செய்த இந்தியத் தொழிலாளர்களின் எதிர்காலம் நிலையற்றதாக இருந்து வருகிறது. இவர்கள் விஷயத்தில் இலங்கை சர்க்கார் கருணை காட்டவேண்டும்.”

பண்டித ஜவாஹர்லால் நேரு சென்ற ஜனவரி மாதம் இலங்கைக்குச் சென்றிருந்தபோது ஐந்து லட்சம் ஜனங்கள் திரண்டிருந்த மாபெரும் கூட்டத்தில் அவ்வாறு இலங்கை சர்க்காரைக் கேட்டுக் கொண்டார்.

ஜவாஹர்லால்ஜியின் உருக்கமான மேற்படி வேண்டுகோளும் பகிஷ்காரத்தை வாபஸ் செய்யும் விஷயமாக இலங்கை இந்தியர் காங்கிரஸ் செய்துள்ள சமரசத் தீர்மானமும் இலங்கை சர்க்காரின் மனதை மாற்றலாம்.

இலங்கை இந்தியர்களுக்கு விரோதமாகக் கைக்கொண்டிருக்கும் அத்யுக்ரமான அரசியல் ஆயுதத்தை இலங்கை சர்க்கார் கடலில் எறிந்து விடுவார்களாயின், பிரஜா உரிமைச் சட்டத்தைத் திருத்தி அதன் கோர ரூபத்தை மாற்றி விடுவார்களாயின் இந்தியா—இலங்கையின் நட்பும் நல்லுறவும் நிரந்தரமாக நீடித்து நிற்கும்.

வான வெளியிலே!

★ ★ ★

நள்ளிரவில் "அண்ணுமலை! அண்ணுமலை!" என்று ஒரு பெரும் இடிமுழக்கக் குரல் கேட்டது. அரைத் தூக்கமாயிருந்தவன், எழுந்து உட்கார்ந்து கொண்டேன்.

மறுபடியும் அந்தப் பெருங் குரல் "அண்ணுமலை! அண்ணுமலை!" என்று என் தலைக்குமேலேயே கேட்டது. ஆனல் என் தலைக்குமேலே அண்ணுந்து பார்த்த போது நட்சத்திரங்கள் தான் மினு மினுக்கிக் கொண்டிருந்தன. வேறு யாரும் கண்ணுக்குத் தெரியவில்லை.

"ஓ விந்தியமலையே! ஏன் இப்படிக் கத்துகிருய்! காது செவிடில்லை!" என்று இன்னெரு குரல் கேட்டது.

"ஒருவேளை செவிடாகி விட்டாயோ அல்லது மௌன விரதம் எடுத்துக் கொண்டாயோ என்று பார்த்தேன்!"

"சரி, சரி! உன் அரட்டைக் கல்வி இருக்கட்டும். எதற்காக இந்த நடுநிசியில் என்னைக் கூப்பிட்டாய்?"

"உன்னிடம் இமயமலைக்கு ஒரு விஷயம் கேட்க வேண்டுமாம். அது என்னவென்று கேட்டுச் சொல்கிறேன்."

"இமயமலைக்கு வாய் இல்லையா, என்ன? அதற்குத்தான் ஆயிரம் வாய்கள் உண்டே? அதுவே கேட்கட்டுமே? நீ எதற்காக நடுவில் கத்துகிருய்!"

ஒருவாறு எனக்கு விஷயம் புரிந்தது. நடுநிசி நேரத்தில் மலைகள் பேசிக் கொள்கின்றன. அந்தச் சத்தந்தான் இப்படி வான வெளியிலே பிரயாணம் செய்யும் போது என் காதிலும் கேட்கிறது. நல்ல வேளை! இவ்வளவு உயரத்தில் அந்த மலைகளின் குரல்கள் பிரயாணம் செய்யும் போதே இப்படி என் காது கெஞ்சுகிறதே! அவற்றின் குரல் இன்னும் கிழேயே கேட்டால் என் காது இரண்டும் செவிடாக வேண்டியதுதான்!

மலைகளின் சம்பாஷணை பின் வருமாறு தொடர்ந்து சென்றது:—

"அண்ணு! இமயமலை அண்ணு! நமது அண்ணுமலைக்கு உன்னேடு நேரிலேயே பேச வேண்டுமாம்!"

"இதோ பார்! என் பெயருக்கு முன்னுல் 'திரு' என்ற மரியாதைப் பட்டம் உண்டு. அதை மறந்து விடாதே!"

"அப்படியே யாகட்டும்! கோபித்துக் கொள்ளாதே! இமயமலை அண்ணு! என் குரல் கேட்கிறதா? மகாகனம் பொருந்திய திருவாளர் திருவண்ணுமலையாருடன் நீயே நேரில் பேச வேண்டுமாம்!"

அப்போது "ஹூம்" என்று ஒரு பிரமாண்டமான கனைப்புச் சத்தம் கேட்டது. அத்துடன் ஜில்லென்று பனிக்கட்டி போலக் குளிர்ந்த காற்று குப்பென்று வந்து அடித்தது.

ஓஹோ! இமய மலையார் தொண்டையைக் கனைக்கிறர் போலும்!—என்று எண்ணித் துப்பட்டியை இழுத்துப் போர்த்திக் கொண்டேன்.

கம்பீரமான குளிர்ந்த கம்பிய குரலில் "தம்பி! அண்ணுமலை! சுகமா?" என்று இமயமலை சொல்லக் கேட்டு என் செவிகள் குளிர்ந்தன.

"ஆம், அண்ணு! நான் சுகந்தான். ஆனல்......" என்று திருவண்ணுமலை சொல்லி நிறுத்தியது. உணர்ச்சி மிகுதியினல் தொண்டை அடைத்துக்கொண்டு, அதனல் மேலே பேச முடியவில்லை யென்று தோன்றியது.

"ஆமாம், தெரியும், தம்பி! உனக்கு என் மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவிப்பதற்காகத்தான் கூப்பிட்டேன். இத்தனை காலும் அந்த மகான் ரமண ரிஷி உனக்கு எத்தனையோ பெருமையளித்துக் கொண்டு உன்னிடம் வாசம் செய்து வந்தார்......"

"எனக்குப் பெருமையில் ஆசையில்லை; அதற்காக நான் வருத்தப்படவும் இல்லை. பகவான் ரமணர் என்னிடம்..."

"தெரியும், தெரியும்! உன்னிடம் பகவான் ரொம்ப வாஞ்சையுடனே தான் இருந்தார். அவருக்குத் தமது உடல்மீது வாஞ்சை இல்லை; எந்த நிமிஷமும் விட்டு உதறுவதற்குச் சித்தமாயிருந்தார். ஆனல் உன்மேல் உள்ள அபிமானத்தினலேதான் சொர்க்க லோகப் பிரயாணத்தை இவ்வளவு நாளும் ஒத்திப்போட்டார்......"

"அந்த மகானுடைய பிரயாணத்தை நீ பார்த்தாயா, அண்ணு!"

"பார்க்காமல் என்ன? இவ்விடம் கைலாசத்துக்குப் போகும்போது இந்த வழியாகத்தான் போனர். ஒரே ஜோதிமயமாயிருந்தார். அவரைத் தரிசித்துச்

சாபல்யமடைந்தேன்! ஆகா! என்ன தூய்மை! என்ன தவம்! நெருப்பு என்ருல், நெருப்புத்தான்! அவர் என் வழியே சென்றபோது கங்கையில் பிரவாகமும் அதிகமாகிவிட்டது..."

"தங்கள் சிரஸிலுள்ள பனிக் கட்டிகள் உருகத் தொடங்கிவிட்டனவாக்கும்!"

"அப்படித்தான்! தம்பி, அண்ணுமலை! அந்த மகாபுருஷரை இத்தனை நாள் வைத்துத் தாங்கிய நீ பாக்கியசாலிதான்...!"

இந்தச் சமயத்தில் விந்தியமலை சம்பாஷணையில் குறுக்கிட்டது!

"இமயமலை அண்ணு! இந்தச் சின்னப் பையனைப் பிரமாதமாக ஆகாசத்தில் வைத்துப் புகழ்கிறீர்களே! தங்களிடம் வசிக்காத மகான்களா? எத்தனையோ ஆயிரம் வருஷங்களாக, எவ்வளவோ ஆயிரம் மகாரிஷிகளும் மகான்களும் தங்களிடம் வசித்துத் தவம் செய்து கடவுளை அடைந்திருக்கிருர்களே!"

"யார் இல்லை என்ருர்கள்? மகான்கள் எங்கே இருந்தாலும் மகான்கள்தான்...!"

"இமயமலை அண்ணு! இந்த விந்திய மலை எப்போதும் இப்படித்தான் பொருமைப் படுவது வழக்கம். பெரியவர்களிடம் இவனுக்கு மரியாதை கிடையாது. ஒரு சமயம் ஒரு ரிஷி இவன்மீது ஏறி மிதித்துக் கர்வபங்கம் செய்தாரே. அது ஞாபகம் இருக்கிறதா?" என்று சொன்ன குரல் திருவண்ணுமலையின் குரல்தான். ஆனல் அதையடுத்து இன்னும் தெற்கேயிருந்து ஒரு கீச்சுக் குரல் கேட்டது:—

"ஆமாம், எனக்குக் கூட ஞாபகம் இருக்கிறது: விந்திய மலையைக் கர்வ பங்கம் செய்த முனிவர் என்னிடத்திலேதான் வெகுகாலம் வசித்தார்......"

"அது யார் அங்கே? புதிய குரலாயிருக்கிறதே!" என்றது இமயமலை.

"அந்தத் தெற்கு காட்டுக் குள்ளன் பொதிகை மலையாயிருக்கும்!" என்றது விந்தியமலை.

"தம்பி! விந்தியமலை! பொதிகையைப் பற்றி அப்படி அலட்சியமாய்ப் பேசாதே! பொதிகை குள்ளமாயிருந்தாலும் அதற்கு வயது அதிகம். உன்னையும் என்னையும் விடக்கூட வயதில் மூத்தது. உலகத்தின் நடு மையமே பொதிகைதான் என்று பெரியவர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன்" என்றது இமயமலை.

"அது மட்டுமா? முன்ெனரு சமயம் உலகத்துக்கே ஆபத்து வந்தபோது காப்பாற்றியது நம் பொதிகைதானே!" என்றது திருவண்ணுமலை.

"அதுவும் ஞாபகம் இருக்கிறது. இங்கே என்னுடைய மகள் பார்வதியின் கலியாணம் நடந்தபோது உலகம் புரண்டுவிடுவதா யிருந்தது. அகஸ்திய முனிவர் பொதிகைக்குப் போய்க் காப்பாற்றினர். பொதிகையே! அகஸ்தியர் இன்னும் அங்கே இருக்கிருரா?"


"இல்லை, இமயமே! கொஞ்ச காலத்துக்கு முன்னல் அகஸ்தியர் திருவட்டீசுவரன் பேட்டை தியாகராஜ விலாசத்தில் மகாமகோபாத்தியாய சுவாமிநாதய்யர் என்ற பெயருடன் எழுந்தருளி யிருந்தார். அப்புறம் போன இடம் தெரியவில்லை. ஒரு வேளை உன் பக்கம் வந்தால்......"

"அது யார் சாமிநாதய்யர்? நான் கேள்விப்பட்டதில்லையே?" என்றது விந்தியபர்வதம்.


"நீ இன்னும் எத்தனையோ விஷயத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லை. அதற்கு நான் என்ன செய்ய? அந்த மகான் 'என் சரித்திரம்' என்று ஒரு அருமையான புத்தகம் எழுதியிருக்கிருர். அதைப் படித்தால் அவரைப் பற்றி எல்லா விவரமும் தெரிந்து கொள்ளலாம்......" என்றது திருவண்ணுமலை.

"விந்தியன் நிரட்சரகுட்சியாயிற்றே! அவனுக்குப் புத்தகத்தினுல் என்ன பயன்?" என்றது பொதிகை.

"வீண் விவாதம் வேண்டாம். படிப்பில்லாதவனுயிருந்தாலும் நம்மைச் சேர்ந்தவன்தானே? அந்தப் புத்தகம் ஒன்று எனக்கு வாங்கி அனுப்புங்கள். நான்



மாயவரம் முனிசிபல் மானேஜர் ஸ்ரீ எம். ஏ. ஜகந்நாதம் பிள்ளை அவர்களின் குமாரி சௌ. சரஸ்வதிக்கும் சிரஞ்சீவி முத்தையன் அவர்களுக்கும் மாயவரத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு நண்பர்களும் உறவினரும் திரளாக விஜயம் செய்து மணமக்களை ஆசீர்வதித்தனர்.



காவிசேரி ஜோஸ்யர் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளின் குமாரன் சிரஞ்சீவி கே. எஸ். விஸ்வநாதனுக்கும், காட்பாடி ஸ்ரீ பி. என். சுப்பராம அய்யரின் புதல்வி சௌ. சீதாலக்ஷ்மிக்கும் காட்பாடியில் வெகு விமரிசையாக விவாகம் நடைபெற்றது. திருமணத்தின்போது தம்பதிகளை ஆசீர்வதித்து ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், சன்மானங்களும் வந்திருந்தன.

படித்து விட்டு அவனுக்கும் சொல்லுகிறேன். தமிழ்ப் புத்தகம்தானே?'' என்றது இமயமலை.

இவ்வளவு பேச்சும் தமிழிலேயே நடந்தது என்பதை அப்போதுதான் நான் உணர்ந்து அதிசயித்தேன். இமய மலைக்குக்கூட அல்லவா தமிழ் தெரிந்திருக்கிறது! யோசித்துப் பார்த்தால், அதில் அதிசயம் ஒன்றுமில்லைதான். ஒரு காலத்தில் இமயமலை முதல் குமரி முனை வரையில் தமிழ் மொழிதான் அரசு செலுத்தியது! இனியும் ஒரு நாள் அரசு செலுத்தப் போகிறது! நேற்றைக்கு இங்கிலீஷ் தடபுடல் செய்தது. இன்றைக்கு ஹிந்தி அதிகாரம் செலுத்தப் பார்க்கிறது! இதெல்லாம் இரண்டு நாள் வாழ்வு! தமிழோ என்றென்றைக்கும் நிலைத்து நின்று ஆட்சி செலுத்தும்.

மறுபடியும் மலைகளின் சம்பாஷணையில் கவனம் செலுத்தினேன்.

"அண்ணா! ஹரித்வாரத்தில் ஒரு பெரிய உற்சவம் நடந்ததாமே? பத்து லட்சம் பேர் வந்து கங்கையில் ஸ்நானம் செய்தார்களாமே? அவர்களில் முப்பது பேருக்கு உடனே மோட்சம் கிடைத்ததாமே?'' என்றது திருவண்ணாமலை.

"அது அவர்களுடைய தலையில் எழுத்து! இங்கே என்னுடைய அடிவாரத்துக்கு வந்து கூட்டத்தில் மிதிபட்டுச் சாக வேண்டும் என்று இருந்தது! நான் என்ன செய்யட்டும்?'' என்றது இமயமலை.

"இவ்வளவு சுலபத்தில் ஒரு முழுக்குப் போட்டுவிட்டு மோட்சம் அடையலாம் என்று நினைக்கிறார்களே? அவர்களைத் திருத்துவதற்கு வழியில்லையா?'' என்றது திருவண்ணாமலை.

"பார்த்தாயா, அண்ணா! இந்த அகம்பாவி நாஸ்திகம் பேசுகிறான்! உன்னுடைய அடிவாரத்திலே கங்கையில் குளித்தால் மோட்சம் கிட்டாதாமே?''

"அவன் நாஸ்திகம் பேசவில்லை, தம்பி! உண்மையைத்தான் சொல்கிறான். ரமண ரிஷி திருவண்ணாமலையிலேயே இருந்தும் மோட்சம் அடையவில்லையா?''

"ஓகோ! உன்னுடன் இவன் போட்டி போடுகிறான் போலிருக்கிறது. கார்த்திகை தீபத்தன்று இவனைச் சுற்றி ஜனங்கள் நின்று 'அண்ணாமலைக் கரோகரா!' என்று கூச்சல் போடுகிறார்களே! அதனால் மட்டும் மோட்சம் வந்துவிடுமா?'' என்றது விந்தியமலை.

"அதனாலும் மோட்சம் கிட்டாது. மனதில் பக்தியிருந்தால் கிட்டும்!'' என்றது திருவண்ணாமலை.

"அப்படியானால் உற்சவங்களினால் ஒன்றும் பயனில்லை என்று சொல்கிறாயா?''

தெற்கேயிருந்து பொதிகை மலை பேசிற்று :—"உற்சவங்களினால் நிச்சயம் பலன் உண்டு. ஹரித்வாரில் நடந்த உற்சவத்திற்கு என் பக்கத்திலேயிருந்து கூடச் சிலர் போனார்கள். அதுமாதிரியே காஷ்மீரத்திலிருந்து ராமேசுவரத்துக்கு யாத்திரை வருகிறார்கள். பாரத தேசம் ஒன்று என்பதை ஜனங்களுக்கு உணர்த்துவதற்கு இம்மாதிரி உற்சவங்கள் மிகவும் பயன் படுகின்றன!''

"இமயமலை அண்ணா! பொதிகையார் தத்துவம் பேசுகிறதைக் கேட்டாயா?''

"கேட்டேன்; அவர் சொல்லுவது உண்மைதான். எனக்குச் சில சமயம்

தெற்கே திரும்பிப் பார்க்கவே பிடிக்கிற தில்லை. அப்பா! இந்த மானிட ஜன்மங்கள் போடுகிற சண்டைகள்! எத்தனை கஷ்டப் பட்டாலுங்கூட இவர்களுக்குப் புத்தி வரவில்லை! என்ன செய்வது?" என்றது இமயமலை.

"அப்படி ரொம்பவும் தாபப்பட்டுக் கொள்ள வேண்டாம், அண்ணா! இந்த ஜனங்களுக்கும் கொஞ்சம் புத்தி வந்ததினால்தானே பிரிட்டிஷ் சிங்கத்தை இந்த நாட்டை விட்டுத் துரத்திவிட முடிந்தது?" என்றது திருவண்ணாமலை.

"அந்தப் புத்தி எத்தனை நாள் நீடித்திருக்குமென்று தான் எனக்குக் கவலையாயிருக்கிறது. இங்கே வடக்கே பார்க்கும் போது ஒரு பெரிய வெள்ளைக் கரடி உறுமிக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் காண்கிறேன். அங்கே மேற்கே பார்த்தால், ஒரு பிரம்மாண்டமான பருந்து வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது......"

"அண்ணா! பயமாயிருக்கிறதே! வெள்ளைக் கரடி உள்ளே வராமல் நீ கொஞ்சம் பார்த்துக்கொள்ளக் கூடாதா?"

"அதெல்லாம் என்னால் முடியாது, தம்பி! நான் எத்தனை பாதுகாத்தால் தான் என்ன? இந்தியா தேசத்து ஜனங்கள் புத்தியுடன் நடந்து கொள்ளாவிட்டால் பயனில்லை. இவர்கள் தங்கள் அற்ப துவேஷங்களை விட்டு ஒற்றுமையுடனிருக்க வேண்டும். சுயநலத்தை விட்டுப் பொது நலத்தைப் பேண வேண்டும். பணக்காரர்கள் தாங்கள் எப்போதும் பணக்காரர்களாயிருக்கவும் ஏழைகளை ஏழைகளாகவே வைத்திருக்கவும் எண்ணக் கூடாது. இப்படியெல்லாம் புத்தியுடனிருந்தால்தான் வெள்ளைக்கரடி வராமல் தடுக்க முடியும். ஆனால் இதைப் பற்றியெல்லாம் நாம் கவலைப்பட்டு என்ன பிரயோஜனம்! ரொம்ப நேரமாகி விட்டது. எல்லாரும் தூங்கப் போங்கள்!" என்றது இமயமலை.

"எது எப்படியானாலும், இந்த தேசத்தில் மகாத்மாக்களும் புண்ணிய புருஷர்களும் அவதரித்துக் கொண்டிருக்கும் வரையில் கவலைப்பட வேண்டியதில்லை" என்றது திருவண்ணாமலை.

"உண்மை! உண்மை!" என்றது பொதிகைமலை.

பிறகு, வான வெளியிலே நீடித்த நிசப்தம் நிலவியது.

கிழக்குக் கடற் காற்று "ஓம் சாந்தி! ஓம் சாந்தி!" என்று ஒலித்தது.

அட்டைப்பட விளக்கம்

அன்னமே! தூது போ!

வானி உறையும் மடவனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி' என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து.

காதலர்கள் என்றால் நளனையும் தமயந்தியையும் தான் சொல்ல வேண்டும். எப்படிப்பட்ட காதலர்கள்!

ஆனால் அவர்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் வந்தன!

வீரர்களுக் கெல்லாம் வீரனாய் அரசர்களுக் கெல்லாம் அரசனாய் விளங்கினான் நளன். அப்படிப்பட்ட சக்கரவர்த்தி நாடிழந்து, நகரிழந்து, வீடிழந்து காட்டில் ஓடி ஒளிய வேண்டியிருந்தது. இவற்றைவிடக் கொடுமை அவன் மதியிழந்ததுதான். ஆம், அவன் மதியிழக்க வில்லையென்றால் தன்னையே நம்பிவந்த அருமைத் தமயந்தியை அந்தப் பயங்கரக் காட்டில் தனியே விட்டுப் போவானா?

இந்த நிலையிலும், தமயந்தி கணவன்மேல் கொண்டிருந்த காதல் சற்றும் குறைய வில்லை. அப்படியானால் அவளுடைய காதல் எவ்வளவு உறுதியானது! எவ்வளவு ஆத்மார்த்தமானது!

ஆரம்பத்திலேயே நளச் சக்கரவர்த்தியிடம் தமயந்தி தன் உள்ளம் உயிர் எல்லாவற்றையும் அர்ப்பணித்து விட்டாள்! இல்லாவிடில் அன்னப் பறவையிடம் போய்த் தன் காதலை யெல்லாம் சொல்லுவாளா? 'அந்த நள மகாராஜனைச் சீக்கிரம் வந்து என்னை ஆட்கொள்ளச் சொல்!' என்று தூது அனுப்புவாளா?

அன்னப் பறவையைக் கூப்பிட்டுத் தூது அனுப்பும் காட்சி, தமயந்தியின் தூய பரிசுத்தமான காதலுக்கும் தியாகத்துக்கும் சின்னமாக விளங்குகிறது. தமயந்தியின் குணப் பண்பின் மலர்ச்சிக்குத் தகுந்த விளக்கம் தருகிறது.

ஆடல் பாடல்


கர்நாடகம்

பட்ட மரம் தளிர்க்கிறது!

மரத்தின் கிளைகளிலிருந்த இலைகள் எல்லாம் உலர்ந்து உதிர்ந்து விட்டன. நெடுநாளாக மறுபடியும் தளிர் விடவில்லை. நுனிக் கிளைகள் காய்ந்து கருகுகின்றன. பட்டைகள் உரிந்து பிளந்து விழுந்தன. மரம் அடியோடு பட்டுப்போய் விட்டது என்பதாகவே தோன்றியது.

இந்த நிலையில் திடீரென்று ஒருநாள் ஓரிடத்தில் தளிர் விட்டிருப்பதுபோல் காணப்பட்டது. ஆயினும் சந்தேகமாயிருந்தது. மறுநாள் இன்னும் இரண்டு மூன்று இடங்களில் தளிர் கண்டது. சில நாளைக்கெல்லாம் மரம் முழுதும் தளதளவென்று பசுந் தளிர்களால் மூடப்பட்டுக் கண்ணுக்கினிய காட்சி அளித்தது. கண்ணுக்கு மட்டுமா? பார்ப்பவர்களின் உள்ளங்களும் குளிர்ந்து மகிழ்ந்தன.

அநாதிகாலமாகத் தமிழகத்தில் ஓங்கி வளர்ந்து, கப்புங் கிளையுமாகப் பரவித் தழைத்து, கீதமினிய குயில்களுக்கும் கிள்ளைகளுக்கும் அடைக்கலம் தந்து, மக்களுக்கு இனிய நிழல் அளித்து வந்தது நாடகக்கலை என்னும் பழமையான மரம். சிலகாலமாக அந்த மரத்தில் கிளைகள் காய்ந்து கருகிப் பட்டுப் போய் வந்தன. மரம் மொட்டை மரமாக நிற்கத் தொடங்கியது. கலைஞர்கள் - ரஸிகர்களின் உள்ளங்கள் அதைப் பார்த்துப் பரிதவித்தன.



"கானல் நீர்" ஆசிரியர்
ஸ்ரீ விசுவநாதன்

அந்த நாடகக் கலை என்னும் விருட்சத்தில் இப்போது சிலகாலமாக மறுபடியும் தளிர்கள் விடுவதைக் காண்கிறோம். இது ஒருவேளை அந்திய காலத்தில் ஏற்படும் பொய்ச் செழிப்போ, அல்லது உண்மையான புத்துயிர்தானோ என்று இப்போது சொல்ல முடியவில்லை. ஆயினும் இப்போதைக்குப் புதிய தளிர்களைக் காணும்போது நம்முடைய உள்ளம் மகிழ்கின்றது. பட்ட மரம் தளிர்த்து உண்மையாகவே புத்துயிர் பெற்று வருகிறது என்று நம்புவதற்கு ஆசை உண்டாகிறது.


• • •

சமீப காலத்தில் என் கண்ணில் பட்ட சிற்சில தளிர்களைப்பற்றி இங்கே கொஞ்சம் விவரிக்க விரும்புகிறேன்.

சில மாதங்களுக்கு முன்பு சென்னை இந்திய வைத்தியக் கல்லூரியில் விழாக் கொண்டாடினார்கள். அந்த விழாவில் ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து ஒரு நாடகம் நடத்தினார்கள். ஆயுர்வேத - சித்த வைத்தியங்களுக்கும் நாடகக் கலைக்கும் என்ன சம்பந்தம் என்று முதலில் எனக்குத் திகைப்பாகத்தான் இருந்தது. ஆயினும் எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் காணும் நல்ல விஷயங்கள் அதிக மகிழ்ச்சியைத் தருவது இயற்கையேயல்லவா?

"சம்பந்தி வருகிறார்!" என்னும் குட்டி நாடகத்தை நடத்தினார்கள். ஹாஸ்ய ரஸம் ததும்பும் இந்த நாடகத்தை எழுதியவர் ஸ்ரீ சி. ஆர். மயிலேறு, எம். ஏ., என்னும் கலாசாலை ஆசிரியர் என்று அறிந்தேன்.

ஒரு பெண்ணுக்குக் கலியாண வயது நெருங்கி விடுகிறது. தாயும்தந்தையும் நல்ல வரன் கிடைக்கவேண்டுமே என்று கவலைப் படுகிறார்கள். ஒரு பட்டணத்துப் பையனுக்குப் புதல்வியை கொடுக்கலாமா என்று யோசிக்கிறார்கள். பெண்ணைப் பார்ப்பதற்கு அந்தப் பையனின் தகப்பனார் வருகிறதாகக் கடிதம் வரு



"கானல் நீர்" கதாநாயகிகள் வனஜா—கல்யாணி

கிறது. பட்டணத்திலிருந்து வருகிறார் என்பதை முன்னிட்டு வீட்டில் தடபுடலான ஏற்பாடுகள் நடக்கின்றன. ஒவ்வொருவராக யார், யாரோ வந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு மந்திரவாதி வருகிறான். வீட்டு அம்மாள் அவனுடைய வேஷத்தில் மயங்கி விடுகிறாள். பால்க்காரன் வந்து பாக்கி கேட்டு ரகளை பண்ணுகிறான். பிள்ளையாண்டான் வந்து கிரிக்கெட் மாச்சுக்குப் போகப் பணம் கேட்கிறான். கடைசியாக, ஒரு இன்ஷியூரன்ஸ் ஏஜெண்ட் வருகிறான். அவன் தான் சம்பந்தி என்பதாக எண்ணிக் கொண்டு உபசாரம் தடபுடல் படுகிறது. சம்பந்திக்காகச் செய்து வைத்திருந்த காப்பியை அவன் குடித்து விட்டுப் போகிறான். இப்படியெல்லாம் அலுத்துப் போயிருந்த சமயத்தில் சம்பந்தி வருகிறார். நடை உடைகளில் அவர் கிராமியமாயிருந்தபடியால் கிரகஸ்தர் அவரைத் தெரிந்து கொள்ளாமல் உதாசீனமாகப் பேசுகிறார். சம்பந்தி கோபித்துக் கொண்டு "உம்முடைய பெண்ணை ஒரு நாளும் என் பிள்ளைக்குக் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன்" என்று போய் விடுகிறார்!

இந்த நாடகத்தில் ஆரம்பமுதல் முடிவு வரையில் சபையோர்,—படித்தவர்களும் அறிவாளிகளும் அடங்கிய சபையோர்,—ஓயாமல் சிரித்துக் கொண்டே யிருந்தார்கள். நகைச்சுவையும் நடிப்புத் திறமையும் உயர்வா யிருந்தன. நடித்தவர்களின் பெயர்கள்கூட எனக்கு இப்போது நினைவில்லை. ஆனாலும் ஆயுர்வேத கலாசாலை இப்படிப்பட்ட நடிகர்களை உற்பத்தி செய்வதா யிருந்தால், ஆயுர்வேத வைத்திய முறைகள் எப்படி இருந்தாலும் பாதகமில்லை,—ஆயுர்வேத கலாசாலையைச் சர்க்கார் ஆதரிக்க வேண்டியதுதான் என்று தோன்றியது.

* * *

ஏப்ரல் மீ 13உ தமிழ் வருஷப் பிறப்பு தினத்தில் கோகலே மண்டபத்தில் ஓர் எம். ஐ. ஏ. என்று வழங்கும் இந்திய இளைஞர் சங்கத்தார் "கானல் நீர்" என்னும் நாடகத்தை நடத்தினார்கள். இந்த அழகான பெயர் என் மனதைக் கவர்ந்தபடியால் நாடகத்துக்குச் சென்றிருந்தேன். இந்த நாடகத்தில் நாம் சாதாரணமாய் நாடகங்களில் காணும் அங்கங்கள் ஒன்றுமில்லை. அழகழகான அலங்கார அரண்மனைகள் வானளாவி நிற்கும் வீதிகளையுடைய படுதாக்களும், காகித புஷ்பங்களால் ஆன நந்தவனக் காட்சிகளும், — இவை போன்றவை ஒன்றுமில்லை. பின்னால் ஒரு கறுப்புத் திரையைத் தொங்க விட்டு விட்டு, அரங்க மேடையில் அவ்வப்போது நடிகர்கள் வந்து நாடகத்தை நடத்தினார்கள். மேற்கூறிய நாடகமேடை சீன்கள் முதலியவை ஒன்றும் இல்லாததால் ஒரு குறையும் தென்படவில்லை. அவ்வளவு உயர்ந்த முறையில் தத்ரூபமாக நிகழ்ச்சிகள் தோன்றுமாறு நடித்தார்கள்.

"கானல் நீர்" என்னும் கதை—நாடகத்தை அமைத்தவர் ஸ்ரீ விசுவநாதன். கதைப் போக்கு உற்சாகமாக எல்லாரும் ஒப்புக் கொள்ளக்கூடியதல்ல. இப்போதெல்லாம் 'கெட்டுப்போன' பெண்களைக் கதாநாயகியாக வைத்த நாடகங்களும் சினிமாக்களும் அதிகமாகி வருகின்றன. ஜனங்கள் இத்தகைய கதாநாயகிகளை அதிகமாக விரும்புவதாகவும் தெரிகிறது. இதற்கு ஆதாரமான மனோ தத்துவம் என்ன என்பதை அறிவாளிகள் ஆராய்ச்சி செய்ய வேண்டும். மனிதர்களுக்கு மாறுதலில் விருப்பம் இருப்பது இயற்கை என்பார்கள். இந்த நாட்டின் மக்கள் பதிவிரதைகளின் சரித்திரங்களையே வெகு காலமாகக் கதைகளில் படித்தும், நாடகங்களிலும் சினிமாக்களிலும் பார்த்தும் அலுத்துப் போய் விட்டார்கள் போலும்! ஒழுக்கந் தவறி விழுந்த ஸ்திரீகளைக் கதாநாயகிகளாகக் காண்பதில் புதிய விருப்பம் பிறந்திருக்கிறது போலும்!......

"கானல் நீர்" என்னும் நாடகத்தில் கதாநாயகி ஒரு காலேஜ் மாணவி. அவள் மோகன் என்னும் காலேஜ் மாணவனைக் காதலிக்கிறாள். மோகனுக்கு ஏற்கெனவே கலியாணம் ஆகியிருக்கிறது. இதனால் சிக்கல்கள் ஏற்படுகின்றன. கதாநாயகி

யின் விதவையான தாயாருக்கு இரண்டு வீடுகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றை மோகன் குடும்பத்துக்கு வாடகைக்குக் கொடுக்கிறார்கள். பிறகு அதே வீட்டிற்கு இவர்களும் குடிபோகிறார்கள். கதாநாயகி கர்ப்பந்தரித்துக் குழந்தை பெறுகிறாள். பிறகு அவளை மோகன் கைவிடுகிறான். கடைசியில் ஆஸ்பத்திரியில் அவள் சாகுந்தறுவாயில் டாக்டர் மோகன் வந்து சந்திக்கிறான். குழந்தையையும் ஏற்றுக்கொள்ளுகிறான்.

நாடகத்தில் நடித்த இரு பெண்களும் கதாநாயகன் வேடம் தரித்தவரும் மிக நன்றாக நடித்தார்கள். நாடகங்களில் ஒரு நல்ல வேலைக்காரன் முன்வந்து குடும்பத்தைக் காப்பாற்ற உதவுவது ஒரு பழைய நாடக மரபு. அதன்படி இந்தக் கதையில் வேலைக்காரனாக வந்து நடித்தவர் எல்லாரையும் தூக்கியடிக்குமாறு நடித்தார்.

நாடக பாத்திரங்களின் குண சித்திரங்கள் அவர்களுடைய நடை உடை பாவனைகளின் மூலம் நன்கு வெளியாயின. நடிகர்கள் பளிச்சுப் பளிச்சென்று பேசினார்கள். நாடக நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி ஓடின.

புதிது புதிதாக நாடகம் போட்ட அமெச்சூர் நடிகர்கள் இவ்வளவு திறமை காட்டியதைப் பார்த்தபோது நம்முடைய நாட்டில் நடிப்புக் கலை வளர்ச்சி அடைவதற்கு எவ்வளவெல்லாம் வழிகள் இருக்கின்றன என்று வியந்து மகிழ்ந்தேன்.

மண்டோதரியும் இராவணனும் (பக்த ராவணன்)




காங்கிரஸ் மைதானத்தில் நாடகக் கழகத்தார் வெளியிட்ட திட்டத்தின்படி அநேகமாக நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. கடைசி நேரத்தில் மாற்றப்பட்ட ஒரு நிகழ்ச்சியும் நடந்தது. அதுதான் "பதி பக்தி" நாடகம். இதில் பழைய 'பாய்ஸ் கம்பெனி' நாடகங்களில் புகழ் பெற்ற நடிகர்களான ஸ்ரீ கே பி. கேசவன், ஸ்ரீ எம். வி மணி, ஸ்ரீ டி. எஸ். பாலையா ஆகியவர்கள் நடித்தார்கள்.

"பதி பக்தி" குடியினால் கெட்டழிந்த கதாநாயகனைக் கொண்ட கதை. மது விலக்கு அமுல் நடக்கும் இந்தக் காலத்துக்கு அவ்வளவாக அவசியமில்லாத, பொருத்தமில்லாத, கதைதான். ஆயினும் பழைய நாட்கள் எவ்வளவு மோசமாயிருந்தன என்பதை நினைவூட்டிக்கொள்ளச் சாதனமாயிருந்தது. அதோடு, தமிழ் நாட்டில் எவ்வளவு மகத்தான நடிப்புத் திறமையிருந்தும் பயனின்றிப் பாழாய்ப் போய்வருகிறது என்பதையும் நினைவூட்டிக்கொள்ள முடிந்தது.

ஸ்ரீ கே. பி. கேசவன் மேடையில் வெறி கொண்ட குடிகாரனாகத் தோன்றி நடிக்கும்போது பார்ப்பவர்களுக்கு உண்மையான பீதியையே உண்டாக்கி விடுகிறார். அவருடைய முகத்தில் நிமிஷத்துக்கு நிமிஷம், வினாடிக்கு வினாடி, தோன்றி மறையும் பாவங்கள் நம்மை அதிசயக் கடலில் மூழ்க அடித்து விடுகின்றன. அவ்வப்போது அவருடைய உதடுகள் துடிப்பதும், புருவங்கள் நெரிவதும், விழிகள் பிதுங்குவதும், நெற்றி சுருங்குவதும் ஆயிரமாயிரம் உணர்ச்சிகளை நம் மனதில் தூண்டி விடுகின்றன. அவருடைய பேச்சிலும் குரலிலும்தான் எத்தனை வித விதமான மாறுதல்கள்! அவருடைய பேச்சு சில சமயம் நம்மைக் குலுக்கிப் போடுகிறது. பேச்சைச் சில சமயம் அவர் சட்டென்று பாதியில் நிறுத்தும்போது நம்முடைய மூச்சே நின்றுவிடுகிறது!

ஸ்ரீ கே. பி. கேசவனிடம் காண்பது போன்ற பிரமாதமான நடிப்புத் திறமை சோபிக்க முடியாதபடி ஸினிமாத் தொழில் செய்து விட்டதே என்பதை நினைக்கும்போது வருத்தமாயும் கோபமாயும் இருக்கிறது.

'ஜட்ஜ் மணி' என்று பழைய நாடக மேடைகளில் புகழ் பெற்ற ஸ்ரீ எம். வி. மணி இந்த நாடகத்தில் துப்பறிபவனாக வந்து அபாரமான வேலைகளைச் செய்தார்.



கைலாசக் காட்சி (பக்த ராவணன்)

அவர் ஊமை வேலைக்காரனாக நடிக்கும் கட்டம் இப்போது நினைத்தாலும் என் கண் முன்னால் வந்து நிற்கிறது.

ஸ்ரீ டி. எஸ் பாலையாவின் புகழ் இப்போது வெள்ளித் திரை மூலம் எங்கும் பரவியிருப்பதால் இங்கே அவரைப்பற்றி எதுவும் சொல்லாமல் விடுகிறேன்.

* * *

நாடகக் கழகத்தின் ஆதரவில் நாடகங்கள் பலவும் சிறப்பாக நடந்த போதிலும், அந்தக் கழகத்தின் சரித்திரத்தில் ஒரு முக்கிய சம்பவம் 16வ யன்று நடைபெற்றதைச் சொல்ல வேண்டும். அன்று ஸ்ரீ வி. சி. கோபாலரத்தினம் கோஷ்டியார் "பக்த ராவணன்" என்னும் நாடகத்தை நடித்தார்கள். கனம் கோபால ரெட்டி தலைமை வகித்தார். தலைமை வகித்ததோடல்லாமல் நாடகத்தை மிக மிக அநுபவித்து விட்டார். அந்த உற்சாகத்தில் மெய்மறந்து ஒரு நல்ல வாக்கும் கொடுத்துவிட்டார்!

"நாடகத்துக்குத் தமாஷா வரியை எடுத்துவிடவேண்டியதுதான் என்று என் வரையில் தீர்மானித்து விட்டேன். முதல் மந்திரியும் மற்ற என் சகாக்களும் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, நாடகத்துக்குத் தமாஷா வரியை எடுத்து விட்டதாகவே நீங்கள் வைத்துக் கொள்ளலாம்" என்று சொன்னார்.

விஷயம் இவ்வளவுக்கு வந்துவிட்ட பிறகு, "ஆமாம்; தமாஷா வரி என்ன பிரமாத காரியம்? தமாஷா வரியை எடுத்து விட்டால் மட்டும் என்ன ஆகிவிடும்? அதைச் செய்ய வேண்டாமா? இதைச் செய்ய வேண்டாமா?" என்று நமக்குச் சொல்லத் தோன்றலாம். அதையும், இதையும், எதையும் செய்ய வேண்டியதுதான். தமாஷா வரி அவ்வளவு பிரமாதமான காரியமில்லை யென்பதையும் நாம் ஒப்புக்கொள்ளலாம்.

ஆனால் ஒரு விஷயம் சொல்லவேண்டும். பொது மக்களின் சார்பாகச் சர்க்காரிடம் ஒரு கோரிக்கையைச் சமர்ப்பித்தோம். அது காரியத்தில் நிறைவேறியது என்பது அவ்வளவு சாமான்யமான காரியமல்ல. அதிலும் பிடிவாதக்காரர் என்று பெயர் பெற்ற கனம் கோபால் ரெட்டி மனம் திரும்பி ஒரு கோரிக்கையை நிறைவேற்றினார் என்பது அற்ப சொற்பமானதல்ல. பெருமையுடன் கொண்டாட வேண்டிய காரியம். நாடகக் கலையை வளர்க்க வேண்டும் என்று தொடங்கி இருக்கும் முயற்சிக்கு இது ஒரு மிக நல்ல சகுனம் என்பதில் சந்தேகமே கிடையாது.

இனி, 'பக்த ராவண'னிடம் வருவோம். இராவணனிடம் வருவதென்றால் கொஞ்சம் தயங்கிப் பயந்துதான் வரவேண்டியிருக்கிறது. பக்தனாயிருந்த போதிலும் மிக முரட்டுப் பக்தன்; குருட்டுப் பக்தன்; வீரதீர பராக்கிரமசாலி; சிறந்த அறிவாளி; கடுந்தவம் செய்யும் மன உறுதி படைத்தவன். ஆயினும் அவ்வப்போது மதி மயங்கிக் 'கோணா மாணா' வென்று காரியம் செய்வான்.

பேன் எடுத்தாலும் எடுப்பான்; காதைக் கடித்தாலும் கடிப்பான். அவன் பேரில் தவறில்லை. எல்லாம் அந்தப் பாழாய்ப் போன மாயைசெய்யும் லீலைகள்தான்!



நாரத முனிவர் (பக்த ராவணன்)

இராம கதையின் பாத்திரங்களை வைத்துக்கொண்டு எத்தனை எத்தனையோ விநோதக் கதைகள் ஆதி காலத்திலிருந்து சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று, "பக்த ராவணன்" கதை. இராவணன் தன் தாயாரின் பூஜைக்காக ஆத்மலிங்கத்தைக் கொண்டு வருவதற்காகக் கைலாசத்துக்குப் போகிறான். சிவபெருமான் தம் அத்தியந்த பக்தனை நோக்கி "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்கிறார். அந்தச் சமயத்தில் இராவணன் மதியை மாயைவந்து மூடி விடுகிறது. "உன் பக்கத்திலுள்ள பார்வதியைக் கொடு!" என்று கேட்டுத் தொலைக்கிறான். பரம சிவன் பக்தனுக்காக எதையும் கொடுப்பவராயிற்றே? பார்வதியைக் கொடுத்து விடுகிறார்! கொஞ்ச தூரம் போனதும் பார்வதி பயங்கர துர்க்கா தேவியாகத் தோற்றம் கொள்கிறாள். இடை நடுவே நாரத முனிவர் தோன்றித் தமது மாயா ஜாலங்களைச் செய்கிறார். "சிவன் உன்னை ஏமாற்றி விட்டார்; பார்வதியைப் பாதாளத்தில் மயனுடைய அரண்மனையில் வைத்திருக்கிறார்" என்று ஜாடையாகத் தெரிவிக்கிறார். அங்கே மயனுடைய புத்திரி மண்டோதரி இராவணனுடைய வீரப் பிரதாபங்களைக் கேட்டு அவனிடம் காதல் கொண்டு தவம் செய்து வருகிறாள். மண்டோதரிக்கும் இராவணனுக்கும் திருமணம் நடைபெறுகிறது......

இந்தக் கதையும் சிலருக்குப் பிடிக்காமலிருக்கக்கூடும். "இராவணனாவது? பார்வதியைக் கேட்பதாவது?" என்பார்கள். ஆனால் எல்லாருக்கும் பிடிக்கக்கூடிய கதையாயிருக்க வேண்டுமானால் ஒரு வேளை நாடகம் நடத்தவே முடியாமற் போகலாம். "பக்த ராவணன்" கதை எப்படியானாலும் அதில் நாடக கட்டங்கள் பல அபூர்வமாய் அமைந்திருக்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும்.

நடிகர்களுக்குள்ளே இராவணனாகவும் நாரதராகவும் மண்டோதரியாகவும் மயனாகவும் நடித்தவர்கள் சபையின் கவனத்தைக் கவர்ந்தார்கள். ஸ்ரீ வி. சி. கோபாலரத்தினம் மிகப் பழமையான அமெச்சூர் நடிகர். ஆனால் நாடகக் கலையில் ஏற்பட்டிருக்கும் புதுமைகளையெல்லாம் கைக்கொண்டு புதிய நடிகர் எவரையும்பின்னிடச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவர் என்று அன்று நன்றாக வெளியாயிற்று. இராவணனுடைய மாத்ரு பக்தியையும் வீர பராக்கிரமத்தையும் கம்பீர முரட்டு சுபாவத்தையும் வெகு நன்றாக வெளிப்படுத்தி அபாரமாக நடித்தார். நாரதருக்கும் இராவணனுக்கும் அடிக்கடி நடந்த சம்பாஷணைகளில் சிலேடைகளும் சிலம்ப வித்தைகளும் பிரமாதமாயிருந்தன!

நடிப்பிலும் பேச்சிலும் பாட்டிலும் நாடகத்தில் முதற் பரிசு வாங்கியவர் நாரதராக நடித்த டாக்டர் ராமமூர்த்தி. தமிழ் நாட்டில் எவ்வளவு அபூர்வ கலைத் திறன் புதைந்து மறைந்து கிடக்கிறது என்பதற்கு டாக்டர் ராமமூர்த்தி அத்தாட்சியாக விளங்கினார்.

நாடகக் கழகம் என்பதாக ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டிராவிட்டால் ஸ்ரீ வி. சி. கோபாலரத்தினம் கோஷ்டியின் நாடகத்தை ஆயிரக்கணக்கான மக்கள் எப்படிக் கண்டு களித்திருக்க முடியும்?

"தமாஷா வரியை எடுத்து விடுகிறேன்; சரிதான். ஆனால் அத்துடன் நீங்கள் திருப்தி யடைந்து விடாமல் மேலும் மேலும் நாடகக் கலை வளர்வதற்கு உழைப்பீர்களா? அப்படி உழைப்பதாக எனக்கு வாக்குக் கொடுப்பீர்களா?" என்று கனம் கோபால் ரெட்டி கேட்டார். "ஆம்; இதோ வாக்குக் கொடுக்கிறேன்" என்றார் ஸ்ரீ வி. சி. கோபால ரத்தினம். இனி அந்த வாக்கை நிறைவேற்றி வைப்பதில் ஸ்ரீ கோபாலரத்தினம் கண்ணும் கருத்துமா யிருப்பார் என்று எதிர்பார்க்கிறேன். அதோடு, கனம் கோபால் ரெட்டியின் வாக்குத் தவறாமலும் பார்த்துக் கொள்வார் என்று நம்புகிறேன்.


ஹிமாலயா
புக்கே
டாய்லட் பௌடரின்
குளுமையான பரிமளத்தை
அனுபவியுங்கள்
நறுமணம் நிறைந்த நேர்த்தியான
ஹிமாலயா புக்கே டாய்லட் பௌ
டர் உங்கள் சருமத்திற்கு குளு
மையுடன் ஆறுதலளிக்கி
றது. மேலும் அதன் ரம்மி
யமான நீடித்து நிற்
கும் பரிமளம் உங்களு
க்கு மகிழ்ச்சியைத்
தருகிறது.
Himalaya Bouquet
TOILET POWDER
இன்னுமொரு நேர்த்தியான இராஸ்மிக் தயாரிப்பு
HBT. 2-172-55 TM



ராமகிருஷ்ண உபநிஷதம்

7. பெண்மையும் தாய்மையும்

பெண்ணாய்ப் பிறந்த எல்லோரும் தேவியினுடைய அம்சங்களே யன்றி வேறல்ல என்பது பகவான் ராமகிருஷ்ணர் அடிக்கடி வற்புறுத்திச் சொன்ன விஷயம்.

"தேவி தன்னைப் பல பகுதிகளாகச் செய்துகொண்டு நிற்கிறாள். அப்பகுதிகளே உன் பார்வைக்குள் வரும் ஸ்திரீகள் அனைவரும். ஆனபடியால் அவர்களில் யாரைக் கண்டாலும் 'அம்மன் எனக்குத் தரிசனம் கொடுக்கிறாள்' என்று மனதை ஒரு அம்மன் கோயிலுக்குள் புகும்போது நீ கொள்ளும் பாவத்தில் நிறுத்திக் கொள். நல்ல சுபாவம் படைத்தவராயினும் சரி, வேறு விதமானவராயினும் சரி, ஸ்திரீகள் அனைவரும் தேவியின் சொரூபம் என்று அறிந்து வணங்கு. உனக்கும் எனக்கும் அவர்களைப் பற்றித் தூஷிக்கவோ பாராட்டவோ என்ன உரிமை? உலகத்துக்குக் காரணமான தேவியின் விளையாட்டை நாம் அறிவோமா? வணங்குவதே நம்முடைய கடமை. பெண்ணாய்ப் பிறந்த எல்லோருமே தேவியின் சொரூபம். அலங்கரிக்கப்பட்ட அம்மன் விக்கிரகத்தைப் பூஜித்து வணங்குவதைப் போலவே உயிருள்ள இம்மூர்த்திகளையும் தேவி என்று பாவித்து வணங்கு."

• • •

"குருவே! பெண் குலத்தினிடம் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?" என்று ஒரு சீடர் பரமஹம்ஸரைக் கேட்டார்.

"ஆண்டவனுடைய அருள்பெற்று அவனுடைய தரிசனத்தை அடைந்தவன் பெண்களைப்பற்றிப் பயப்பட

வேண்டியதில்லை. பார்வைக்குள் விழும் ஸ்திரீகள் அனைவரும் உலக மாதாவின் விக்ரகங்களாகவே காண்பான். விசுவ ரூபம் கொண்ட தேவியே பல ஸ்திரீகளாகப் பிரிந்து தோற்றம் கொடுக்கிறாள் என்று எல்லா ஸ்திரீகளையும் பூஜிப்பான். தன்னைப் பெற்ற தாயை அன்புடன் வணங்குவது போல் அனைவரையும் வணங்குவான்."

"குருவே! காமவிகாரத்தை எப்படி வெல்வது? அதைச் சொல்லுங்கள்."

"அதைத்தான் சொல்லுகிறேன்; எந்த ஸ்திரீயைக் கண்டாலும் அவளை உன் தாயாகப் பாவித்துக் கொள். அவளுடைய பாதங்களை நோக்கி வணங்கு. அப்போது கெட்ட எண்ணங்கள் பறந்து போகும்."

• • •

புருஷனுடன் இருந்தாலும் கன்னி வாழ்க்கை வாழும் மங்கையர்களும் உண்டு. அவர்கள் ஈசுவரியின் பூரண அவதாரமே என்று சொல்லலாம்.

"தாந்திரீக முறையில் ஸ்திரீபக்தர்களுடன் கலந்து தேவியைச் சிலர் பூஜை செய்கிறார்களே, அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று ஒரு சீடர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கேட்டார். வங்காளத்திலும் வேறு சில பிராந்தியங்களிலும் 'சாக்த' சம்பிரதாயத்தைச் சிலர் பின்பற்றி வருகிறார்கள். அவர்களில் துன்மார்க்கர்களும் உண்டு. இதை உத்தேசித்தே சீடர் அந்தக் கேள்வியைக் கேட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அடியில் கண்ட எச்சரிக்கை செய்தார்.

"இந்த முறைகளில் அபாயம் உண்டு. சாதாரண மக்கள் இம்முறையை அனுசரித்தல் கூடாது. மிகவும் கடினமான முறையை எடுத்துக் கொண்டு பாபத்தில் விழ நேரிடும். ஒரு ஸ்திரீயை மகாசக்தியாகக் கொண்டு அவளைப் பூஜை செய்யும் வழி தாந்திரீக முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை மூன்று விதமாகச் செய்யலாம். பக்தன் தன்னை

சக்கரவர்த்தி
ராஜகோபாலாச்சாரியார்



மகனைப் பாவித்தல் ஒரு வழி. தாயை எவ்வாறு மகன் அன்புடன் நெருங்கிப் பூஜிப்பானோ அந்த அன்பை மேற்கொண்டு உபாசித்தல். மற்றொரு வழி, சகி அல்லது தோழியாகத் தன்னைப் பாவித்துக் கொண்டு அந்த பாவனையின் மூலமாகப் பூஜித்தல்.



"இந்த வழிகளில் மகனாக நின்று மனதை அந்நிலையில் பரவசப் படுத்திப் பெற்ற தாயிடம் குழந்தை அன்பு செய்வது போல் தேவியைப் பூஜித்தலே மேலான வழி. தோழி நிலையை அடைந்து பூஜிப்பதும் நல்லதே.

"மூன்றாவது முறையொன்றும் உண்டு. அதுதான் தலைவன் - தலைவி பாவனை. இது மிகவும் அபாயமான முறை. அதைப் பின்பற்றல் கூடாது."

அர்ச்சாவதாரம் அல்லது விக்கிரகத்தை வைத்துப் பூஜித்தலைப்போல் உடலும் உயிரும் கொண்ட பெண்ணைத் தேவியாகப் பாவித்து ரகசியமாகப் பூஜை செய்யும் முறை தாந்திரிகத்தில் சொல்லப்படுகிறது. இதைப் பரமஹம்ஸர் வேண்டாம் என்கிறார். தம் சொந்த அனுபவத்தையும் சொல்லி இருக்கிறார். "இரண்டு வருஷங்கள் நான் இந்தத் தாந்திரிக சாதனத்தில் கழித்திருக்கிறேன். சகி பாவனை, குழந்தை பாவனை ஆகிய இரண்டும் அப்பியசித்தேன். என் சுபாவம் குழந்தை பாவனைக்கு இசைந்த சுபாவம். தேவியைத் தலைவன் பாவனையை மேற்கொண்டு நான் உபாசித்ததில்லை. யாருக்குமே அது கடினமான முறை, வேண்டாம் என்பேன்."

• • •

"நீங்கள் ஏன் பத்தினியுடன் இல்லற முறையில் வாழவில்லை?" என்று ஒருவர் கேட்க, பகவான் ராமகிருஷ்ணர் ஒரு கதையைச் சொன்னார்.

"நீ கேட்ட கேள்விக்கு ஒரு கதையைச் சொல்லுகிறேன். ஒரு நாள் பரமசிவனுடைய குழந்தையாகிய கணேசன் ஒரு பூனையை நகத்தால் கீறிக் காயம் பண்ணிவிட்டான். பிறகு தாயிடம் திரும்பிப் போனபோது அவளுடைய கன்னத்தில் ஒருகாயம் இருக்கக் கண்டு 'அம்மா, இதென்ன? உன்னை யார் காயப்படுத்தினது?' என்று கேட்டான்.

அதற்குப் பார்வதி, 'மகனே, இது நீ செய்த வேலையல்லவோ? உன் நகத்தினால் கீறின காயம் இது' என்றாள்.

'இதென்ன விபரீதம்? நான் எப்போது உன்னைக் கீறினேன், அம்மா?' என்றான் கணேசன்.


'கண்மணி! நீ பூனையைத் தொந்தரவு செய்து கீறினதை மறந்துவிட்டாயா?' என்றாள் கௌரி.

'ஆமாம்; கீறினேன். அது உன் கன்னத்துக்கு எப்படி வந்தது?' என்று கணேசன் கேட்டான்.

'மகனே, உலகமெல்லாம் என் உடல்தானே? யாருக்கு என்ன காயமுண்டானாலும் அது எனக்கு உண்டான காயமே' என்றாள் தாய்.

"இதற்குமேல் கணேசன் யாரை விவாகம் செய்துகொள்ள முடியும்? எந்தப் பெண்ணைக் கண்டாலும் அவளைத் தன் தாயாகவே கண்டான். பெண்மை அனைத்தும் அவனுக்குத் தாய்மையாகவே போய் விட்டது. விவாகம் செய்து கொள்ளும் எண்ணத்தையே ஒழித்தான். என் கண்ணுக்கும் அப்படியே எந்த ஸ்திரீயும் பார்வதியம்மனாகவே தோற்றம் தருகிறாள். நான் என்ன செய்வது!" என்றார் பரமஹம்ஸர்.





மேலே உள்ள கோலத்தைப் பென்ஸிலால் ஒரே தடவையில் கையை எடுக்காமலும் கோட்டின் மீது மறுமுறை கோடிழுக்காமலும் வரைய வேண்டும். முடியுமா பாருங்கள்.

★

ஒரு மனிதன் தன்னுடைய ஆயுள் காலத்துக்குள் மொத்தம் எவ்வளவு தண்ணீர் குடிக்கிறான் தெரியுமா? ௨,1900 காலன் தண்ணீர் சாப்பிடுகிறான். இதில் மூன்றில் ஒரு பங்கு தண்ணீராகவும், மூன்றில் இரண்டு பங்கு ஆகாரத்தின் மூலமாகவும், பால் முதலிய பானங்கள் மூலமாகவும் சாப்பிடுகிறான்.



★ ★ ★

1749ம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் ஒரு ஆடுகூடக் கிடையாது. 1750ம் வருஷம் தான் அந்த தேசத்தில் முதல் முதலாக ௨௯ ஆடுகள் கொண்டு வரப்பட்டன. இப்பொழுது உலகத்தில் அதிகமான கம்பளி உற்பத்தி செய்யும் நாடு ஆஸ்திரேலியா தான்.





தபால் காரர் போஸ்டாபீஸிலிருந்து கிளம்பி எல்லா வீடுகளுக்கும் தபால்பட்டுவாடா செய்கிறர். ஒருமுறை போன வழியில் மறுமுறை வருவதில்லை. போன வழியைக் கண்டு பிடியுங்கள்



"டேய் மணி! மொத்தம் எத்தனை பழம் சாப்பிட்டிருப்பாய்?"

"தெரியல்லேடா! நான்தான் கணக்கில் கொஞ்சம் 'வீக்' ஆச்சே?"



5. சிங்கார மாளிகை

துன்மந்திரியாகிய ஸவியிடம் ஜனங்களுக்கு எப்போதும் அளவு கடந்த வெறுப்பு இருந்தது. ஆகையால் அவனுக்கு உதவி புரிய யாரும் முன் வரவில்லை. நூருதீன் அவனைச் சேற்றில் தள்ளி நன்றாக உதைத்து விட்டு, அழகியை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். சந்தையில் கூடியிருந்த ஜனங்கள் மந்திரி அடிபட்டது கண்டு ஆனந்தமடைந்து நூருதீனைப் பாராட்டி ஆரவாரம் செய்தனர்.

நூருதீனும் ஜனக் கூட்டமும் சந்தையை விட்டுச் சென்ற பிறகு மந்திரி ஸவி எழுந்திருந்தான். அவனுடைய உடம்பெல்லாம் காயமாக இருந்தது. முகமெல்லாம் சேறும் புழுதியும் படிந்திருந்தது. ஒரு சிறுவன் தன்னை ஜனங்கள் முன் அவமானப் படுத்தி விட்டானே என்று அவன் மனம் வருந்தினான். எழுந்து நேராக அரண்

மனைக்குச் சென்றான். அங்கு அரசனைக் கண்டு உரத்த குரலில் முறையிட்டான்.

நடந்ததை நடந்தபடி கூறாமல் அரசனுக்குத் தன்மீது இரக்கம் ஏற்படும் முறையில் சம்பவங்களை ஜோடித்துக் கூறினான்: "அரசே, காலஞ்சென்ற மந்திரி காஹன் உயிரோடு இருக்கும்போது தாங்கள் பத்தாயிரம்பொன்னை அவனிடம் கொடுத்து ஒரு அழகிய அடிமைப் பெண்ணை வாங்கிவரச் சொன்னது ஞாபகம் இருக்கும். தங்கள் பணத்தைக் கொண்டு காஹன் வாங்கிய பெண்தான் இந்தப் பாரசீகப் பேரழகி. இவ்வளவு அழகு வாய்ந்த பெண்ணை அடையத் தங்களுக்குத் தகுதி இல்லை என்று நினைத்துத்தானோ என்னவோ, அவன் அவளைத் தன் மகன் நூருடீனுக்குப் பரிசாக அளித்தான். நூருடீன் தன் தகப்பன் வைத்துவிட்டுப்போன ஏராளமான பணத்தை வீண் செலவு செய்து தொலைத்துவிட்டான். இனிமேல் செலவு செய்ய அவனிடம் பணம் இல்லை. ஆகையால் இந்தப் பெண்ணை விற்றுப் பணம் சம்பாதிக்க எண்ணினான். இதைப் பார்த்த நான் நூருடீனை அணுகி நயமாகப் பேசினேன். அவனுடைய வியாபாரி கேட்ட நாலாயிரம் பொன் தருவதாகச் சொன்னேன். அழகியை வாங்கித் தங்களுக்கு அளிக்கலாமென்று நான் கருதினேன். இந்த யோசனையை நூருடீன் புறக்கணித்தான். அது மட்டும் அல்ல; என்மீது பாய்ந்து, என்னைக் குதிரையிலிருந்து தள்ளி அவமானப் படுத்தி விட்டான். தாங்கள் நீதி வழங்க வேண்டும். இந்த துஷ்டனைத் தண்டிக்க வேண்டும்."

நயவஞ்சகமாக மந்திரி ஸவி கூறிய இந்தக் கதையை அரசன் நம்பிவிட்டான். தனக்குச் சேரவேண்டிய பெண்ணை அபகரித்துக்கொண்ட நூருடீனைத் தண்டிப்பதென்று அவன் முடிவு செய்தான். உடனே நாற்பது போர் வீரர்களை வரவழைத்து, நூருடீன் வீட்டைக் கொள்ளையடித்துக் கொளுத்தி விட்டு, அவனையும் அவனுடைய மனைவியையும் தன் முன் இழுத்துக்கொண்டு வந்து நிறுத்தும்படி உத்தரவிட்டான். இந்தச் செய்தி உடனே நூருடீனுக்கு எட்டியது. இனிமேல் அங்கு இருந்தால் ஆபத்து என்பதை அவன் உணர்ந்தான். உடனே அவன் அழகியை அழைத்துக் கொண்டு யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறினான். ஜன நடமாட்டம் இல்லாத சந்துகள் வழியாக இருவரும் வேகமாக நடந்து சென்று கடைசியில் ஒரு நதிக்கரையை அடைந்தனர். அங்கே ஒரு படகு புறப்படத் தயாராயிருந்தது. அதில் ஏறிக் கொண்டனர். அந்தப் படகும் உடனே புறப்பட்டது. அது பாக்தாத் நகரை நோக்கிச் செல்லுகிறது என்பதை அறிந்து நூருடீன் சந்தோஷமடைந்தான்.

நூருடீனும் பேரழகியும் தப்பிச் சென்ற பிறகு அரசனின் போர் வீரர்கள் நூருடீனின் வீட்டுக்கு வந்தனர். உடனே உள்ளே சென்று நூருடீனையும் அவனுடைய மனைவியையும் இழுத்துக்கொண்டு வரும்படி அவர்களுடைய தலைவன் உத்தரவிட்டான். அவர்கள் ஒவ்வொரு அறையாகத் தேடிப் பார்த்தார்கள். நூருடீனையும் காணோம்; அவன் மனைவியையும் காணோம். அவர்கள் அண்டை வீட்டுக்காரர்களைக் கேட்டுப் பார்த்தார்கள். ஓடிப் போனவர்களைப் பற்றி எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. ஏமாற்றம் அடைந்த வீரர்






தலைவன் நாருடீனின் வீட்டைக் கொளுத்தித் தரை மட்டமாக்கும்படி தனது போர் வீரர்களுக்கு உத்திர விட்டு விட்டு ராஜ சபைக்குச் சென்றான். அரசனிடம் அங்கு நடந்ததையெல்லாம் கூறினான். அரசன் அதைக் கேட்டு மிக்க ஆத்திரம் அடைந்தான். நாருடீனையோ அல்லது பேரழகியையோ பிடித்துத் தருபவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசளிப்பதாக அறிவித்தான்.

ராஜ சபையில் இவ்வாறு அமர்க்களம் நடந்து கொண்டிருந்த பொழுது நாருடீனும் பேரழகியும் பத்திரமாக பாக்தாத் நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தனர். அங்கே எங்கு தங்குவதென்பது தெரியாமல் ஒரு நதிக்கரை வழியே சென்றனர். அங்கே ஓர் அழகான நந்தவனம் காணப்பட்டது. அவர்கள் அதற்குள் புகுந்தனர். அப்போது சூரிய அஸ்தமனமாகிவிட்டது. இருட்டில் ஊருக்குள் செல்ல முடியாது. ஆகையால் நந்தவனத்தில் ஒரு மூலையில் படுத்துக் கொள்வது என்று தீர்மானித்தனர். அங்கே ஒரு நீர்ச்சுனை தண்ணீரை அழகாகப் பொழிந்து கொண்டிருந்தது. நந்தவனக் காற்றும், நீர்ச்சுனையினால் ஏற்பட்ட குளிர்ச்சியும் மிகமிக ரம்மியமாயிருந்தது. சுனை நீரை அள்ளிக் குடித்து விட்டு இருவரும் படுத்தார்கள்.

அந்த நந்தவனம் மூஸ்லிம் மதகுருவான காலிப் ஹாரூனுக்குச் சொந்தமானது. அதற்கு மத்தியில் ஓர் அழகிய மாளிகை இருந்தது. அதற்குச் சிங்கார மாளிகை என்று பெயர்.

அந்த மாளிகைச் சுவர்களை அழகிய ஓவியங்கள் அலங்கரித்தன. புகழ் பெற்ற அந்தச் சித்திரங்களின் அழகைப் பிரகாசப்படுத்த எட்டு மெழுகுவர்த்திக் குளோப் விளக்குகள் இருந்தன. மாலை வேளையில் காலிப் அந்த மாளிகைக்கு வரும் போது தான் அவ்விளக்குகள் ஏற்றப்படுவது வழக்கம்.

நாருடீனும் அழகியும் அன்று நந்தவனத்தில் தூங்கிக் கொண்டிருந்த போது காலிப் அங்கு வரவில்லை. ஆகையால் சிங்கார மாளிகை இருட்டாகவே இருந்தது. அந்த மாளிகையின் காவற்காரனை ஷேக் இப்ராஹிம் தன் சொந்தக் காரியமாக வெளியே சென்றிருந்தான். அவன் திரும்பி வந்த பொழுது தலை வாயிலில் உள்ள மஞ்சத்தில் இருவர் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தான். அவர்களை எழுப்பித் துரத்துவது என்று முடிவு செய்தான். அருகில் சென்று அவர்கள் முகத்தை மூடிக்கொண்டிருந்த துணியை மெதுவாக அகற்றி விட்டுப் பார்த்தான். அவ்வளவு தான்! — அவன் அப்படியே பிரமித்துப் போய் விட்டான். தான் காண்பது கனவோ, நனவோ என்று அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. (தொடரும்)



இந்தப் படத்தில் உள்ள பல வட்டங்களில் இலக்கங்களைப் புகுத்த வேண்டும். எந்த நேர் கோட்டில் உள்ள நான்கு இலக்கங்களைக் கூட்டினாலும் மொத்தம் 34 வர வேண்டும்.

சென்ற வார விடு கதைகளுக்கு விடை :— (1) நண்டு. (2) பசுவின் மடி.

உணவை மறந்தார்!

பிரபல விஞ்ஞானியான நியூடன் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டால் தம்மையே மறந்து விடுவாராம். ஒரு முறை அவர் தம் நண்பர் ஒருவரை விருந்துண்ண அழைத்திருந்தார். நண்பரும் அந்த அழைப்புக்கிணங்க அவருடைய வீட்டுக்குப் போனார். அப்போது நியூடன் ஒரு முக்கியமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். ஆகையால் அவர் தம் நண்பரைப் பார்த்து, "நீங்கள் சாப்பிட்டு விட்டுப் போங்கள். நான் அப்புறம் சாப்பிட்டுக் கொள்ளுகிறேன்" என்றார். நண்பரும் அதற்கு இசைந்தார். அவருக்குப் பசி அதிகமாயிருந்தது. அவர் முதலில் தமக்குக் கொண்டு வந்து வைக்கப்பட்ட உணவைச் சாப்பிட்டார். பசி அடங்காததால் நியூடனுக்காக மற்றொரு தட்டில் கொண்டு வந்து வைக்கப் பட்டிருந்த உணவையும் சாப்பிட்டார். பிறகு நியூடனிடம் விடைபெற்றுக் கொண்டு போய் விட்டார்.

வெகு நேரம் கழிந்தது. நியூடன் தம் ஆராய்ச்சியை முடித்து விட்டுச் சாப்பிடுவதற்காகப் போனார். மேஜையில் தமக்காக வைக்கப்பட்டிருந்த உணவுத் தட்டு காலியாக இருந்தது. அவர் சற்று நேரம் யோசித்தார். "அடேடே, நான் சாப்பிட்டு விட்டேன் போலிருக்கிறதே!—மறந்தே போய் விட்டேனே!" என்று சொல்லிவிட்டு சமையல்காரனை அழைத்து, "நான் தான் சாப்பிட்டு விட்டேனே, நீ ஏன் தட்டை இன்னும் எடுத்துக் கொண்டு போகவில்லை?" என்று கேட்டார்.



சமையல்காரன் திகைத்து விட்டு, "தாங்கள் சாப்பிடவே இல்லையே, எஜமான்!" என்றான்.

நியூடனுக்கு தான் சாப்பிடவில்லை என்ற உண்மை அப்போதுதான் விளங்கியது.

கடம் கிருஷ்ணய்யர்

கோட்டு வாத்தியம் ஸ்ரீ துரையப்ப பாகவதர்

ஸ்ரீ கிருஷ்ணய்யர் கடம் வாசித்த எல்லாக் கச்சேரிகளிலும் அவரை முன் விட்டுத்தான் மற்ற தாள பக்க வாத்தியங்களாகிய மிருதங்கம், கஞ்சிரா ஆகியவற்றை மற்ற வித்வான்கள் வாசித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் மைலாட்டூர் கிருஷ்ணய்யர், அழக நம்பியாப் பிள்ளை, தஞ்சாவூர் பக்கிரி ஆகிய மூவரும் முக்கியமானவர்கள். அவர்கள் ஏராளமான கச்சேரிகளுக்கு வாசித்திருக்கிறார்கள். பிற்காலத்தில் நல்ல கியாதியுடன் விளங்கிய புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை ஆதியில் கடம் வாசிக்க ஆரம்பித்தார். ஸ்ரீ கிருஷ்ணய்யரின் வாசிப்பை அவர் ஒருமுறை கேட்ட பிறகு இனி அந்த வாத்தியத்தில் தாம் சிரமப்படுவதில் பயனில்லை என்று கஞ்சிரா, மிருதங்கம் ஆகிய வாத்தியங்களைச் சாதகம் செய்ய ஆரம்பித்தார். சமீபத்தில் காலஞ்சென்ற தஞ்சாவூர் மிருதங்கம் வைத்தியநாதய்யர் சிறு வயதில் கிருஷ்ணய்யர் வாசிப்பைக் கேட்டு மட்டற்ற பிரமையை அடைந்து, அதில் ஆசையுண்டாகிக் கடவாத்தியம் சாதகம் செய்ய ஆரம்பித்தார். அந்த நாளில் அவரை எல்லோரும் "கடம் வைத்தா" என்று அழைப்பார்கள். இப்படி இரண்டு மூன்று வருஷங்கள் வாசித்து, பிறகு மிருதங்கம் சாதகம் செய்து பிற்காலத்தில் கீர்த்தி யடைந்தார். இப்படியாக கடவாத்தியத்தில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை யென்று நிலை நாட்டிய ஸ்ரீ கிருஷ்ணய்யர் கட வாத்திய வாசிப்பில் கையாண்ட சில முக்கியமான அம்சங்களைக் கவனிக்கலாம்.

ஸ்ரீ கிருஷ்ணய்யர் மற்றவர்களைப் போலின்றி, இடது கால்மீது வலது காலைப் போட்டுக் கொண்டு பத்மாசனத்தில் அமர்ந்து வாசித்தபடியால், அவருடைய வலது கால் மேலேயே கடவாத்தியம் அமர்ந்திருக்கும். நாத வின்னியாசங்களுக்கு ஏற்றவாறு வலது பாதத்தின் உதவியால் மேற்படி வாத்தியமானது முன்னும் பின்னுமாக இவருடைய மார்பு வரை போய் ஒட்டுவதும், திறக்கப்படுவதும், கவிழுவதுமான பற்பல நிலைகளில் புரண்டு கொண்டே யிருக்கும். பானையை மார்போடு அணைத்தும், பிரித்தும், இடது கையால் 'கும், கும், கும்' மென்று கொடுக்கப்படும் குமக்காரம் இணையற்றது. கடவாத்தியத்திற்கென்றே ஏற்பட்ட சில சொற்களை இவர் கொடுக்கும்போது அவை தனியான சோபையுடன் பேசும். பானையின் அடிப்பாகம், நடுப்பாகம், மேற்புறம் ஆகிய இடங்களில் இவர் விதம் விதமான நாதங்களுடன் சொற்கட்டுகளை அமைத்து வாசிக்கையில் நாதப்பிரம்மம் அங்கு தாண்டவமாடும். கையின் கட்டை விரல்களைப் பின்புறமாக வளைத்து அந்த விரலின் நடுப்பாகத்தால் பானையின் மேற்புறத்தைத் தட்டிக் 'கண கண கண' வென்ற நாதத்தை உண்டாக்கி அவர் வாசிக்கும்போது நல்ல வெண்கல மணியின் ஓசையும் அதற்கு ஈடாகாது. ஏக காலத்தில் பத்து விரல்களாலும் அநேக திருதகாலச் சொற்களடங்கிய வேகமான புரட்டல்களை அவர் நாத வின்னியாசங்களுடன் சளைக்காமல் வாசிக்கும் போது, கேட்போர் மெய் மறப்பார்கள். வித்துவான்கள் திகைத்துப் போவார்கள். பாடகர்கள் எந்தக் காலத்தில் அமைத்துப் பாடினாலும் அதிலிருந்து இம்மியளவும் இழுப்பு ஓட்டம் என்பது இல்லாமல் நிர்ணயமான காலப் பிரமாணத்துடன் அவர் வாசித்தபடியால், அதே போல் சற்றும் வழுவாத லயஞானிகளாகிய பாடகர்கள் அவருடைய வாசிப்பைப் பெரிதும் விரும்பினார்கள். தாம் பாடும் உருப்படிகளுடைய கால அமைப்பின் நிர்ணயமில்லாத சில பாடகர்கள், தாம் எடுத்துக் கொண்ட காலத்திலிருந்து ஓடவோ இழுக்கவோ முடியாத நிலைமையில் ஸ்ரீ கிருஷ்ணய்யரிடம் சிக்கிக் கொள்வதும் உண்டு.


இவருடைய தனி ஆவர்த்தங்கள் பத்து நிமிஷங்களுக்குக் குறையாமலும் நாற்பத்தைந்து நிமிஷங்கள் வரையிலும் நீடிக்கும். இதர தாள பக்க வாத்தியங்கள் சேரும்போது, அவர்களை முதலில் தனி ஆவர்த்தம் வாசிக்கும்படி செய்த பிறகுதான் இவர் தனி ஆவர்த்தம் வாசிப்பார். சவுக்க காலப் பல்லவி பாடிய பிறகு இவர் வாசிக்கும் தனி ஆவர்த்தங்கள் அரை மணி முக்கால் மணி வரை நடக்கும். இவருடைய கல்பனைகள் லகுவில் எல்லோருக்கும் தெரியும்படியாயும், படிப்

படியாயும், அடுக்கடுக்காயும், ஒன்றின்மேல் ஒன்றாக சமுத்திர அலைகளைப்போல் விசித்திரமான நாத ஜாலங்களுடனும், சொற் கட்டுகளுடனும் அமைந்து விறுவிறுப்பாய் வந்து கொண்டிருக்கும். ஆகையால் கேட்பவர்களுக்கு நேரமாவதே தெரியாது. இதைத் தவிர, தாளத்தில் உட்புகுந்து அநேக விதமான சொற்களையும் 'தகிங்கிணதொம்' வகையறுக்களையும் சாதி வின்யாஸங்களையும் அபரிமிதமாகக் கையாண்டு சில விஷமமோராக்களையும் வைத்து முடிக்கையில் லய ஞானிகளும் திணறி விடுவார்கள்.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் பானையை மடியில் சுழற்றுவது, வாசிக்கும்போது பானையை உயரத் தூக்கி எறிந்து பிடிப்பது, எறியப்பட்ட பானை திரும்பி வருவதற்குள் கைகளால் கோர்வை வைக்கப்படும் பல கையில் மற்ற சொற்களை வாசிப்பது, இரண்டு கைகளாலும் பானையைச் சுழற்றி உருட்டிக்கொண்டே வருவது, ஒரே கையில் பானையைப் பந்து போல் உருட்டுவது, ஒரே கையால் தலையைச் சுற்றிப் பானையைக் கொண்டு வருவது—முதலிய விசித்திரமான சாமர்த்தியச் செய்கைகளைத் தாளம் தவறாமலும் பானை நழுவாமலும் கற்றோரும் மற்றோரும் பிரமிக்கும்படி வாசிப்பார்.

• • •

ஏற்கெனவே நான் குறிப்பிட்டிருப்பது போல, மிருதங்கம் நாராயணசாமி அப்பா மெய்மறந்து தாமே பாடிக்கொண்டு வாசிப்பதைக் கேட்ட பிறகு தாமும் அம்மாதிரி பாடிக்கொண்டே வாசிக்க வேண்டும் என்று எண்ணி அதற்கு வேண்டிய சாதகங்களைச் செய்து, யாவரும் பிரமிக்கும் வண்ணம் சாதித்துக் காட்டினார். முருகனிடம் அளவற்ற பக்தி பூண்ட இவர் அநேக நடைகளையும் சந்தங்களையும் விசித்திரமான தாளங்களையும் கொண்ட அருணகிரியாரின் திருப்புகழ்களைப் பாடிக் கொண்டே அநாயாசமாய் வாசிப்பார். சதுரச்ர நடையில் உள்ள ஒரு திருப்புகழைப் பாடிக் கொண்டே தாளத்தில் உள்ள நடைகளின் பேதங்களை கட வாத்தியத்தில் ஒவ்வொன்றாகக் கொடுத்து வாசித்துக் கொண்டே வருவார். இவருடைய சாரீரம் அதிகப் பேச்சில்லாத கட்டை சாரீரம்தான். ஆனால்,



சுருதி லீனமாயும் கணிப்பாகவும் பாவப் பூர்த்தியுடனும் இருந்தபடியால் அவர் பாட்டை எல்லோரும் விரும்பினர். அருணாசலக் கவிராயரின் ஏராளமான ராமாயணக் கீர்த்தனைகள் இவருக்குப் பாடம் உண்டு. அவற்றைப் பாடிக் கொண்டே வாசிப்பார். 'ஏன் பள்ளி கொண்டீர் ஐயா?' 'எனக்குன் இருபதம்' 'தேவனே மனிதன் தானோ?' 'அந்த ராம சௌந்தரியம்' 'கண்டானே ஸ்வாமி மோதிரம்' 'ராகவன் பகை ராவணா ஒருகாலும்' 'என்னையும் வரச் சொன்னாரோ' 'ராமனைக் கண்ணாரக் கண்டானே' 'பாய்ந்தானே அனுமந்தன்' 'சித்தப்பா நீதான்' 'ஐயா, ராவணா' 'வந்தான் வந்தான் பரதா' 'மகுடாபிஷேகம் கொண்டானே' முதலிய கீர்த்தனைகளை அவர் பாடிக் கொண்டே வாசிக்கக் கேட்டவர்கள் பாக்கியசாலிகள். சுருட்டி ராகத்தில் பாடப்படும் 'பாய்ந்தானே அனுமந்தன்' என்ற கீர்த்தனையின் மூன்றாவது சரணத்தில் வரும் நீர்க்க மலையை ஒரு கையாலே தூக்கிப் பந்தாடி என்ற இடத்தை அவர் பாடும்போது அவருடைய வலக்கரத்தில் அந்தப் பானையானது பந்து போல் உருளும் காட்சியை யார்தான் மறக்க முடியும்? இதேபோல் ஒவ்வொரு கீர்த்தனையின் சொல் வின்யாசங்கள், அலங்காரங்கள் எல்லாம் பானையிலும் பேசும். ஆகவே இவர் வாசிக்கும் கச்சேரிகளில் ராகம், பல்லவி முடிந்தவுடன் சில உருப்படிகளைப் பாடிக் கொண்டே வாசிக்க வேண்டுமென்று எல்லா ரசிகர்களும் வற்புறுத்துவார்கள். ஆகையால் அதற்குப் பாடகர்களும் இணங்கி இவருக்குச் சுமார் அரை மணி நேரமாவது ஒதுக்கித் தருவார்கள். இப்படியாக இவர் வாசிக்கும் கச்சேரிகளில் சுமார் ஒன்றரை மணி எடுத்துக் கொண்டு விடுவார். ஆகவே எல்லாப் பாடகர்களும் இவரை ஒரு பக்க வாத்தியக்காரர் என்று எண்ணாமல் தங்களில் ஒருவராகவே எண்ணி மதித்து வந்தார்கள். இவருடைய புகழ் சென்னை போன்ற பெரிய பட்டணங்களிலும் செட்டிநாட்டிலும், புதுக்கோட்டை, ராமநாதபுரம் போன்ற சமஸ்தானங்களிலும், வெகு சீக்கிரத்தில் பரவிற்று. எல்லாப் பாடகர்களும் இவரைப் பெரிதும் விரும்பியபடியால் ஏராளமான கச்சேரிகள் கிடைத்து வந்தன. உற்சவங்களிலும் கல்யாணங்களிலும் சபைகளிலும் நடந்த எல்லாக் கச்சேரிகளுக்கும் இவர் அழைக்கப்பட்டார். முகூர்த்த காலங்களில் தேதி தவறாமல் கச்சேரிகள் கிடைத்தன.

சில அன்பர்கள் இவருக்காக முகூர்த்தத் தேதியையே மாற்றி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றிலிருந்து கிருஷ்ணய்யரின் வாசிப்பில் மகா ஜனங்களுக்கு ஏற்பட்டிருந்த மட்டற்ற பிரமையை எல்லோரும் ஊகித்துக் கொள்ளலாம். இவர் ஒப்புக் கொண்ட கச்சேரியில் ஒருகால் பாடகர்கள் வர அசௌகரியப்பட்ட போதிலும் இவர் தாமே பாடிக்கொண்டு வாசித்து அந்தக் கச்சேரியை நடத்தி விட்டு உபரி சன்மானத்தையும் பெறுவது உண்டு.

* * *

ஸ்ரீ கிருஷ்ணய்யர் கையாண்ட கடவாத்தியம் இப்போது வாசிக்கப்படும் கடவாத்தியங்களைவிடப் பெரியது. மானாமதுரை, பண்ணுருட்டி என்னும் இரண்டு இடங்களில் தன் வாத்தியத்திற்கு ஏற்ற நயமான மண் கிடைத்ததால் அந்த மண்ணுடன் சில சேர்மானங்களைச் சேர்த்து அரைத்து நூற்றுக் கணக்கான பானைகளைத் தன் செலவில் செய்து சுட்டெடுக்கச் செய்து அவற்றில் அந்தக் காலத்துப் பாடகர்களின் சாரீர இயல்புக்கேற்ற சுருதியும் நாதமும் உள்ள பானைகளைத் தேர்ந்தெடுப்பார். இவ்வாறு தேறிய பானைகளில் சுமார் நூறு பானைகள் இவர் வசம் எப்போதும் இருந்தன. அவற்றை முக்கியமான சில ஊர்களில் உள்ள தம் நண்பர்கள் வீட்டில் ஜாக்கிரதையாக வைத்திருக்கும்படி செய்வார். பழனியில் அவருடைய வீட்டில் சுமார் இருபது பானைகளும் திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை போன்ற ஒவ்வொரு இடத்திலும் ஏழு, எட்டுப் பானைகளும் இருந்து வரும். அவ்வப்போது கச்சேரி நடக்கும் சமயங்களில் அந்தந்த ஊர்களுக்கு அருகிலுள்ள இடங்களிலிருந்து வேண்டியவற்றை எடுத்துக் கொள்வார். எங்கள் வீட்டில் உள்ள ஒரு சிறிய அறையில் ஸ்ரீ கிருஷ்ணய்யருடைய வாத்தியங்கள் சில வெகு காலம் வரை இருந்து வந்தன. என் தகப்பனாருக்கு இவர் பரம நண்பராயிருந்தபடியாலும், அடிக்கடி எங்கள் வீட்டில் வந்து தங்கி குடும்பத்தில் ஒருவராகவே அன்யோன்யமாய்ப் பழகியதாலும், ஸ்ரீ கிருஷ்ணய்யரைப் பற்றிய எல்லா விவரங்களும் என் இளம் மனதில் நன்கு பதிந்து விட்டன. அவர் தங்க நேர்ந்த ஒவ்வொரு சமயமும் எங்கள் வீடு விருந்த கோலாகலமாகவே விளங்கும். பாட்டும் கச்சேரிகளும் வாசிப்பும் ஓயாமல் நடந்து கொண்டே யிருக்கும். என் தகப்பனார் பஞ்சாபகேச பாகவதருடைய தனிப் பிடில் கச்சேரிகளுக்கும், சில சமயங்களில் கதைகளுக்கும் அவர் கடம் வாசித்திருக்கிறார். (தொடரும்)



சித்திரலேகா

ஸ்ரீ பகவதி சரண் வர்மா

மொழிபெயர்ப்பு: ரா.வீ.

முப்பத்தோராம் அத்தியாயம்

முத்துமாலைப் பரிசு

பீஜகுப்தன் அவ்விருவரும் புறப்பட்டுச் சென்றதும் எழுந்து சந்நியாசிக்கெதிரே சென்று தலை வணங்கினான். சந்நியாசி அவனைப் பார்த்ததும் இலேசாகச் சிரித்து, "என் அப்பா! நீயும் சந்நியாசம் வாங்கிக் கொள்ள விரும்புகிறாயா, என்ன?" என்று கேட்டார்.

பீஜகுப்தன், "இல்லை ஸ்வாமி! இப்பொழுதே சந்நியாசம் வாங்கிக் கொள்ளும் யோசனை எனக்கு இல்லை. தங்களுடைய அர்த்தபுஷ்டி வாய்ந்த பேச்சைக் கேட்டு ஆனந்தமுற்றேன். ஆகவே பக்கத்தில் உட்கார்ந்து அதைக் கேட்டு ரசித்துக்கொண்டிருந்தேன்" என்றான்.

சந்நியாசி மறுபடியும் புன்னகை புரிந்தார். "இந்த நடுநிசி வேளையில் ஒரு மனிதன் கங்கைக் கரையில் வந்து உட்காருவது என்றால் ஒன்று அவன் பிச்சைக்காரனாக இருக்க வேண்டும். அல்லது சந்நியாசியாக இருக்க வேண்டும். இந்த இரண்டும் இல்லை என்றால் அவன் மிகவும் மனம் நொந்து போயிருக்கிறான் என்று தான் அர்த்தம் கொள்ள வேண்டும். உன்னைப் பார்த்தால்......" என்றார்.

அதற்குள் பீஜகுப்தன் அவரை இடைமறித்து, "ஸ்வாமி! தங்களுடைய ஊகம் முற்றிலும் சரியே! எனக்கு ஏற்பட்டிருக்கும் மனவருத்தம் சாதாரணமானதல்ல. தங்களுடைய பேச்சில், என் மனவருத்தத்துடன் தொடர்பு கொண்ட பிரச்னை அடங்கியிருப்பது போலத் தோன்றியது. ஆகவே நான் மிகவும் கவனமாகத் தங்கள் பேச்சைக்கேட்டேன். ஸ்வாமி! இது சம்பந்தமாக நான் இன்னும் சில கேள்விகள் தங்களைக் கேட்க விரும்புகிறேன். கேட்கலாம் அல்லவா?" என்று கேட்டான்.

"ஓ! தாராளமாகக் கேள்!"

"தாங்கள் சற்று முன்பு, வெற்றி பெறாத காதலுக்காக ஒரு வாலிபன் தன் வாழ்க்கையைத் தியாகம் செய்து கொள்ளக் கூடாது. அப்படித் தியாகம் செய்ய முற்பட்டாலும் அது தியாகம் ஆகாது. தற்கொலை செய்து கொள்ளுவதாகத்தான் ஆகும் என்று பொருள் படச் சொன்னீர்களே! அது விஷயமாக நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். காதல் நினைவும் பிரிவினால் ஏற்படும் ஆறாத் துயரமும் மனித வாழ்க்கையில் சகஜமாகவும் இயற்கையாகவும் ஏற்படக் கூடியவைதானே? அந்த ஆறா மனத் துயரத்தை அடக்க முயலுவதோ, இயற்கையின் காரியத்தைச் செயற்கை உபாயங்களைக் கொண்டு மறைப்பதோ தன் ஆத்மாவைத்தானே நாசம் செய்து கொள்ளுவதாக முடியாதா?" என்று கேட்டான் பீஜகுப்தன்.

சந்நியாசி சிறிது நேரம்வரை மௌனமாக உட்கார்ந்திருந்தார். பிறகு அவர் மெதுவாக, "குழந்தாய்! நீ சொல்லுவது மிகவும் நியாயமான வார்த்தை. துயரம் தானாகவே காலப் போக்கில் விலகிவிடுகிறது. அந்த அந்த மனிதர்களின் ஸ்வபாவத்துக்கு ஏற்றவாறு துயரம் மறையும் காலத்தில் சிறிது ஏற்றத் தாழ்வு ஏற்படுவது இயல்பு. எப்படியென்றால் ஒருவன் ஒரு துயரத்தைச் சீக்கிரம் மறந்து விடலாம். இன்னொருவனுக்கு அதே துயரத்தை மறக்க இன்னும் சற்று அதிகமான காலம் பிடிக்கலாம். வேறு சிலருக்கு அதைவிட அதிகமான காலதாமதமும் ஏற்படலாம். ஆகவே, தானாகவே மறக்கும் காலத்துக்கு முன்பாக ஒரு துயரத்தைச் செயற்கை உபாயங்களைக் கொண்டு போக்க முயலுவது இயற்கைக்குப் புறம்பானது தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இயற்கைக்குப் புறம்பான எல்லாக் காரியங்களுமே, ஆத்ம நாசத்தைத் தேடிக் கொள்ளுவதாக ஆகாது என்பதையும் நாம் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும்.



நாம் செயற்கையை மிகவும் அதிமாகக் கையாளத் தொடங்கிவிட்டோம். அந்தச் செயற்கையே இப்பொழுது நமக்கு இயற்கையாகவும் கூட ஆகிவிட்டது. ஆடை அணிவது இயற்கைக்கு விரோதமானது. இப்பொழு தெல்லாம் நாம் உண்ணும் உணவு இருக்கிறதே, அதுவும் இயற்கைக்குப் புறம்பானது. இந்நாட்களில் நாம் அநுபவிக்கிறோமே, அந்தச் சுகபோகங்களும் கூட இயற்கைக்குப் புறம்பானவைதான். நாம் அநுபவிக்கும் தன, தான்ய ஐசுவரியங்களும்கூட இயற்கைக்கு ஒவ்வாதவையே. நான் இவ்வளவு தூரம் சொல்வதன் சாரம் என்னவென்றால், இயற்கை வாழ்வு நமக்கு ஒரு பெரும் சுமையாகவே ஆகிவிட்டது. வாழ்க்கையில் உள்ள அந்தச் சுமையைப் போக்கிக் கொள்வதற்காகவும், வாழ்க்கையில் குதூகலத்தை உண்டு பண்ணிக் கொள்ளுவதற்காகவும் மனிதன் ஆடல் பாடல், வேடிக்கை விளையாட்டு, தேர் திருவிழா முதலியவற்றைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறான். இவற்றில் உழன்று பழக்கப்பட்டுவிட்ட நாம் இவற்றைத் தான் வாழ்க்கை என்றுகூடச் சொல்லத் தொடங்கி விட்டோம். துயரத்தைச் செயற்கை உபாயங்கள் மூலமாகப் போக்கிக் கொள்ள முயலுவது ஒரு பொழுதும் ஆத்ம நாசத்தைத் தேடிக் கொள்ளுவதாக ஆகாது. ஏனென்றால், அது இயற்கைக்குப் புறம்பாக இருந்த பொழுதிலும் காலப் போக்கில் அது இயற்கையாகவே மாறிவிட்டது. நம் வாழ்க்கையின் இயல்பாகவும் ஆகிவிட்டது" என்றார்.

"ஸ்வாமி, வந்தனம்!" என்று சொல்லிப் பீஜகுப்தன் எழுந்து நின்றான். "தாங்கள் என் தலையில் சுமந்திருந்த ஒரு பெரிய சுமையை இறக்கிவிட்டீர்கள். தங்களுடைய இந்த அரிய உபதேசங்கள் என் கடமையை நிர்ணயிப்பதில் எனக்குப் பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். எனக்கு விடை கொடுங்கள். நான் போய் வருகிறேன்" என்று சொல்லிப் பீஜகுப்தன் அங்கிருந்து புறப்பட்டான்.

அப்பொழுது விடியற்காலைக் காற்று 'குளு குளு' வென்று வீசத் தொடங்கியது. கிழக்கும் வெளுத்து விட்டது. நேரம் ஆக ஆகக் கீழ்த்திசையில் பிரகாசம் பரவியது. பட்சி ஜாலங்கள் கிறீச்சிட்டுக் கொண்டு பறக்கத் தொடங்கின. பீஜகுப்தன் மாளிகைக்குத் திரும்பி வந்தான். திரும்பி வந்ததும் நேரே தன் அறைக்குச் சென்று படுத்துத் தூங்கிவிட்டான்.

பீஜகுப்தன் தூங்கி விழித்தபொழுது கிட்டத்தட்டப் பகல் பதினைந்து நாழிகை



ஆகிவிட்டது. சுவேதாங்கனை அழைத்துக் கொண்டு யசோதரா வேண்டிய சாமான்கள் வாங்கி வருவதற்காகக் கடைத் தெருவுக்குப் புறப்பட்டுப் போயிருந்தாள்.

பீஜகுப்தன் நித்ய கர்மாக்களை முடித்துக் கொண்டு மிருத்யுஞ்ஜயரின் அருகில் சென்றான். பீஜகுப்தனைக் கண்டதும் மிருத்யுஞ்ஜயர், "பீஜகுப்தா! இன்று நீ எழுந்திருக்க வெகு நேரம் ஆகிவிட்டாற் போலிருக்கிறதே! நேற்றிரவு நன்றாகத் தூங்கவில்லையா, என்ன?" என்று கேட்டார்.

"ஆமாம், ஸ்வாமி! இரவு முழுவதும் என்னவெல்லாமோ பற்பல யோசனைகளில் உழன்று கொண்டிருந்தேன். ஆகையால் எனக்குச் சரியாகத் தூக்கமே பிடிக்கவில்லை" என்றான் பீஜகுப்தன்.

"அப்படி யென்ன தூக்கம்கூட பிடிக்காத யோசனை?" என்று ஆதுரத்துடன் கேட்டார் மிருத்யுஞ்ஜயர்.

"வருங்கால வாழ்க்கையைப் பற்றித்தான் என்னவெல்லாமோ சிந்தித்துக் கொண்டிருந்தேன்!" என்று பதில் அளித்தான் பீஜகுப்தன்.

மிருத்யுஞ்ஜயர் இலேசாகச் சிரித்தார். பிறகு, "வாழ்க்கையில் விருந்து சித்திரலேகா வெளியேறியபின் வருங்கால வாழ்க்கையைப்பற்றிய சிந்தனை எழுவது இயல்புதானே? என் பீஜகுப்தா! அதிருக்கட்டும். நீ ஏதாவது ஒரு முடிவுக்கு வந்துவிட்டாயோ?" என்று கேட்டார்.

மிருத்யுஞ்ஜயரின் அந்த இளநகையிலே தொனித்த ஏளனத்தையும் கேலியையும் கண்ட பீஜகுப்தன் வெலவெலத்துத் திக்குமுக்காடிப் போய்விட்டான். தான் சொல்ல வாய் எடுத்த விஷயத்தைச் சொல்ல மாட்டாமல் விழுங்கினான். பிறகு எப்படியோ தன்னைச் சமாளித்துக் கொண்டு, "இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை. ஆனால் கூடிய சீக்கிரமே ஏதாவது ஒரு முடிவுக்கு வந்துதானே ஆக வேண்டும்?" என்றான்.

"பீஜகுப்தா! நீ எந்தவிதமான முடிவுக்கு வருவாய் என்பதை நான் ஒருவாறு ஊகித்து அறிந்துகொண்டு விட்டேன். இப்பொழுதெல்லாம் நான் மனிதர்களுடைய மனப் போக்கைக் கொஞ்சம் கொஞ்சம் புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டேன். தெரியுமா?" என்றார் மிருத்யுஞ்ஜயர்.

பீஜகுப்தன் பேச்சை மாற்ற எண்ணி, "ஏன், ஸ்வாமி! தாங்கள் தங்களுடைய ஊழியர்களைப் புறப்படுவதற்கான ஏற்பாடு செய்யச் சொல்லி விட்டீர்கள் அல்லவா?" என்று கேட்டான்.

"ஆமாம். அப்பொழுதே சொல்லி விட்டேன். உன் ஊழியர்களுக்குக் கூடச் சுவேதாங்கன் மூலமாகத் தெரிவித்து விட்டேன்" என்றார் மிருத்யுஞ்ஜயர்.

"பேஷ்! நல்ல காரியம் செய்தீர்கள்!" என்றான் பீஜகுப்தன்.

அதே சமயம் வாசற்புறத்தில் யசோதராவின் குரல் கேட்டது. "ஸ்வாமி! இந்த மணியாலை அப்பாவுக்குப் பிடிக்கவில்லையென்றால், நீங்கள்தான் கொண்டுபோய்த் திருப்பிக் கொடுத்து விட்டு வரவேண்டும். நீங்கள் சொன்னதனால்தான் நான் இதை வாங்கினேன், தெரியுமா?" என்று சுவேதாங்கனிடம் சொல்லிக் கொண்டே யசோதரா உள்ளே பிரவேசித்தாள்.

பீஜகுப்தனும் மிருத்யுஞ்ஜயரும் உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு அருகில் வந்ததும் யசோதரா பீஜகுப்தனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, "ஸ்வாமி! தாங்கள் ஒரேயடியாகத் தூங்கி விட்டீர்களே! இதோ பாருங்கள், நான் கடைத் தெருவுக்குப் போய் எவ்வளவு சாமான்கள் வாங்கி வந்திருக்கிறேன், தெரியுமா?—ஆமாம், தாங்கள்

தங்களுக்கென்று ஒன்றுமே வாங்கிக்கொள்ளப் போவதில்லையா" என்று கேட்டான்.

பீஜகுப்தனும் இலேசாகச் சிரித்தவாறே, "யசோதரா தேவி! எனக்கு ஒன்றுமே தேவையில்லை" என்றான்.

"எனக்குந்தான் ஒன்றும் தேவையில்லை. இருந்தாலும் காசியிலிருந்து திரும்பிப் போகும்பொழுது கையோடு ஞாபகார்த்தமாக ஏதாவது சில சாமான்களாவது வாங்கிப் போக வேண்டாமா? அதனால்தான் வாங்கிவந்தேன்!" என்று சொல்லியவாறே யசோதரா தான் வாங்கி வந்திருந்த பொருள்களை ஒவ்வொன்றாகப் பிரித்துக் கீழே வைக்கலானாள்.

"இது எப்படி இருக்கிறது?" என்றுகேட்டவாறே ஒரு மணி மாலையை எடுத்துப் பீஜகுப்தனின் கைகளில் கொடுத்தாள்.

"நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இதன் விலை ரொம்ப அதிகமாக இருக்கும் போலிருக்கிறதே!" என்றான் பீஜகுப்தன்.

"ஆமாம், விலை சற்று அதிகம்தான். ஆனால் நான் இதை இன்னும் விலைக்கு வாங்கிவிடவில்லை. அப்பாவுக்குக் காண்பிப்பதற்காக எடுத்து வந்திருக்கிறேன்" என்றாள் யசோதரா.

மிருத்யுஞ்ஜயர் மணிமாலையைக் கையில் வாங்கிக் கொண்டார். பிறகு அதைப் புரட்டிப் பார்த்தவாறே, "உனக்கு இது பிடித்திருந்தால் வாங்கிக் கொள்ளேன்! யார் வேண்டாம் என்று தடுக்கிறார்கள்?" என்றார்.

தான் வாங்கி வந்திருந்த மற்ற பொருள்களையும் யசோதரா எடுத்துக் காட்டினாள். எல்லாப் பொருள்களும் எல்லோருடைய மனதுக்கும் மிகவும் பிடித்திருந்தன.

பீஜகுப்தன் ஒருமுறை சுவேதாங்கனைப் பார்த்தான். பிறகு, "என் சுவேதாங்கா! நீ ஒன்றும் வாங்கிக் கொள்ளவில்லையா?" என்று கேட்டான்.

"எஜமானரிடம் நான் முன்பே கேட்கவில்லை. அதுமட்டும் அல்ல; எனக்கு வாங்கிக் கொள்ள வேண்டிய பொருளும் ஒன்றும் இல்லை!" என்று மிகவும் பணிவாகப் பதில் அளித்தான் சுவேதாங்கன்.

"வேண்டிய பொருள் இல்லையாவது? உனக்கென்று நீயும் ஏதாவது வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்.— சரி, அது போனால் போகட்டும். நீ என்னுடன் வா, நாம் இருவரும் போய் நமக்கு வேண்டிய பொருளாக ஏதாவது பார்த்து வாங்கி வருவோம். யசோதரா தேவி! உங்களுக்குக் கஷ்டம் ஒன்றும் இல்லாவிட்டால் இன்னுமொரு தடவைதான் எங்களுடன் நகரத்துக்கு வாருங்களேன். நீங்களும் கூடவந்தால் எனக்கு வேண்டிய பொருள்களைப் பொறுக்கி யெடுத்துக் கொள்ள உதவியா யிருக்கும். என்ன, எங்களுடன் வருகிறீர்களா?" என்று கேட்டான் பீஜகுப்தன். அதைக் கேட்டு முடித்ததும் அவன் ஒரு முறை யசோதராவை ஏற இறங்கப் பார்த்தான்.

"நான் வரத்தயார். ஆனால் சாப்பாட்டுக்குப் பிறகுதான் என்னால் வரமுடியும். ஏனென்றால் எனக்கு இப்பொழுது ரொம்பவும் களைப்பாயிருக்கிறது" என்று சொல்லியவாறே உள்ளே சென்றாள் யசோதரா.

உணவு அருந்தி முடித்ததும் மிருத்யுஞ்ஜயரைப் பார்த்துப் பீஜகுப்தன், "என் ஸ்வாமி! தாங்களும் எங்களுடன் கடைத் தெருவுக்கு வருகிறீர்களா?" என்று கேட்டான்.



"இல்லை, அப்பா! எனக்கோ வயதாகி விட்டது. எனக்கு ஜனக் கும்பலைக் கண்டாலே பிடிப்பதில்லை" என்று சொல்லிவிட்டார் மிருத்யுஞ்ஜயர்.

சுவேதாங்கனையும் யசோதராவையும் அழைத்துக் கொண்டு பீஜகுப்தன் கடைத் தெருவுக்குப் புறப்பட்டான். கடைத் தெருவுக்குள் சென்றதும் முதன் முதலாக மூவரும் நகைக் கடைக்குள் நுழைந்தனர். பீஜகுப்தனும் சுவேதாங்கனும் வைர மோதிரங்கள் வாங்கிக் கொண்டனர். எதிரே உள்ள கண்ணாடி அல

மாரியில் விலை உயர்ந்த முத்து மாலை ஒன்று கண்களைக் கவரும் வேலைப்பாடுகளுடன் காட்சி அளித்தது. யசோதரா வைத்த கண் வாங்காமல் அதையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்தாள். அதைக் கண்ட பீஜகுப்தன் கடைக்காரனிடம் சொல்லி அந்த மாலையை எடுக்கச் சொன்னான். கடைக்காரன் அந்த மாலையை எடுத்ததும் தன் கையில் வாங்கிக்கொண்டு, "என் யசோதரா தேவி! இந்த மாலை எப்படி யிருக்கிறது? உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டான் பீஜகுப்தன்.



"ரொம்ப ரொம்ப அழகாயிருக்கிறது, ஸ்வாமி! நான் முன்னாலேயே இதைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் மணி மாலையை வாங்கிக் கொள்ளுவதற்குப் பதிலாக இந்த முத்து மாலையை வாங்கிக் கொண்டிருந்திருப்பேன்" என்று பீஜகுப்தனிடம் சொன்னாள். பிறகு சுவேதாங்கன் பக்கம் திரும்பி, "ஸ்வாமி! இதெல்லாம் உங்களால்தான் வந்தது!" என்று குறை கூறும் தோரணையில் சொன்னாள்.


அதைக் கேட்டதும் சுவேதாங்கன், "ஏன்? இப்பொழுதுதான் என்ன வந்து விட்டது? மணி மாலையைத் திருப்பிக் கொடுத்து விட்டால் போயிற்று!" என்றான்.

பீஜகுப்தன் கடைக்காரனிடமிருந்து அந்த மாலையைவாங்கி யசோதராவின் கழுத்தில் அணிந்து விட்டான். பிறகு அவளைப் பார்த்து, "யசோதரா தேவி! மணி மாலையைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை. இந்த முத்து மாலையை நான் தங்களுக்கு அளிக்கும் சிறு பரிசாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னான்.

பீஜகுப்தனுடைய கரஸ்பரிசம் பட்டது தான் தாமதம், யசோதராவுக்கு உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை ஒரேயடியாகத் தூக்கிவாரிப் போட்டது. அவள் முத்து மாலையைக் கழற்றிய வண்ணம், "ஸ்வாமி! நான் என்னுடைய தந்தையின் உத்தரவின்றி எதையும் பரிசாக ஏற்றுக் கொள்ள முடியாது. மன்னிக்க வேண்டும்" என்று நாத் தழுதழுக்கச் சொன்னாள்.

உடனே அந்த மாலையைக் கழற்றி அவள் பீஜகுப்தனின் கையில் கொடுத்து விட்டாள். பீஜகுப்தன் அதைத் தன் கைகளில் வாங்கிக் கொண்டான். பிறகு, "யசோதரா தேவி! இந்த மாலையைப் பரிசாக ஏற்றுக் கொள்ளுவதில் தங்களுக்கு எத்தகைய ஆட்சேபணையும் இருக்க வேண்டியதில்லை. இருந்தாலும் நீங்கள் தந்தையின் உத்தரவின்றி வாங்கிக் கொள்ள முடியாது என்று சொன்னீர்களே, அது ரொம்பவும் நியாயமான வார்த்தை!" என்றான். (தொடரும்)

வந்தனம் ஐயா, வந்தனம்!



மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

39 கைதிக் கூண்டில்!

டில்லியில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திலிருந்து மகாத்மா சபர்மதி சத்தியாக்கிரஹ ஆசிரமத்துக்குத் திருப்பி வந்தார். அவருடைய உள்ளம் அமைதி இழந்திருந்தது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் முடிவாக மகாத்மாவின் தீர்மானத்துக்கு அதிக வோட்டுக்கள் வந்தது பற்றி அவருக்குத் திருப்தி உண்டாகவில்லை.

"தெரிந்தோ, தெரியாமலோ, பலருடைய மனதிலும் பலாத்காரம் குடியிருப்பதைக் கண்டேன். ஆகவே, எனக்குத் தோல்வி ஏற்பட வேண்டும் என்றே பிரார்த்தித்தேன். நான் அதிகமாகப் பயப்படுவது பெரும்பான்மை வோட்டுப் பலத்தைக் கண்டுதான். என்னை ஆதரிப்பவர்கள் வெகு சிலராயிருக்கும் சமயங்களிலேயே என்னால் மிகவும் முக்கியமான வேலை செய்ய முடிந்திருக்கிறது" என்று காந்திஜி டில்லியிலிருந்து திரும்பி வந்ததும் "யங் இந்தியா"வில் குறிப்பிட்டார். மேலும் காந்திஜி எழுதியதாவது:—

"காங்கிரஸ் ஊழியர்களிடையில் ஓரளவு ஏமாற்றத்தையும் உற்சாகக் குறைவையும் நான் எதிர்பார்த்தேன். ஆனால் இப்படிப்பட்ட சண்டமாருத எதிர்ப்பை எதிர்பார்க்கவில்லை, காங்கிரஸ் ஊழியர்களிடையில் நிர்மாண திட்டத்தை நிறைவேற்றுவதில் உற்சாகத்தையே காணவில்லை. 'இது என்ன சமூக சீர்திருத்த இயக்கமா?' என்று கேட்டார்கள். 'இம்மாதிரி ஜீவகாருண்யத் தொண்டுகளைச் செய்து பிரிட்டிஷாரிடமிருந்து அதிகாரத்தைக் கைக் கொள்ள முடியுமா?' என்றும் கேட்டார்கள். ஆகவே அஹிம்சையின் அடிப்படையைப் பெரும்பாலோர் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை யென்றே ஏற்பட்டது. அ. இ. கா. அங்கத்தினர்களுக்கு நான் எச்சரிக்கை செய்தேன்:— 'உங்களுக்கு நம்பிக்கையில்லாவிட்டால் என் தீர்மானத்தை ஒப்புக் கொள்ள வேண்டாம்; நிராகரித்து விடுங்கள்' என்று. அப்படி எச்சரிக்கை செய்த பிறகும் பெரும்பான்மையோர் என்னுடைய பிரேரணையை மாறுதல் ஒன்றுமின்றி ஒப்புக் கொண்டார்கள். ஆகவே அவர்கள் இனித் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். சட்டமறுப்புப் போரை இப்போதைக்கு மறந்து விட்டு நிர்மாண வேலையில் ஈடுபடவேண்டும். நம்முடைய கால் தவறியபடியால் வழுக்கி விழுந்து விட்டோம். இப்போதாவது நாம் ஜாக்கிரதை யடைந்து நமது காலை ஊன்றி வைக்கா விட்டால் வெள்ளம் நம்மை அடித்துக் கொண்டே போய்விடும்."

இவ்வாறு காந்திஜி காங்கிரஸ் தீவிரவாதிகளையும் அவசரக்காரர்களையும் நிதானப்படுத்துவதில் தமது முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கையில், அதிகார வர்க்கத்தார் தங்களுடைய ஆயுதத்தைத் தீட்டிக் கொண்டிருந்தார்கள். தேசமெல்லாம் சோர்வு குடிகொண்டிருக்கும் இந்தச் சமயமே மகாத்மாவைக் கைது செய்வதற்குச் சரியான சந்தர்ப்பம் என்று முடிவு செய்தார்கள். இந்த முடிவு ஒருவாறு வெளிப்பட்டுப் போயிற்று. "மகாத்மாவைக் கைது செய்யப் போகிறார்கள்" என்ற வதந்தி பரவியது. இது மகாத்மாவின் காதிலும் விழுந்தது. உடனே காந்திஜி "நான் கைது செய்யப்பட்டால்" என்ற கட்டுரையை எழுதினார். மார்ச்சு 9-ந் தேதி "யங் இந்தியா"வில் இக்கட்டுரை வெளியாயிற்று.

"நாம் சுதந்திரத்துக்குத் தகுதியானவர்கள் தான் என்பதை நிரூபிப்பதற்கு மறுபடியும் ஒரு சந்தர்ப்பம் வரப் போகிறது. என்னைக் கைது செய்ததும் தேசமெங்கும் அதிகார வர்க்கம் எதிர்பார்ப்பது போல் கலகமும் குழப்பமும் உண்டானால் அதிகார வர்க்கத்துக்கு அது வெற்றியாகும். 'அஹிம்சைப் புரட்சி யென்பது ஒருநாளும் நடவாத காரியம்.'

என்று சொல்லும் மிதவாத நண்பர்களின் கட்சிக்கும் அது ஜயமாகும். சர்க்காரும் சர்க்காரை ஆதரிப்பவர்களும் கொண்டிருக்கும் பயம் வீண் பயம் என்பதை மக்கள் நிருபிக்க வேண்டும். என்னைக் கைது செய்தால் அதற்காக ஹர்த்தால்களோ, ஊர்வலங்களோ, கோஷங்களுடன் கூடிய ஆர்ப்பாட்டங்களோ எங்கும் நடக்கக்கூடாது. என்னைக் கைது செய்ததும் தேசமெங்கும் பூரண அமைதி குடி கொண்டிருக்குமானால் அதை என்னுடைய தேசத்தார் எனக்குச் செய்த மகத்தான மரியாதையாகக் கருதுவேன். அதற்கு மேலே, காங்கிரஸின் நிர்மாண திட்டங்கள் எல்லாம் 'பஞ்சாப் எக்ஸ்பிரஸ்' வேகத்தில் நடைபெற்றால் மகிழ்ச்சி அடைவேன். அஹிம்சை, சமூக ஒற்றுமை, தீண்டாமை விலக்கு, கதர். இந்த நாலு திட்டங்களும் சுயராஜ்யத்தின் நாலு தூண்கள் என்பதை மக்கள் உணர வேண்டும்."

இவ்விதம் பொது மக்களின் கடமையைக் குறிப்பிட்டு விட்டு மகாத்மாஜி மேற்படி கட்டுரையைப் பின் வருமாறு முடித்திருந்தார்:—

"தற்சமயம் என்னை மக்களின் மத்தியிலிருந்து நீக்கிச் சிறைக்கு அனுப்புவதினால் பல நன்மைகள் விளையும் என்று கருதுகிறேன். முதலாவது, என்னிடம் 'மாய மந்திர சக்தி'கள் இருப்பதாகச் சிலர் கொண்டிருக்கும் குருட்டு நம்பிக்கை போகும். இரண்டாவது ஜனங்கள் என்னுடைய தூண்டுதலினாலேதான் சுயராஜ்யம் வேண்டுகிறார்கள். அவர்களுக்காகச் சுதந்திரப் பற்று இல்லை என்ற கூற்று பொய்யாகும். மூன்றாவது, என்னை அப்புறப்படுத்திய பிறகும் மக்கள் காங்கிரஸ் திட்டங்களை நிறைவேற்றினால் சுயராஜ்யம் ஆளுவதற்கு மக்களின் தகுதி நிரூபணமாகும். நாலாவது, சுயநல காரணம் ஒன்றும் இருக்கிறது. ரொம்பவும் அலுப்படைந்திருக்கும் என்னுடைய துர்ப்பல சரீரத்துக்குக் கொஞ்சம் ஓய்வு கிடைக்கும். இவ்வளவு நாள் நான் செய்த வேலையின் காரணமாக இந்த ஓய்வுக்கு நான் தகுதி பெற்றிருக்கிறேன் அல்லவா?"

காந்திஜி இவ்விதம் எழுதிய கட்டுரை வெளியான இரண்டு தினங்களுக்கெல்லாம் அந்த மகான் கோரிய ஓய்வை அவருக்குக் கொடுக்க அதிகார வர்க்கத்தார் முன் வந்தார்கள்.

மார்ச்சு 8-ந் தேதியன்று மகாத்மா கைது செய்யப்படுவார் என்ற வதந்தி பரவியது. ஆனால் அதைக் குறித்து ஆசிரமவாசிகள் சிறிதும் பரபரப்புக் கொள்ளவில்லை. ஏனெனில் அதை அனைவரும் எதிர்பார்த்துக்கொண்டுதா னிருந்தார்கள்.

ஜனாப் சோட்டானி சாகிப்பின் கோரிக்கையின் பேரில் 8-ந் தேதி மகாத்மா ஆஜ்மீருக்குச் சென்றார். 10-ல் திரும்பி வந்தார். அன்றைக்கு ஆஜ்மீரிலிருந்து ஆசிரமத்துக்கு வந்த தந்திச் செய்தி சந்தேகாஸ்பதமா யிருந்தபடியால் ஆசிரமவாசிகள் சிறிது பரபரப்பை அடைந்தார்கள். எங்கேயோ வெளியூரில்,—தாங்கள் இல்லாத இடத்தில்,—மகாத்மாவைக் கைது செய்து கொண்டு போய் விடுவார்களோ என்ற கவலை உண்டாயிற்று. ஆகையினால் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி முதலியவர்கள் மகாத்மாஜி திரும்பி வரவேண்டிய வண்டியை எதிர் நோக்கிச் சபர்மதி ஸ்டேஷனுக்கு விரைந்து சென்றார்கள்.

ஒரு சமயம் காந்திஜி பின்வருமாறு எழுதினார் :—"எனக்கும் ஹிந்து மதத்துக்கும் உள்ள பாந்தவ்யம் எனக்கும் என் பத்தினிக்கும் உள்ள பாந்தவ்யத்தைப் போன்றது. ஸ்ரீமதி கஸ்தூரிபாயிடம் நான் பல குறைகளைக் காண்கிறேன். ஆனாலும் அந்தக் குறைகளையுடையவளிடம் அசைக்க முடியாத நேசமும் பற்றும் எனக்கு உண்டு. இதுபோலவே ஹிந்து மதத்தில் நான் பல குறைகளைக் கண்டாலும் அதனிடம் எனக்குள்ள அபிமானம் மிக ஆழ்ந்த அபிமானம். அதை ஒருநாளும் அசைக்க முடியாது."

காந்திஜி இவ்வாறு ஸ்ரீமதி கஸ்தூரிபாயை ஹிந்து மதத்துக்கு ஒப்பிட்டது ஹிந்து மதத்துக்கே கௌரவம் அளிப்பதாகும் என்று நாம் கருதுகிறோம். காந்தி தமது பத்தினியிடம் பல குறைகளைக் கண்டிருக்கலாம். ஆனால் நம்முடைய அன்னை கஸ்தூரிபாயிடம் நாம் ஒரு குறையையும் காணவில்லை. நாம் காண்பதெல்லாம் அவருடைய பெருமைதான். காந்திஜி தேசத்தின் முடிசூடா மன்னராய் விளங்கியபோதும் தேசமெல்லாம் காந்திஜியைக் குற்றங் கூறிக் கோபித்துக் கொண்டபோதும் அன்னை கஸ்தூரிபாயின் பக்தி அவரிடம் ஒரேவிதமாக மாறுமலிருந்தது. அவர் இழுத்த இழுப்புக்கெல்லாம் கஸ்தூரிபாய் உட்பட்டார். அவர் கொடுத்த கஷ்டங்களை யெல்லாம் மகிழ்ச்சியுடன் அநுபவித்தார். ஆனால் தமக்குத் தெரியாமல் தம் கணவரைச் சிறைக்குக் கொண்டுபோய் விடுவார்களோ என்ற எண்ணம் மட்டும் அவரைத் துணுக்கத்துக்கு உள்ளாக்கியது. சபர்மதி ஸ்டேஷனுக்கு விரைந்து ஓடினார்.

நல்ல வேளையாக, பயந்தபடி ஒன்றும் நடைபெறவில்லை. காந்திஜி குறிப்பிட்ட

ரயிலில் வந்து இறங்கினார். சின்னஞ் சிறு குழந்தையைப் போல் சிரித்துக் கொண்டும் தமாஷ் செய்து கொண்டும் காந்திஜி ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தார்.

அன்று மாலைப் பிரார்த்தனை ஆசிரமத்தில் வழக்கத்தைக் காட்டிலும் அதிக சிரத்தையும் உருக்கமும் உள்ளதாக நடைபெற்றது. பிரார்த்தனை முடிந்ததும் பலருடைய கண்களில் நீர் ததும்பியது. ஆனால் மகாத்மாவோ வழக்கத்தைக் காட்டிலும் அதிக குதூகலத்துடன் ஆசிரமத்துக் குழந்தைகளைக் கூட்டி வைத்துக்கொண்டு அவர்களில் தாமும் ஒரு குழந்தையைப் போல் சிறிது நேரம் விளையாடிக் கொண்டிருந்தார். பிறகு, வழக்கம் போலக் கடிதங்களுக்குப் பதில் எழுதத் தொடங்கினார். அச்சமயம் ஆமதாபாத்திலிருந்து பல நண்பர்கள் வந்து ஊரில் பரவியுள்ள வதந்தியைப் பற்றி மகாத்மாவிடம் சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் காந்திஜி தைரியம் சொல்லி திருப்பி அனுப்பினார்.

அப்படி வந்தவர்களில் கடைசியாகத் திரும்பிப் போனவர்கள் ஸ்ரீ சங்கர்லால் பாங்கர், ஜனாப் ஷுவாயிப் குரேஷி, ஸ்ரீமதி அனசூயா பென் ஆகியவர்கள். இவர்களில் ஸ்ரீ சங்கர்லால் பாங்கர் "எங் இந்தியா" பத்திரிகையின் பதிப்பாளர். இவர்கள் மூவரும் இரவு பத்து மணிக்கு மகாத்மாவிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினார்கள். இவர்கள் போனவுடனே மகாத்மாவும் வேலையை நிறுத்திவிட்டுப் படுக்கப் போக எழுந்தார். சில நிமிஷங்களுக்கெல்லாம் ஜனாப் குரேஷியும் ஸ்ரீமதி அனசூயா பென்னும் மட்டும் திரும்பி வந்தார்கள். ஆசிரம எல்லையிலிருந்து ஆமதாபாத் புறப்படும் இடத்தில் போலீஸ் சூபரின்டென்டும் போலீஸ் ஜவான்களும் வந்திருக்கிறார்கள் என்றும், ஸ்ரீ சங்கர்லால் பாங்கரைக் கைது செய்து விட்டார்கள் என்றும், மகாத்மாவுக்காகக் காத்திருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்கள். இந்தச் செய்தி ஒரு நிமிஷத்துக்குள் ஆசிரமம் முழுவதும் பரவி விட்டது. ஆசிரமத்தில் வசித்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லாரும் வந்து மகாத்மாவைச் சூழ்ந்து கொண்டார்கள்.

மகாத்மா நீண்ட காலமாகச் செய்த தவம் நிறைவேறியவரைப் போல் சந்தோஷமடைந்தார். ஜனாப் ஷுவாயிப் குரேஷியிடம், "இராஜகோபாலாச்சாரியார் விடுதலையாகி வருகிறவரையில் நீங்கள் 'எங் இந்தியா'வைப் பார்த்துக் கொள்ளுங்கள். அவர் வந்ததும் அவரிடம் ஆசிரியப் பொறுப்பை ஒப்புவித்து விடுங்கள்!" என்று சொன்னார்.

ராஜாஜி டிசம்பர் கடைசியில் வேலூரில் 144-வது உத்திரவை மீறியதற்காக மூன்று மாதச் சிறைத் தண்டனை அடைந்தார். அவர் விடுதலையாகும் தேதி நெருங்கியிருந்தது. காந்திஜி தீர்க்கமாக யோசித்து, "நான் சிறைப்பட்டால் என்னுடைய கொள்கைகளுக்கு இணங்க 'எங் இந்தியா'வை நடத்தக் கூடியவர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்தான்" என்று முடிவு கட்டித் தெரிவித்திருந்தார். அதையே இப்பொழுதும் சொன்னார்.

பிறகு ஆசிரமவாசிகள் ஒவ்வொருவரிடமும் தனித் தனியே பேசி அவர்களை உற்சாகப்படுத்திச் சிரிப்பூட்டி விடைபெற்றார். இது முடிந்ததும் எல்லாரும் சேர்ந்து "வைஷ்ணவ ஜனதோ" கீதத்தைப் பாடும்படி சொன்னார்.

பின்னைப் பிராயத்தில் மகாத்மாவின் உள்ளத்தில் பதிந்த இந்த கீதத்தை ஒவ்வொரு முக்கியமான சந்தர்ப்பத்திலும் மகாத்மா பாடச் சொல்லுவது வழக்கம். அவ்வாறே இச்சமயத்திலும் அந்தக் கீதத்தைப் பாடச் சொல்லிக் கேட்டபிறகு மகாத்மா பிரயாணமானார்.

அந்தச் சமயத்தில் மௌலானா ஹஸரத் மோஹினி வந்து சேர்ந்தார். இவர் மகாத்மா காந்தியைப் பல தடவையும் எதிர்த்துப் போராடியவர். ஆமதாபாத் காங்கிரஸிலே கூட எதிர்த்தார். அப்படிப்பட்டவர் இப்போது கண்ணும் கண்ணீருமாக வந்தார். இச்சமயத்தில் அவர் வந்தது மகாத்மாவுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்தது. இருவரும் ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். அஹிம்சை அடிப்படையில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு இனிப் பூரண ஆதரவு தருவதாக மௌலானா கூறினார்.

காந்திஜியையும் ஸ்ரீ சங்கர்லால் பாங்கரையும் சபர்மதி சிறைக்குக் கொண்டு போனார்கள். அங்கே பலமான இரும்புக் கம்பிக் கதவுகள் போட்ட இரு அறைகளில் அவர்கள் அடைக்கப்பட்டார்கள். ஒவ்வொரு அறையிலும் ஒரு இரும்புக் கட்டில், ஒரு கயிற்று மெத்தை, ஒரு தலையணை, ஒரு ஜமக்காளம், ஒரு கம்பளம் இவை இருந்தன. அறைகளுக்கு வெளியே தாழ்வாரம் இருந்தது.

இந்தச் சிறை வாசல் வரையில் ஸ்ரீமதி கஸ்தூரிபாயும் இன்னும் சில ஆசிரமவாசிகளும் சென்றார்கள். சிறைக்குள்ளே காந்திஜியை அனுப்பிக் கதவைச் சாத்திப் பூட்டும் வரையில் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் தமது பதியின் அருகில் இருந்து விட்டுப் பின்னர் ஆசிரமத்துக்குத் திரும்பினார்.

காந்திஜியின் உள்ளத்தில் அன்றிரவு அமைதி குடி கொண்டிருந்தது. ஆனால் அன்னையின் உள்ளம் எப்படித் தத்தளித்தது என்பதை யாரால் விவரிக்க முடியும்? "இன்னும் எத்தனை காலம், எத்தனை தடவை, இப்படியெல்லாம் இந்தக் கிழவர் சிறைபுக வேண்டும் இந்த நாட்டுக்காக!" என்று அன்னையின் மனம் கஷ்டப்பட்டிருந்தால் அதில் வியப்பு ஒன்றுமிராது. ஆனால் அவ்விதம் மனம் கஷ்டப்பட்டதாக ஸ்ரீமதி கஸ்தூரி பாய் அணுவளவும் காட்டிக் கொள்ளவில்லை.

*   *   *

மறு நாள் மார்ச்சு 11உ மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் ஆலன் பிரௌன் ஐ.ஸி.எஸ். அவர்களின் கோர்ட்டுக்கு மகாத்மாவையும் ஸ்ரீ சங்கர்லால் பாங்கரையும் அழைத்துச் சென்றார்கள். "எங் இந்தியா" பத்திரிகையில் 29–9–21, 15–12–21, 23-2-22 தேதி இதழ்களில் வெளியான மூன்று கட்டுரைகளுக்காக 124-ஏ பிரிவின்படி வழக்குத் தொடரப்படுகிறதென்று தெரியவந்தது. மேற்படி கட்டுரைகளின் தலைப்புகள் "இராஜ விசுவாசத்தைக் கெடுத்தல்" "பிதிரும் விடையும்" "சிங்கத்தின் பிடரி குலுங்குகிறது" என்பனவையாகும். இந்தக் கட்டுரைகள் கோர்ட்டில் படிக்கப்பட்டன. இவை "எங் இந்தியா"வில் வெளியாயின என்பதற்கும், "எங் இந்தியா"வின் ஆசிரியர் மகாத்மாகாந்தி, பதிப்பாளர் ஸ்ரீ சங்கர்லால் பாங்கர் என்பதற்கும் சம்பிரதாயமான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. ஜில்லா மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் சாட்பீல்டு, ஜில்லா போலீஸ் சூபரிண்டெண்ட் மிஸ்டர் ஹீலி, ஒரு ஸப்-இன்ஸ்பெக்டர், ஒரு ஸி. ஐ. டி. உத்தியோகஸ்தர் ஆகியவர்கள் சாட்சி சொன்னார்கள். சாட்சியங்களைப் பதிவு செய்த பிறகு மிஸ்டர் ஆலன் பிரௌன் ஐ. ஸி. எஸ். குற்றப் பத்திரிகையைப் படித்தார். ஆமதாபாத் செஷன்ஸ் ஜட்ஜு மிஸ்டர் ஸி. என். புரும்பீல்டு ஐ. ஸி. எஸ். முன்னிலையில் இந்த வழக்கின் விசாரணை நடைபெற வேண்டும் என்று முடிவு கூறினார்.

1922-ம் வருஷத்திலே கூட ஒரு ஜில்லாவின் பிரதம உத்தியோகஸ்தர்கள், ஜட்ஜுகள் முதலியோர் ஐரோப்பியர்களாகவே இருந்திருப்பதை வாசகர்கள் கவனிப்பார்களாக. அதைக் கவனித்தால் தான் மகாத்மாஜியின் தலைமையில் இந்தியாவின் விடுதலைப்போர் வெற்றியடைந்து இன்று நம்மை நாமே ஆண்டு கொள்ளும் நிலைமை ஏற்பட்டிருப்பது எவ்வளவு மகத்தான சாதனை என்பது தெரியவரும்.

பட் பட், பட பட்!



குடும்பராவ் பேட்டி

நமது விசேஷ விடாக்கண்ட நிருபர்

"பெரிய தலைவர்களுடைய பேட்டியைக் கொஞ்சம் நிறுத்தி வைத்துவிட்டு உடனே போய் ஸ்ரீமான் குடும்ப ராவைப் பேட்டி கண்டு வா!" என்று ஆசிரியர் உத்தரவிட்டவுடனே ஒரு நிமிடம் திகைத்தேன். குடும்பராவ் யாரென்று தெரியாமல் விழித்தேன்.

"குடும்பராவ் யாரென்று தெரியாதா? அவர்தான் மத்தியதர வகுப்பாரின் ஏகப் பிரதிநிதி. நடுத்தெரு நாற்பதாம் நம்பர் வீட்டில் இருக்கிறார். உடனே போ!" என்று ஆசிரியர் விரட்டினார்.

நடுத்தெருவை அடைந்தேன். நாற்பதாம் நம்பர் வீட்டைக் கண்டுபிடித்த போது எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. இவ்வளவு பெரிய வீட்டில் குடும்பராவ் வசிக்கிறதென்றால் அவர் மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவராகக் கட்டாயம் இருக்க முடியாது. ஒருவேளை ஆசிரியர் தப்பான விலாசத்தைக் கொடுத்து விட்டாரோவென்று சந்தேகித்துக் கொண்டே உள்ளே நுழைந்தேன். ஏதாவது கல்யாண சத்திரத்தில் தவறி நுழைந்து விட்டேனா, என்ன? வீடென்று சொல்லப்படும் அந்த சத்திரத்திலே ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாகச் சுமார் இருநூறுக்கு மேற்பட்ட ஜனங்கள் இருந்தார்கள். சிறு கும்பலாக ஜனங்கள் எதையோ சுற்றி வளைத்து நின்று கொண்டிருந்தார்கள். "குடும்பராவ் இருக்கிறாரா?" என்று நான் அங்கு நடமாடிக் கொண்டிருக்கும் எல்லாரையும் கேட்டேன். ஆனால் ஒருவருக்கும் குடும்ப ராவ் யாரென்றே தெரியவில்லை. நல்லவேளையாக சில பேர் மட்டும் குடும்பராவ் என்ற பெயரை அதே வீட்டில் கேள்விப் பட்டிருப்பதாகச் சொன்னது எனக்கு ஆறுதலையளித்தது.

"சரி! இனிமேல் யாரையும் கேட்டுக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. நாமே உள்ளே புகுந்து தேடவேண்டும்!" என்று தீர்மானித்து உள்ளே நுழைந்தேன். என்ன வேடிக்கை! சுமார் இருபது அறைகள் கொண்ட அந்த வீட்டில் முப்பது குடும்பங்கள் ஒண்டுக்குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தன! ஒவ்வொரு குடும்பத்திலும் எட்டு அல்லது பத்து அங்கத்தினர்கள் இருந்தார்கள்! சூரிய பகவானும் வாயுபகவானும் நுழையமுடியாத இந்த அறைகளில் மனிதர்கள் மாத்திரம் எப்படி நுழைந்து வாசம் செய்கிறார்கள் என்பது எனக்குப் புதிராகவேயிருந்தது. சீதையை அனுமார் தேடியது போல நானும் குடும்ப ராவை ஒவ்வொரு அறையாகத் தேடினேன். என்னை யாரும் தடுக்கவில்லை. நான் யாரென்று கூட ஒருவரும் கேட்கவில்லை. "குடும்ப ராவ்! குடும்பராவ்!" என்று தொண்டை கிழிய இரண்டு தடவை கத்தினேன். பிரயோஜனமில்லை.

மன்னாதி மன்னரையெல்லாம் பேட்டி கண்ட விடாக்கண்டனாகிய என் கண்ணில் அகப்படாமலிருக்கும் குடும்பராவ் பெரிய கொடாக்கண்டராய் இருக்க வேண்டுமென்று யோசித்துக்கொண்டிருந்தபோது நல்லவேளையாகத் தயிர் விற்பவன் ஒருவன் என் உதவிக்கு வந்தான். வந்தவன், "தயிரோ, தயிர்!" என்று கூவிவிட்டுத் தன் கூடையைக் கீழே இறக்குமுன்பு புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல சுமார் இருபது முப்பது ஸ்திரீகளும் குழந்தைகளும் கையில் ஆளுக்கொரு பாத்திரத்தையெடுத்துக்கொண்டு பல அறைகளிலிருந்து வெளிப்பட்டுத் தயிர்க்காரனை சூழ்ந்து கொண்டார்கள். இதுதான் சரியான சமயமென்று நான் மறுபடியும் "குடும்பராவ்!" என்று உரக்கக் கத்தினேன்!

அப்போது ஒரு வயதான ஸ்திரீ என்னை மேலும் கீழுமாய்ப் பார்த்துவிட்டு அவள் பின்னோடு என்னை அழைத்துச் சென்றாள். பாலர் கதைகளில் வரும் ராஜகுமாரன் மந்திரவாதியைத் தொடர்ந்து பெரிய மலைகள், நெருப்பு ஆறுகள், நாகலோகங்கள் இவைகளைக் கடந்து கடைசியாக ராஜகுமாரி சிறையிருக்கும் அரண்மனையை அடைவது போல நானும் இந்த ஸ்திரீயைத் தொடர்ந்து சிறிய கூடங்கள், புகை மண்டலங்கள், குறுக்கே நிற்கும் குட்டிச் சுவர்கள் இவற்றைத் தாண்டிக்கொண்டு கடைசியாகக் குடும்பராவ் இருக்கும் அறையை அடைந்தேன்!

முதலில் அந்த ஸ்திரீ மாத்திரம் உள்ளே நுழைந்து, "யாரோ உன்னைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்" என்று சொன்னது கேட்டது. அதைத் தொடர்ந்து, "யாராயிருந்தாலும் சரி, பாக்கிப் பணம் அடுத்த மாதந்தான் கொடுக்க முடியும் என்று முன்னமேயே

சொல்லி விட்டேனே!" என்ற அலுத்துப்போன குரலும் கேட்டது.

"சரி! நம்மையும் ஒரு கடன்காரர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார் போலிருக்கிறது!" என்று எண்ணித் துணிவுடன் அறையினுள் புகுந்து நான் வந்த காரியத்தைச் சொன்னேன். அவரைப் பேட்டி காண வந்திருப்பதாகச் சொன்னபோது குடும்பராவ் 'பேட்டி கொடுப்பது மந்திரிகளுக்கும் பெரிய மனிதர்களுக்கும்தான் வழக்கம். அதனால் நான் பேட்டி கொடுக்க முடியாது!" என்று தீர்மானமாக மறுத்து விட்டார். "பேட்டி கொடுக்க வேண்டாம், சில கேள்விகள் உங்களைக் கேட்கலாமா?" வென்று நான் தந்திரமாகக் கேட்ட போது, "தாராளமாய்க் கேளுங்கள்! நான் பூராவும் (கடன்காரர்களுக்கு) பதில் சொல்வதுதானே என் வழக்கம்!" என்று அசிரத்தையாகப் பதிலளித்தார்.

"உங்கள் குடும்ப விவரங்களைத் தயவு செய்து சொல்ல முடியுமா?" என்றேன்.

"தாராளமாக. என் குடும்பத்தில் மொத்தம் நவக்கிரஹங்கள் இருக்கின்றன. நான்தான் குடும்பராவ். என் மனைவி தையல் நாயகி. என் தாயார் சிவலோகப் பிராப்தி அம்மாள். பிள்ளைகள் நான்கு. பெயர்: வெங்கு. சீனு. ராமு, கோண்டு. பெண்கள் இரண்டு பேர்: மங்களம், நித்திய மங்களம். மூத்த பையனுக்கு வயது பத்தொன்பது. மூத்த பெண்ணுக்கு வயது பதினாலு. எனக்குத் தகப்பனார் இல்லை..." என்று கடகடவென்று ஒப்பித்தார்.

"உங்களுக்குச் சம்பளம் எவ்வளவு?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லு முன்பு குடும்பராவ் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டார். ஒருவேளை தம் மனைவி அருகிலிருக்கிறாளோ என்ற பயம் போலிருக்கிறது!

"நான் முதல் தேதி ஆபீஸில் கையெழுத்துப் போடுவது நூற்று நாற்பத்து ஏழரை ரூபாய்க்கு. ஆனால் என் கையில் அப்போது வருவது நூற்றுயேழு ரூபாய். ஏழரைத்தான். ஆபீஸ் 'காஷிய'ரிடம் கைமாற்று வாங்கின நாற்பது ரூபாயை அவர் அன்று பிடித்துக்கொண்டு விடுவார். ஏழரை ஸ்டாம்புக்குப் போய்விடும். ஆனால் வீட்டிற்குப் போகும்போது என்னிடம் அறுபது ரூபாய்தானிருக்கும்."

"அது எப்படி?" என்று கேட்டேன்.

"நண்பர்களிடம் அந்த மாதத்தில் வாங்கின சில்லறைக் கடனெல்லாம் முதல் தேதியே திருப்பிக் கொடுத்தால் தானே மறுபடியும் நான் கேட்கும்போது கொடுப்பார்கள்? ஐந்தும் பத்துமாக வெளியில் வாங்கின கடன் மொத்தம் நாற்பது ரூபாய் வரையில் இருக்கும்."


"ஆனால் இந்த மாதிரி செய்வதில் மாதம் முப்பது, நாற்பது ரூபாய் துண்டு விழும்போலிருக்கிறதே. அதை எப்படி சமாளிப்பீர்கள்?"

"மாதா மாதம் பெருகிக் கொண்டே போகும் சிறிய கடனை அடைப்பதற்கு வருஷத்துக்கு ஒரு தடவை பெரிய கடன் வாங்குவேன். இது மாதிரி வாங்கின பெரிய கடனே மொத்தம் நாலாயிரம் ரூபாய் இருக்கிறது."

"செலவைக் கொஞ்சம் குறைக்கக் கூடாதோ? பார்க்கப் போனால் உங்கள் குடும்பத்துக்குக் காப்பிச் செலவே மாதம் முப்பது ரூபாய் ஆகும்போலிருக்கிறதே?"

"காப்பியா? அதை நான் கடைசியாகக் குடித்தது என் கல்யாணத்தின் போதுதான். என் குழந்தைகளுக்கு காப்பி என்னவென்றுகூடத் தெரியாது!"

நிறுத்து!



"அப்போது சினிமா செலவு கொஞ்சம் அதிகமாயிருக்கும் போலிருக்கிறது."

"சினிமாவா? நான் கடைசியாகப் பார்த்த சினிமா இருபது வருடங்களுக்கு முன்னால் வந்த 'வள்ளி திருமணம்'தான். குழந்தைகள் மட்டும் சில சமயம் சினிமாவுக்குப் போய்விட்டு வருகிறார்கள்."

"அப்போது உங்களுக்கு ஆபீஸுக்குப் போகவர பஸ் செலவு அதிகமாயிருக்கும் போலிருக்கிறது. இங்கிருந்து உங்கள் ஆபீஸ் மூன்று மைல்தானே? காலையில் ஆபீஸுக்குப் போகும்போது மாத்திரம் பஸ்ஸில் போய்விட்டுத் திரும்பி வரும் போது காற்றுட நடந்து வந்துவிடலாமே! அப்படிச் செய்தால் பஸ் செலவு பாதியாகக் குறையுமே!"

இதை நான் சொன்னபோது குடும்பராவ் பரிதாபமாகச் சிரித்தார்!

"மாதம் பிறந்து சம்பளம் வந்ததும் நாலு நாள் பஸ்ஸில் ஆபீஸுக்குப் போய்விட்டுப் பஸ்ஸில் திரும்பி வருவேன். அப்புறம் நாலு நாள் போகும்போது மட்டும் பஸ்ஸில் சென்று வரும்போது நடந்து வருவேன். மற்ற நாளெல்லாம் போகும்போதும் நடைதான்; வரும்போதும் நடைதான்!"

"மத்தியதர வகுப்பார்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்கிறீர்களே, உங்களுக்கு அப்படி என்ன கஷ்டம்? வரும்படிக்கு மிஞ்சின செலவு தான் என்ன?"

"சொல்லுகிறேன் கேளுங்கள்! இந்தச் சாவடியிலிருக்கும் இரண்டு ரூமுக்கும் வாடகை இருபத்தைந்து ரூபாய். மளிகைக் கடைச் சாமான்கள் மாதம் நாற்பது ரூபாய். ரேஷன் அரிசி வாரம் எட்டு ரூபாய். அதாவது மாதம் முப்பத்திரண்டு ரூபாய். அதைத் தவிர 'பிளாக் மார்க்கெட்' அரிசி பதினைந்து ரூபாய். குழந்தைகளுக்கு வேறு ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும் சாப்பாடாவது சரியாகப் போட்டால்தானே அவர்கள் நடமாட முடியும்? விறகு வகையறு பத்து ரூபாய். நான்கு பையன்களுடைய மாதப் பள்ளிக்கூடச் சம்பளம் மொத்தம் இருபத்து மூன்று ரூபாய். கறிகாய் சில்லறைச் செலவு பத்து ரூபாய். இதைத் தவிர வைத்தியச் செலவு, விருந்தாளிச் செலவு, எதிர்பாராத செலவுகள் முதலியன."

"ஏதாவது 'இன்ஷூர்' செய்திருக்கிறீர்களோ?" என்று கவலையுடன் கேட்டேன்.

கிருபர் வேஷத்துடன் வந்த இன்ஷூரன்ஸ் ஏஜண்டோ என்ற சந்தேகத்துடன் என்னைப்பார்த்து, "இன்ஷியூரன்ஸ் கட்டப் பணம் இருந்தால் அதை வைத்துக்கொண்டு ஒருவாரம் காலக்ஷேபம் நடத்தலாமே!" என்றார்.

"அப்போது ஏதாவது உண்டியாவது வைத்துக்கொண்டு உங்களால் முடியாவிட்டால் உங்கள் மனைவியைக் கொண்டாவது ஏதாவது பணம் சேர்த்துக் கொண்டு வருவது தானே!"

"இதுவரை ஆயிரம் உண்டி உடைத்தாய் விட்டது. மிகவும் மூடையாய்ப் பணம் வேண்டியிருக்கும்போது ஒரே அடிதான். உண்டி உடைந்து அதிலிருக்கும் ஒண்ணே முக்கால் ரூபாய் காலணாவும் அரையணாவுமாக வெளியே வந்து கலகல வென்று விழும்."

"அப்படியானால் உங்கள் கஷ்டம் தீர வழி என்ன?"

"என் கஷ்டம் தீர வழி இருந்தாலும் அது இந்த ஜன்மத்தில் நடக்காது!"

"என்ன வழி!" என்று ஆவலுடன் கேட்டேன்.

"அதைத்தான் நம் அரசியல் வாதிகள் கிராமபோன் பிளேட் மாதிரி தினம் ஒப்புவிக்கிறார்களே! விலைவாசிகள் குறைய வேண்டும். கள்ள மார்க்கெட் ஒழிய வேண்டும். பெரிய முதலாளிகள் தங்கள் லாபத்தையே பெரிதாகக் கருதாமல் பொதுஜனங்களின் சௌகரியங்களையும் கவனிக்க வேண்டும். குழந்தைகளுக்கு இலவசமாகப் படிப்புச் சொல்லித் தர வேண்டும். தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் சுயநலத்தைக் கவனிக்காமல் பொதுஜன சேவையில் ஈடுபட வேண்டும்" என்று சொன்னார்.

குடும்பராவ் சொன்னதுபோல இதெல்லாம் இந்த ஜென்மத்தில் எங்கே நடக்கப் போகிறதென்று எண்ணிக் கொண்டே அவரிடம் விடை பெற்றுக் கொண்டேன்.

அவர் அறையிலிருந்து வெளியே போகும் போது வழியில் நான் முன்பு பார்த்த சிறிய கும்பல் பெரியதாய்ப் போய் எதையோ ஒன்றைச் சுற்றி நின்று கொண்டிருந்தது. கும்பலின் நடுவில் சிலர் குனிந்து எதையோ எடுத்துக்கொண்டிருந்தார்கள். அங்கே அப்படி என்ன தான் இருக்கும் என்ற ஆச்சரியத்துடன் கும்பலுக்கு நடுவில் சென்று பார்த்தேன், கேவலம் ஒரு இரண்டடிக் குழாய் கண்ணீரைச் சொட்டு சொட்டாக வடித்துக் கொண்டிருந்தது! ஒருவேளை ஸ்ரீமான் குடும்ப ராவ் போன்ற ஆயிரமாயிரம் மத்தியதர வகுப்பார்களை நினைத்துத் தான் அந்தக் குழாய் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்ததோ என்னவோ!



ஜகதீசன் அன்று ரயிலிலிருந்து இறங்கி வீடு நோக்கி வந்துகொண்டிருந்தபோது, சொல்லமுடியாத களைப்புடன் மனவேதனையும் அவனை வாட்டிக்கொண்டிருந்தது. அவன் சென்னையை விட்டுக் கிளம்பிச் சரியாகப் பதினைந்து தினங்கள் ஆகியிருந்தன. அவன் ஒரு பெரிய இன்ஷூரன்ஸ் கம்பெனியின் மானேஜராக இருந்தான். அடிக்கடி வெளியூர்களுக்குப் போய்ச் சுற்றுப் பிரயாணம் செய்யும் அவசியம் ஏற்பட்டிருந்தது. வீட்டில் தங்குவதற்குச் சில காலமாகக் கொஞ்சமும் இஷ்டமில்லாததும் அவன் ஓயாத சுற்றுப் பிரயாணத்தின் முக்கிய காரணமாகும்.

ஒவ்வொரு தடவையும் அவன் சுற்றுப் பிரயாணத்திலிருந்து திரும்பும்போது, "ஐயோ, வீட்டுக்குப் போய்த் தொலைக்க வேண்டியிருக்கிறதே!" என்று கசந்துகொண்டுதான் வருவான். சில நாட்கள் சென்னையில் இருந்துவிட்டு மீண்டும் சுற்றுப் பிரயாணத்தைத் தொடங்கிவிடுவான்.

இந்த மனவேதனைக்கெல்லாம் மூல காரணம் அவன் மனைவி பார்வதி. ஒவ்வொரு தடவையும் வீட்டுக்கு வரும்போது, வேதனைக்கு மத்தியில் அவன் மனதில் ஒரு சிறு ஆசை தளிர்விடும்; ஒரு சிறு நம்பிக்கை தலைகாட்டும். ஆனால் அவன் பார்வதியின் முகத்தைப் பார்த்ததும் அவை கருகிப்போகும். பார்வதியின் மனப்போக்கு மாறவில்லை என்பதை வந்தவுடனே அவன் உணர்ந்துகொள்வான்.

இந்தத் தடவையும் டாக்ஸியில் வீட்டுக்கு வந்துகொண்டிருக்கும்போது காரிலிருந்தபடியே வீட்டை நோக்கி ஆவலுடன் எட்டிப் பார்த்தான். ஏற்கெனவே அந்த வண்டிக்கு வருவதாக அவன் எழுதியிருந்தான். பதினைந்து நாட்களாக ஊரில் இல்லாத கணவனை எதிர்பார்த்துத் துடிக்கும் உள்ளத்துடன் முகத்தில் ஆர்வம் பொங்க வாசலில் நின்று பார்வதி தன்னை வரவேற்க மாட்டாளா என்று எட்டிப் பார்த்தான். ஊஹூம், இந்தத் தடவையும் வாசலில் பார்வதியைக் காணோம்!

கார் நின்றதும் வேதனையுடன் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டுக் கீழே இறங்கினான். சேவகன் பெட்டி, படுக்கைகளைக் கொண்டு வர ஜகதீசன் உள்ளே சென்றான். வயதான அவன் தாயார் ஹாலின் ஒரு மூலையில் ராமஜபம் செய்து கொண்டிருந்தாள். 'டக்', 'டக்'கென்று காலில் அணிந்திருந்த பூட்ஸ் சத்தம் கேட்க உள்ளே வந்தான் ஜகதீசன். சரியாகக் கண் தெரியாத அவன் தாயார் அவன் பூட்ஸ் சத்தத்தைக் கேட்டுவிட்டு, "யாரு? ஜகதீசா! வந்துட்டாயா?" என்று கூறி மகிழ்ந்தாள்.

"ஆமாம், பார்வதி எங்கே?" என்று கேட்டான் ஜகதீசன்.

"காலம்பர காப்பி சாப்பிட்டுவிட்டு உள்ளே போனாள். பேச்சு மூச்சே காணோம்" என்றாள் தாயார்.

ஜகதீசனுக்குக் கோபம் வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். முதலில் ஸ்நான அறைக்குப் போய்க் குளித்துவிட்டுச் சமையலறைக்குப் போய்ப் பரிசாரகனைச் சாதம் போடச் சொல்லிச் சாப்பிட்டுவிட்டு 'டிரஸ்' செய்து கொண்டான். அப்பொழுதும் பார்வதி வெளியில் வரவில்லை.

கண்ணாடியருகில் நின்று 'கிராப்'பை வாரி விட்டுக் கொண்டான். அவன் சுருட்டை மயிர் படிவதே இல்லை. "ஆமாம்; பார்வதியின் குணம் மாதிரி



இருக்கிறது!" என்று நினைத்துக் கொண்டான். தன் கண்களிலிருந்த கோபத்தைப் பார்க்க அவனுக்கே பயமாயிருந்தது.

ஆபீசுக்குப் புறப்படுமுன் நேரே பார்வதி இருந்த அறைக்குப் போய் உள்ளே எட்டிப் பார்த்தான். மெய் மறந்த நிலையில் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள் அவள். கதவைத் திறந்ததைக்கூட அவள் கவனிக்கவில்லை என்று தோன்றியது.

"இங்கே பார். பார்வதி! நாவல் எந்த மட்டில் இருக்கிறது?" என்றான். அவன் அருகில் சென்று எப்பொழுது பேச ஆரம்பித்தாலும் "இங்கே பார்!" என்ற முகவுரையுடன்தான் ஆரம்பிப்பது வழக்கம்.

பார்வதி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்துவிட்டுச் சட்டென்று எழுந்திருந்தாள். கனவு உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அவள் எதிரில் இருந்த முகத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள முயற்சிப்பவள்போல் ஜகதீசனைப் பார்த்தாள். பிறகு ஒரு புன்சிரிப்புடன், "எப்பொழுது வந்தீர்கள்? நீங்கள் திரும்பி வருகிறதற்குள் இந்தக் கட்டத்தை முடித்து விடலாம் என்று ஏழரை மணிக்கு எழுத உட்கார்ந்தேன். நேரம் போனதே தெரியவில்லை" என்றாள்.

"இங்கே பார்! எப்பொழுதுதான் இந்த நாவல் முடியப் போகிறது?"

கோபத்தையும் மனக்கசப்பையும் அவன் குரல் காண்பித்து விட்டது. ஆனால் பார்வதி அவற்றை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

"அநேகமாக இந்த மாதத்திற்குள் முடித்து விடுவேன். நானுந்தான் இரவு பகலாக இந்தக் கதையையே கனவு கண்டு கொண்டு, தலை நிமிராமல் எழுதிக் கொண்டிருக்கிறேன். நீங்களே சொல்லுங்கள்: இந்த வேலையைத் தவிர வேறு வேலையில் நான் அனாவசியமாகக் காலத்தை வீணாக்குகிறேனா?"

ஏதோ சொல்லவந்த ஜகதீசன் மென்று விழுங்கினான். "சே, சே! அதெல்லாம் ஒன்றுமில்லை. உன் மாதிரி எடுத்த காரியத்தில் சிரத்தை யாருக்கும் வராது" என்றான். பார்வதியின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

"ஆமாம். இந்த நாவல் தமிழ் நாட்டுக் குடும்ப வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டது...."

"குடும்ப வாழ்க்கையையா! அதற்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?"

அவன் சொன்னதைப் பார்வதி காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"இந்த நாவலுக்குத் தலைப்பு என்ன கொடுப்பது என்று தெரியவில்லை. நான் நாலு தலைப்புக்கள் யோசித்து வைத்திருக்கிறேன். 'லட்சிய வாழ்க்கை,' 'எது கனவு?'......"

"இங்கே பார்! எனக்கு ஆபீசுக்கு நாழியாகி விட்டது. உன்னைப் போல் நானும் இலக்கிய ஆராய்ச்சியில் இறங்கினால் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியை மூட வேண்டியதுதான். மேலும் நாளை மறுபடியும் 'காம்பு'க்குக் கிளம்புகிறேன். அதற்கான ஏற்பாடுகளை உடனே கவனிக்க வேண்டும்."

மீண்டும் தான் கிளம்புவதாகச் சொன்னதைக் கேட்டுப் பார்வதி திடுக்கிடுகிறாளா என்று கடைக்கண்ணால் கவனித்தான் ஜகதீசன். ஆனால் அவள் முகத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை.

"நீங்கள் வருவதற்குள் அநேகமாகக் கதாநாயகனின் ஆஸ்பத்திரி வாழ்க்கை முடிந்துவிடும். அப்புறம் வீட்டுக்கு வந்து விடுவார். இது கதையில் மிகவும் நெருக்கடியான கட்டம்......"

ஜகதீசன் நீண்ட பெருமூச்சு விட்டான். நகத்தைக் கடித்துக் கொண்டே சிறிது நேரம் நின்றான். பிறகு, பேசாமல் திரும்பி வெளியே நடந்தான். பார்வதியும் ஆறுதலுடன் மறுபடியும் எழுத உட்கார்ந்து விட்டாள்.

• • •

பார்வதி சென்னையில் ஒரு பிரபல வக்கீலின் பெண். அவள் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே கதைகளும் கட்டுரைகளும் எழுத ஆரம்பித்து விட்டாள். அறிஞர்களின் நூல்களைச் சதா படித்துக் கொண்டிருப்பாள். அவளுக்கு இலக்கியத்திலுள்ள ஆர்வம் தெரிந்து தான் ஜகதீசன் அவளைக் கல்யாணம் செய்து கொண்டான். அவள் கல்யாணமாகிப் புக்ககம் வந்து நான்கு மாதம்தான் ஆகியிருந்தது. ஆனால் புருஷனைப் பற்றிய சிந்தனையே யில்லாமல் அவள் கற்பனை உலகில் மூழ்கி விடுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

ஆரம்பத்தில், ஜகதீசன் மனைவியின் இலக்கிய ஆர்வத்தைத் தடை செய்ய விரும்பவில்லை. ஆனால் அவள் மனம் புண்படாமல் தன் கடமையை எப்படித் தெரிந்து கொள்ளும்படி செய்வது என்று யோசித்தான். ஜாடை மாடையாகச் சொல்லிப் பார்த்தான். வீட்டில் தங்காமல் வெளியூர்களுக்குச் செல்ல ஆரம்பித்தான். அப்படியும் பார்வதி அவன் மனக் கசப்பைப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. மனைவியிடம் சண்டை போடுவதோ நாவல் நோட்டைக் கிழித்தெறிவதோ, மிருகத்தனமான காரியமாக அவனுக்குத் தோன்றியது. இது பற்றித் தன் மைத்துனனிடமோ, வேட்டகத்து மனிதர்களிடமோ புகார் செய்வதும் பரிகசிக்கத் தகுந்ததாக இருக்குமென்று அவன் நினைத்தான்.

2

ஆபீசுக்கு வந்த ஜகதீசன் நேரே தன் அறைக்கு வந்தான். மேஜை மீது ஐஸ் போட்ட மோர் ஒரு கண்ணாடி டம்ளரில் வைத்திருப்பதைப் பார்த்தான். ஆபீசுக்கு வந்ததும் ஒரு டம்ளர் ஐஸ் மோர் சாப்பிட்டு விட்டுத்தான் அவன் வேலையை ஆரம்பிப்பது வழக்கம்.

"இங்கே பார், ராமஸ்வாமி! நான் இன்று வருவதாகக்கூட ஆபீசுக்கு எழுதவில்லையே. அப்படியிருந்தும் எனக்கு முன்னே என் மேஜையில் மோர் தயாராக இருக்கிறதே!" என்றான் ஜகதீசன் தன் குமாஸ்தா ராமஸ்வாமியைப் பார்த்து.

"உங்கள் காரின் 'ஹார்ன்' சத்தத்திலிருந்தே நீங்கள் வருகிறது தெரியும். அந்தச் சத்தத்தைக் கேட்டவுடனே பையனை அனுப்பி மோர் வாங்கிக் கொண்டு வரச் சொன்னேன்!"

"எல்லாக் காருக்கும் ஒரே மாதிரி தானே 'ஹார்ன்' இருக்கிறது?"

"இருக்கலாம். ஆனால் அதை நீங்கள் உபயோகிக்கிற மாதிரியே வேறு. தெருவில் போகிறவர்கள் கன்னத்தில் அறைகிறமாதிரி சிலர் ஹாரனை அலற விடுவார்கள். நீங்களோ தெருவில் போகிறவர்களைத் தள்ளிக் கொள்ளச் சொல்லிக் கேட்பது போல மிருதுவாக ஹாரனைத் தடவிக் கொடுப்பீர்கள். சிறிய விஷயத்தில்கூட ஒருவருடைய சுபாவம் இன்னதென்று தெரியுமல்லவா?"

ஜகதீசன் வியப்புடன் குமாஸ்தாவைப் பார்த்தான். ஆபீசிலுள்ளவர்கள் தன் குண விசேஷத்தில் சின்னஞ்சிறு அம்சத்தைக்கூடத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தான் உயிரோடிருப்பதே பார்வதிக்குத் தெரியாமல் இருக்கும்போது மோட்டார் ஹார்னை உபயோகிக்கிற விதம்தானா தெரியப் போகிறது?

அன்று இரவு ஜகதீசன் நீலகிரிக்குப் பயணமானான். மனைவியுடன் ஒருதடவை



இன்பமாக மலைவாசம் செய்ய வேண்டுமென்பது அவன் விருப்பம். ஆனால் அது அவனுக்குக் கிட்டவில்லை. மலைமீது பார்த்த ஒவ்வொன்றும் ஜகதீசனுக்கு மனைவியை ஞாபகப்படுத்தியது. மலைகளை மறைத்துக் கொண்டிருந்த பனித்திரை கூடச் சூரிய வெளிச்சத்தில் விலகிவிடுகிறது. ஆனால் அவர்களுக் கிடையில் இருந்த இலக்கியத்திரை மட்டும் விலகாதா? பார்வதி தன்னை ஒவ்வொரு நிமிஷமும் நினைக்கும்படி செய்ய என்ன செய்வது? அவனுக்குத் தோன்றிய பல யோசனைகள் சிறு பிள்ளைத்தனமாகப் பட்டது.

எப்படியோ ஒரு மாதத்தைக் கழித்துவிட்டு ஜகதீசன் வீட்டுக்குத் திரும்பினான். அவன் வந்ததும் பார்வதி குதூகலத்துடன் ஒரு புஸ்தகத்தைப் பிரித்துப் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். "வாருங்கள்! கடிதமே போடவில்லையே!" என்று எதுவும் கேட்கவில்லை பார்வதி. "பார்த்தீர்களா, புஸ்தகத்தை! இவ்வளவு சீக்கிரத்தில் நாவலை எழுதி முடித்துவிட்டுப் புஸ்தகத்தைக் கண்ணால் பார்ப்போம் என்று நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. இந்தாருங்கள்; படித்துப் பாருங்கள்!" என்றாள் பார்வதி குதூகலம் பொங்க.

ஜகதீசனுக்குத் தாங்க முடியாத கோபம் வந்தது. புஸ்தகத்தைப் பிடுங்கித் தூர எறியலாமா என்று நினைத்தான். ஆனால் பார்வதியின் முகத்தில் பொங்கிய உணர்ச்சி அவனைச் செயலற்றவனாகச் செய்து விட்டது. 'இப்படியும் ஒரு பித்து உண்டா? சுவர்க்கத்தில் இருப்பவர்கள் முகத்தில்கூட இவ்வளவு சந்தோஷம் இருக்குமா!' என்று அவன் யோசித்தான். "எனக்குத் தலையை வலிக்கிறது; அப்புறம் படிக்கிறேன்" என்றான்.

"முடியாது; எந்தப் பக்கத்தையாவது பிரித்து நாலு வரி படித்தால்தான் எனக்குத் திருப்தியாக இருக்கும்" என்றாள் பார்வதி.

இந்தச் சமயத்தில் அவன் மைத்துனன் ராஜகோபாலன் அங்கு வந்து சேர்ந்தான். அவனிடம், "அண்ணா! நான் எழுதிய புஸ்தகம் வெளி வந்துவிட்டது. அதில் இவர் நாலு வரி படிக்கப் போகிறார். கேளேன்!" என்றாள் பார்வதி.

"ஜகதீசா! வாசியேன் நாலு வரி. கேட்போம்?" என்றாள் மூலையிலிருந்த தாயார் எழுந்து வந்து. ஜகதீசன் புஸ்தகத்தைத் திறந்து ஒரு இடத்தைப் படித்தான்......

"முரளீதரன் கதவைத் திறந்து கொண்டு எதிரில் வந்து நின்றான்..." என்று வாசித்தான் ஜகதீசன்.

"முரளீதரன்தான் கதாநாயகன்!" என்று விளக்கம் செய்தாள் பார்வதி.

"முரளீதரன் தலை மயிர் சுருட்டை. அவன் கிராப்பை எவ்வளவு வாரி விட்டுக் கொண்டாலும் படியாது. தலையைக் கொஞ்சம் சுமாராய் அழகாக வைத்துக் கொள்ள முக்கால் மணி நேரமாவது வாரி விட்டுக் கொள்ள வேண்டும்; இந்தச் சிரமத்தை உத்தேசித்து. வழக்கமாகப் பத்து மணிக்கு இலை போடும் அவன் மனைவி மாலதி, ஒன்பதே கால் மணிக்கே இலை போடத் தொடங்கினாள்......"

"பேஷ். பேஷ்! கதையில் வருகிறவன் நம் ஜகதீசன் மாதிரி போலிருக்கு!" என்று கூறிச் சிரித்தாள் ஜகதீசனின் தாயார்.

ஜகதீசன் முகத்தில் ஈயாடவில்லை. இன்னொரு பக்கத்தைப் பிரித்து, மேலே வாசித்தான்.

"முரளீதரன் நகத்தைக் கடித்துக் கொண்டே சாஸ்திரிகளைப் பார்த்து, 'சரி, எல்லாவற்றுக்கும் அப்பாவையும் கலந்து கொண்டு கடிதம் எழுதுகிறேன்' என்றான். பெண்ணின் தகப்பனார் உள்ளே போய் ஒரு டம்ளரில் ஜலம் கொண்டுவந்து அவன் கையில் ஊற்றப் போனார்......"

மைத்துனன் ராஜகோபாலன் உரக்கச் சிரித்தான். "ஏது, பார்வதி! நீ இப்படி உன் அகத்துக்காரர் மானத்தை வாங்க வேண்டியதில்லை. மாப்பிள்ளை! இனிமேல் நகத்தைக் கடிக்க மாட்டீர்களே!" என்றான்.

ஜகதீசன் முகத்தில் ஆவலும் ஆதுரமும் பொங்க, இன்னொரு பக்கத்தைப் புரட்டிப் பரபரப்புடன் வாசித்தான்:

"'இங்கே பார்' என்று அடிக்கடி சொல்லுகிறீர்களே, அத்திம்பேரே! இங்கே என்ன இருக்கிறது? எதைப் பார்க்கிறது? பூதக் கண்ணாடி வைத்துக் கொண்டு பார்த்தாலும் ஒன்றும் தெரியவில்லையே!' என்று மைத்துனி முரளியைக் கேலி செய்தாள். 'என்னைக் கேலியா செய்கிறாய்?' என்றான் முரளி. 'இங்கே பார் என்று இனிமேல் சொல்லமாட்டேன்' என்று பத்துத் தடவை 'இம்போஸிஷன்' எழுதுங்கோ, கேலி செய்யவில்லை' என்றாள் மைத்துனி......"

ராஜகோபாலன் சிரித்தான். ஜகதீசன் முகத்திலும் புன்னகை தாண்டவமாடியது. மேலே ஆவலுடன் படித்தான்:

"தூரத்தில் மோட்டார் ஹார்ன் சத்தம் கேட்டதும், வருவது முரளீதரன் என்று தெரிந்து கொள்வாள் மாலதி.

அவன் பரபரப்பு உச்சநிலையை அடையும். எழுந்து ஓடிப்போய்க் கணவனைக் குதூகலத்துடன் வரவேற்க வேண்டுமென்று தோன்றும். ஆனால்...பாவம், அவனால் அப்படிச் செய்ய முடியவில்லை. சற்று நேரம் கழித்து அவன் கணவன் அருகில் சென்றான். அவன் முகத்தில் சோகம் ததும்பியது. 'ஆபீஸிலிருந்து வருகிற கணவனை உன்மாதிரி புறக்கணிக்கும் ஸ்திரீயும் உண்டா?' என்று கேட்பது போல் இருந்தது அவன் பார்வை ஒருகணம் மனைவியின் மீது கோபம் கொள்வான் முரளி. மறுகணம் அது மறையும்......"

மேலே பரபரப்புடன் வாசிக்கத் தொடங்கிய ஜகதீசன் கையிலிருந்து வெடுக்கென்று புஸ்தகத்தைப் பிடுங்கினாள் பார்வதி. "சாப்பிட்டுவிட்டுச் சாவகாசமாய்ப் படிக்கலாம், வாருங்கள்!" என்று சாப்பிட அழைத்தாள். எல்லோரும் சாப்பிட்ட பிறகு, ஜகதீசன் பார்வதியைத் தனியாகச் சந்தித்தான். "பார்வதி, உன்னைப் பற்றி நான் எவ்வளவு தவறாக நினைத்தேன், தெரியுமா? நாவல் எழுதுகிற மும்முரத்திலே என்னை அடியோடு மறந்து விட்டாயோ என்று நினைத்தேன். ஆனால், நாவல் எழுதும்போது கூட ஒவ்வொரு நிமிஷமும் என் ஞாபகமாகவே நீ இருந்திருக்கிறாய் என்பது இப்பொழுதல்லவா எனக்குத் தெரிகிறது?" என்றான் மகிழ்ச்சி பொங்க.

"உங்களைத் தவிர வேறு ஞாபகம் எனக்கு இருக்க முடியுமா?"

"ஆமாம், என்னையேதான் கதாநாயகனாக மாற்றியிருக்கிறாய் என்பதில் என்ன சந்தேகம்? என் மனதிலுள்ள ஏக்கத்தையும் கோபத்தையும் இத்தனை நாள் தெரிந்துகொண்டுதானே அதை லட்சியம் செய்யாமல் இருந்திருக்கிறாய்? கொடு, இப்படிப் புஸ்தகத்தை! கடைசியில் முரளி என்ன கதியை அடைகிறான் என்று பார்க்கலாம்......"

புத்தகத்தின் முதல் பக்கத்தை அப்பொழுதுதான் ஜகதீசன் பார்த்தான். "என் கணவருக்குச் சமர்ப்பணம்" என்று அச்சிட்டிருந்ததைப் படித்துவிட்டு உணர்ச்சி ததும்ப மனைவியைப் பார்த்தான்.


"புக்ககம் வந்தவுடன் ஒரு நாவல் எழுதி அதை உங்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்பது என் ஆசை. அது இன்று நிறைவேறிவிட்டது. இனி......"

"இனிமேல் இன்னொரு நாவல் எழுத ஆரம்பித்து விடமாட்டாயே?"

"இனிமேல் அல்லும் பகலும் அனவரதமும் உங்களுக்குப் பணிவிடை செய்வதில்......"


மேலேபார்வதியினால்பேசமுடியவில்லை.

இங்கும் அங்கும்



ஏற்காத கதை

ரவீந்திரநாத் டாகூர்



தமிழாக்கம்: கு. நா. குமாரஸ்வாமி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அகிலனைப் போல் நானும் இந்த மாதிரி ஏதாவது ஒரு விதமாகச் செய்தால்தான் என்னைக் கொஞ்சமாவது கவனிப்பார்கள். அத்தை ஏனோ யாத்திரை மேல் போனாள்? அவள் இருந்தபோது வேலைக்காரர்கள் நியமப்படி எனக்கு வேண்டியவற்றைச் செய்வார்கள். கூப்பிட்ட குரலுக்கு யாராவது ஓடி வருவார்கள். இப்பொழுதோ தாகத்துக்கு ஒரு டம்ளர் ஜலம் கொடுக்க மேதினிபுரியிலிருந்து வந்திருக்கும் ஸ்ரீமான் ஜலதாரனுக்கு (அத்தை எனக்காக வைத்த சமையல்காரன்) எத்தனை நாழிகையாகிறது, தெரியுமா? வேளைக்கு மருந்து சாப்பிட என் கவனத்தை நம்பித்தான் இருக்கவேண்டும். நானே எழுந்து என்னுடைய காரியங்கள் சிலவற்றைச் செய்து கொள்ளப் பார்ப்பேன்; முடியாது. இரண்டொரு தரம் அமியாவை உதவிக்குக் கூப்பிடுவேன். நாம் 'ஜைம்' கொட்டும்போதெல்லாம் அவன் தலையைமட்டும் நீட்டுவான். அவனுக்கு என்ன அவசரமான அலுவலோ என்று நானும் "அமியா, இன்றைக்கு ஏதாவது முக்கியமான மீட்டிங்கா?" என்பேன். அமியா அதற்கு, "இருந்தால்தான் என்ன, அண்ணா! உங்களைக் கவனிக்க எத்தனை நாழி ஆகப்போகிறது?" என்பான். "எதற்கு, அவசியமில்லை. மீட்டிங்கைக் கவனி, முன்னால்!" என்பேன். இந்தக் கடமையை ஆற்றுவதன் முன்னர் அகிலன் வந்து காத்துக் கொண்டிருப்பான் அவனுக்காக. இதனால் கடமையாற்றும் உத்ஸாகம் அவனுக்கு ஆறு மடங்காகக் கிளம்பும். அதற்கு மேல் நான் விவரிக்க வேண்டியதில்லை. அகிலன் மாத்திரமா? தேசத்திற்காகப் படிப்பையே விட்டுத் தொலைத்த இளைஞர் பலர் என் வீட்டின் கீழ்க்கட்டில் அமியா வழங்கும் தேநீரையும் உணவையும் பெற்றுக் கோலாகலமாக நடத்திக்கொள்வார்கள். தேசமாதா, புதுமையுகத்துப் பெண்ணரசி என்றெல்லாம் அமியாவைத் துதி செய்வார்கள். பதவியில் இரண்டு தினுசு. ராய் பஹதூர் போன்றவை, மடித்து இஸ்திரி போட்ட அங்கவஸ்திரத்துக்கு நிகரானவை. இவற்றை ஏற்கும் ஆண் விசாரமின்றி அணிந்து கொள்ளச் சௌகரியம் வாய்ந்தவை. மற்றொரு விதப் பதவி: இதைப் பெற யார் கொடுத்து வைத்தவர்

-களோ அதை அல்லும் பகலும் காக்க வேண்டிய தொல்லை அவர்களுக்கு ஏற்படுகிறது. இதற்குப் போட்டியிடுபவர் அதிகம். சற்றுக் கண்ணயர்ந்தால் இந்தப் பட்டம் வேறொருவருக்குப் போய்விடும்!

அமியாவுக்கும் இந்த நிலையே எப்போதும். கலகலப்பும் உத்ஸாகமும் நிரம்பி இருந்தால் ஒழிய அவன் அந்த உன்னத பதவியில் நீடித்திருக்கவே முடியாது. சாப்பிடவோ, சற்று இளைப்பாறவோ அவனுக்குத் துளியேனும் ஒய்வில்லையென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! "என்ன உழைப்பு, என்ன தியாகம்!" என்று ஊரெங்கும் அவனுடைய துதியாகவே இருக்கும். யாராவது, "இப்படி வேலைசெய்தால் உடம்பு எத்தனை நாட்களுக்குத் தாங்கும்?" என்னும்போது அமியாவின் முகத்தில் ஏளனச் சிரிப்பு உலவும். அவனுடைய பக்தர்கள், "சற்றுச் சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள்; நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் மீதி காரியத்தை!" என்றால், அவன் வருத்தமே கொள்வான்.

சிரமத்திற்குப் பயந்து பின் வாங்குவதா? துன்பத்தை அனுபவிப்பதில் உள்ள கௌரவம் அற்ப சொற்பமானதா? அவன் போற்றும் மகா தியாகிகளின் குழுவில் நானும் ஒருவனேன். வெஞ்சிறைக்குள் சென்று மீண்ட அண்ணனன்றோ நான்! பாரதம் விடுதலை பெறத் தம் வழியில் உழைத்த இளம் வீரத் தியாகிகளான உல்லாஸகர், நானுபி, வாரீன், உபேந்திரன் போன்ற சிறந்த மணிகளிடையே நானும் இடம் பெற்றேன். கீதையின் இரண்டாம் அத்தியாயம் யுத்த தர்மத்தைப் போதிப்பது. கடைசி அத்தியாயம் மோக்ஷ தர்மத்தைக் காட்டுவது. கீதையின் இரண்டாவது அத்தியாயத்தைக் கடந்து கடைசி அத்தியாயத்திற்கு வந்திருக்கும் இந்த அண்ணாவின் உண்மை நிலையைக் கண்டு கொள்ள அவனுக்கு அவகாசம் ஏது பாவம்! என்ன அபாரமான 'ஸாக்ரிபைஸ்' (தியாகம்)! என்றைக்காவது எந்தக் காரணத்தைக் குறித்தாவது அவனுடைய கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் வரத் தவறி விட்டால் நான் உணர்வூட்ட, "அமியா, தனிப்பட்ட ஆளுக்காக நீ இருக்கவில்லை. இந்தப் புது யுகத்தில் புரட்சி எழுப்பவே நீ வந்திருக்கிறாய்!" என்பேன். என்னுடைய வார்த்தையை அவன் ஆழ்ந்த முகத்துடன் மௌனமாக ஏற்றுக் கொள்வான். சிறைக்குச் சென்ற பிறகே சிரிப்பும் குதூகலமும் என் உள்ளத்தில் பெருகி ஓடுகின்றன; என்னைப் புரிந்து கொள்ளாதவர்களே 'யாருடனும் பழகாத பேர்வழி; உம்மணா மூஞ்சி!' என்பார்கள் என்னை. அது என் வெளித்தோற்றம். படுக்கையில் படுத்த வண்ணம் கூரையிலுள்ள மரத் துண்டுகளை வெறித்து நோக்கிச் சொல்லிக் கொள்வேன். 'விமுகா பார்தவா யாந்தி:' (வேண்டியவர்களும் வெறுத்துச் செல்கின்றனர்.) சொறி நாயொன்று எங்கிருந்தோ வந்து என் அறைக்குப் பக்கத்திலுள்ள வராந்தாவில் அடைக்கலம் புகுந்திருந்தது. திடீரென்று அதன் ஞாபகம் எழுந்தது. அதன் உடலில் ஓரிடத்திலாவது ரோமத்தைக் காணோம். தோல் சுருங்கி எலும்பெடுத்துச் சாகும் நிலையில் இருந்தது. அருவையினால் அதை நான் விரட்டி அடிப்பேன். இன்றோ, 'அதை ஏன் அப்படிச் செய்தோம்?' என்று எண்ணிக் கொள்கிறேன். மரணத்தின் கோரமையே என்னை அதன்பால் இரக்கம் கொள்ளச் செய்தது. அதன் சுவரமெல்லாம் அடங்கியே விட்டது. என் நிலையை அதோடு வைத்து ஒப்பு நோக்கினேன். சுற்றிலும் இலங்கும் ஜீவ வேகத்திற்கிடையே என்னுடைய தொய்வு, நீரோட்டத்திற்குத் தடைக்கலாக நிற்கும் பாசியாகவே தோன்றியது. உயிர் வாழ வேண்டுமென்ற ஆசையை அறவே ஒழித்து நான் ஆறுதலுக்குக் கீதையில் மனத்தைச் செலுத்தினேன். அச்சமயம் என் கால்களில் ஏதோ ஒன்று லேசாக ஊர்வதை உணர்ந்து நான் புஸ்தகத்திலிருந்து என் முகத்தை எடுத்துக் கீழே நோக்கினேன். அத்தையின் ஆதரவில் வாழும் ஒரு பெண்மணியின் கரங்கள் என் காலை மெல்ல வருடின. அவளைத் தொலைவிலேயே இதற்கு முன் நான் பார்த்திருக்கிறேன். அத்தைக்கு அவள் என்ன உறவென்று எனக்குத் தெரியாது. பெயர் கூட எனக்கு ஞாபகம் இல்லை. தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு



அவள் ஒன்றுமே பேசாமல் என் காலை மெதுவாகப் பிடித்தாள். நடுநடுவே என் அறைக்கு வெளியே வாசற்படியண்டை நிழல் போல் அவள் வந்து, சற்று நேரம் தயங்கி விட்டுத் திரும்பிப் போவாள். இது என் நினைவிற்கு வந்தது.



எனக்கு என்ன உடல் வேதனை, எனக்கு எப்போது பசி, இவை யாவையும் மறைவிலிருந்தே அவள் கவனித்தாள் போலும்! இன்று கூச்சத்தைப் போக்கிக் கொண்டு என் அருகில் வந்து வணங்கினள். ஒரு சமயம் ஒரு பெண்மணியைப் பெரிய அவமானத்திலிருந்து காப்பாற்றச் சிறையின் துன்ப வாழ்வை வரித்தேன் அல்லவா? இன்று அத்தகைய பெண் இனத்தின் சார்பாக இவள் என் காலடியில் நன்றியைத் தெரிவிக்க வந்தாளென்றே எனக்குப் பட்டது. சிறை மீண்டதும் பல சபைகளில் எனக்கு மாலை இட்டார்கள். ஆனால் இன்று என் அறையில் ஏகாந்தமாக நான் பெற்ற இவளது மௌன சேவையை நினைக்குங்கால் என் உள்ளத்தில் அமுதூறியது. சிறையில் பட்ட துன்பம் என் வாழ்வைக் குறைத்து விட்டது. சுக துக்கத்தைச் சமமாக நோக்கும் நிலைக்கு வந்து விட்டேன். கண்ணீரை மறந்த என் இரு விழிகளிலும் ஈரம் கசிந்தது. முன்பே நான் கூறியதாக ஞாபகம்; உபசாரங்களை நான் அடியோடு வெறுப்பவன். யாராவது காலைப் பிடிக்க வந்தால் எனக்குச் சகிக்காது; சள்ளென்று விழுவேன். இன்றோ இவள் ஆற்றிய சேவையை உதறித் தள்ளத் துணியேனும் என் மனம் இடம் கொடுக்காததுதான் ஆச்சரியம்!

அத்தையின் புக்ககம் ஆதியில் குல்னா ஜில்லாவில் ஓர் ஊர். அந்த இடத்துப் பெண்கள் ஓர் இருவரை அவள் தன்னுடன் வைத்துக் கொண்டிருந்தாள். பூஜைக் காரியங்களைக் கவனிக்க அத்தைக்கு இவர்கள் உதவியாக இருப்பார்கள். அமியாவுக்குத்தான் வீட்டில் எல்லாவித அதிகாரமும். பூஜை அறையில் மட்டும் அவள் உரிமை செல்லாது. அமியாவுக்குத் தெரியாது இதன் காரணம். இதைத் தெரிந்து கொள்ள அவளும் பிரயத்தனப்படவில்லை. அவள் நன்றாகப் படித்த பிறகு குலம், கோத்திரம், ஆசாரம் போன்ற விஷயங்களில் மண்டையை உடைத்துக் கொள்ளாத

தோர் இடமாகப் பார்த்து அவளைக் கட்டிக் கொடுத்துவிட வேண்டுமென்பது அத்தையின் எண்ணம். தன்கணவன்செய்த பிழைக்குப் பெண்ணை இவ்வளவாவது கடைத்தேற்ற வேண்டாமா?

அத்தை போஷித்து வரும் அந்த நாட்டுப்புறத்துப் பெண்களிடத்தில் அமியாவுக்குப் பிடித்தமே இல்லை. அநாதை ஆசிரமத்திற்குப் பணமுடை தவிரப் பெண்முடை இராத சமயம். "இந்தப் பெண்களை அங்கே அனுப்பித் தொலையேன்!" என்று இரண்டொரு தடவை அத்தைக்கு யோசனை கூறியிருக்கிறாள்.

அத்தை மட்டும், "இவர்களுக்குத் திக்கு இல்லாது போவானேன்? நான் இருக்கும் போது என்ன கேடு? அநாதைகளோ இல்லையோ, பெண்கள் இருக்கவேண்டிய இடம் வீடுதான்!" என்பாள்.

அது போகட்டும்; இந்தப் பெண் என் காலை மெல்ல வருடிக் கொண்டிருந்தாள். எனக்கோ கூச்சம்; இவள் புரியும் ஆந்தரிகமான பணியைப் பார்த்து என் மனம் இளகியது. பத்திரிகைத் தாள் ஒன்றைப் பிரித்து விளம்பரப் பத்தியில் கண்ணைச் செலுத்துவது போல் முகத்தை மறைத்துக் கொண்டேன். திடுமென அமியா எங்கிருந்தோ என் அறையில் வந்து குதித்தாள். புதுயுகத்திற்கு ஏற்றபடி நாட்டிலுள்ள இளைஞரைத் தட்டி எழுப்பக் கட்டுரை ஒன்று எழுதிக் கொண்டு வந்திருந்தாள். அதை ஆங்கிலத்தில் நன்றாக ஆக்குவதற்கு என் உதவியை நாடினாள். அந்தக் கட்டுரையை மூலத்தில் படித்தபோது ஒவ்வொரு இளைஞனின் உள்ளமும் விம்மியதாம்; உணர்வும் வீறிட்டு எழுந்ததாம்! அவள் அந்த மாதிரி சொல்லிக் கொண்டாள்.

அறையில் நுழைந்ததும் எனக்குச் சேவை புரியும் பேதை அவள் கண்ணில் பட்டாள். அமியாவின் முகத்தில் நிழல் படர்ந்தது. "நாடெங்கும் புகழ் எய்திய அண்ணா ஒரு வார்த்தை சொன்னால் போதாதா? பணிவிடை ஆற்றுவதற்கு ஆட்களா இல்லை? இத்தனை இருக்கையில் கடைசியில் இந்த......" என்று அவள் பேச்சை முடிப்பதற்குள் நான் குறுக்கிட்டு, "கால் குடைச்சலை என்னால் பொறுக்கவே முடியவில்லை" என்றேன்.


போலீஸ் ஸார்ஜெண்ட்டின் துராக்கிரமத்தினின்று பெண்ணைக் காத்து நின்றதற்குச்

சிறை வாசமே கிடைத்தது. ஒரு பெண்ணின் குரோதக் கனலிலிருந்து பேதை ஒருத்தியை மறைத்துக் கொள்ளப் பொய்யே கூறினேன். இதற்கான தண்டனையும் ஆரம்பமாகியது. என் கால் அமியாவின் கையில் சிக்கிக் கொண்டது. நான் பட்ட அவஸ்தையை என்னவென்று உரைப்பேன்? இனிமேல் என் கால்களைக் கவனித்துக் கொள்ளும் உரிமை கூட எனக்கு இராமல் போய் விடுமோ என்ற திகில் மூண்டது; வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தேன். "அமியா, என்னவோ எழுதிக் கொண்டு வந்தாயே, அதைக் கொடு! ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தருகிறேன்" என்றேன் சங்கடத்திலிருந்து மீள.

"அவசரமில்லை, அண்ணா! கால் குடைச்சல் என்றாயே, சற்றுப் பிடிக்கிறேனே!" என்றாள் அமியா.

"குடைச்சல் போய் விட்டது; இப்போது அவ்வளவு இல்லை. என்ன எழுதியிருக்கிறாய், பார்க்கலாம்? பேஷான 'ஐடியா'தான். எப்படி இது உனக்கு 'ஸ்டிரைக்' (பட்டது) ஆச்சு என்றுதான் நானும் யோசிக்கிறேன்......... 'இந்தப் புதுமை யுகத்தில் இளம் வங்கச் சகோதரனின் விசாலமான நெற்றி வங்க தேசத்து நாரீமணிகளின் கையிலிருந்து ஜய திலகத்தைப் பெறக் காத்துக் கொண்டிருக்கிறது. அது, வீட்டின் குறுகிய எல்லைக்குள் அடங்காமல் நாடெங்கும் வியாபித்து உள்ளது.'......ஆழ்ந்த கருத்துத் தான்; இங்கிலீஷில் மொழிபெயர்க்கிறேன்... 'With the advent of the present age, brother's brow waiting for its auspicious anointment from the sisters of Bengal, has grown immensely beyond the narrow boundaries of the individual home.' என்ன உயர்தரமான 'ஐடியா!' மொழி பெயர்க்கும்பொழுது என் பேனா வெறி பிடித்து ஓடிய தென்றால் பார்த்துக் கொள்ளேன்!" என்றேன்.

என் கால்களைப் பிடிப்பதிலுள்ள ஆர்வத்தைத் திடீரென மறந்து போனாள்



அமியா. தலைவலியை மட்டும் என்னால் தாங்க முடியவில்லை.

மறுநாள் மத்தியானம்; என் ஜலதரன் கும்பகர்ண நித்திரையில் கிடக்கும் சமயம். ஹிந்துஸ்தானி வேலையாள் வாசல் திண்ணையில் துளசிதாஸ் ராமாயணத்தைப் பாராயணம் செய்து கொண்டிருந்தான். தெருவில் காடிக்காரன் அடிக்கும் பம்பையின் ஓசை கேட்டது. புது யுகத்துப் பைரவியான அமியாவும் தன் கடமையை ஆற்ற வெளியே போய்விட்டாள்.

அச்சமயம், என் அறைக்கு வெளியே வராந்தாவில் நிழல் மாதிரி ஓர் உருவம் பயத்துடன் ஓரமாக வந்து நின்றது. வெகு நேரம் தயங்கிய பின்னர் அந்தப் பெண் ஹரிமதி, கையில் விசிறியுடன் உள்ளே வந்தாள். என் தலைமாட்டில் நின்று கொண்டு விசிறினாள். அமியா வரச் சற்று நேரமாகுமென்ற நம்பிக்கையால் ஹரிமதியைக் காலைப் பிடிக்கச் சொல்லலாமென்று இருந்தேன். திடீரென்று அமியா, மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளியாகும் அநாதை ஆசிரமத்தின் அறிக்கையைக் கையில் எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். ஹரிமதியை ஏற இறங்கப் பார்த்தாள். பரிதாபம், அந்தப் பேதையின் கையிலிருந்து விசிறி தட்டென்று கீழே விழுந்தது. அமியா, என் படுக்கையின் ஒரு விளிம்பில் உட்கார்ந்தபடி கடினம் பாய்ந்த குரலில், "நம் தேசத்தில் வீடு தோறும் கதியற்ற பெண்கள் பிறர் கைக்கு எதிர் பார்த்து நிற்கின்றனர். பணக்காரக் குடும்பங்களில் ஸம்ரக்ஷணை பெற்றாலும் இவர்கள் வீணாகத் தம் வாழ்நாட்களைக் கடத்துகின்றனர். தம் காலிலேயே நிற்குமாறு இவர்களைத் தூண்டவேண்டும். எங்கள் அநாதை ஆசிரமத்திற்கு இத்தகையோர் தாம் தேவை. அதனால்..." என்று இழுத்தாள்.

எனக்கு உறைக்க வேண்டுமென்றே இந்தச் சொல்லம்பை ஹரிமதியின் மீது ஏவினாளென்று அறிந்து கொண்டேன்.

"சரி, உன் விருப்பப்படி எதை வேண்டுமானாலும் செய். இவளைப் போன்ற கதியற்றவர்கள் உனக்கு அடங்கி நடக்க வேண்டுமாக்கும்! அநாதை ஆசிரமத்திற்கு 'செக்ரடரி' நீ. இவர்கள் அங்கே உழல வேண்டிய சேவிகைகள்! இதைவிட நீயே சேவை செய்ய முற்படேன். அப்போது தெரியும், அந்தக் காரியத்தில் உள்ள இன்ப துன்பம்!" என்றேன். நடுநடுவே வெகுளிக்கு ஆளாவது எனக்குள்ளதோர் துர்க்குணம். 'அக்ரோதேன ஜயேத்க்ரோதம்' என்ற ஆப்தர் மொழியை மறந்தே போய்விடுவேன். இதன் விளைவாக அமியா, அத்தையின் உறவினளான வேறொரு பெண்ணைக் கொண்டு வந்தாள். அவள் பெயர், பிரஸன்னா. என் கால் அருகில் அவளை அமர்த்தி "அண்ணாவுக்குக் காலைப் பிடி" என்று உத்தரவிட்டாள். அவள் பலங்கொண்ட மட்டும் என்னுடைய கால்களைப் பிடித்துத் தீர்த்து விட்டாள். "ஐயோ, தாளவில்லை!" என்று இந்த அண்ணா வாய் திறந்து கூற வேண்டுமே? இல்லை. சகித்துக் கொண்டேன். இனி மேல் படுக்கையில் கூட நோயாளிக்கு நிம்மதி இராதென்பதை உணர்ந்தேன். இதைவிட நவ வங்கத்தின் இளைஞருக்குத் தலைவராகப் போவதில் எவ்வளவு அநுகூலங்கள்! பிரஸன்னாவைக் கொண்டு நிறுத்துவதெல்லாம் தன்னை அப்புறப்படுத்துவதற்கான சூழ்ச்சியென்றே ஹரிமதியும் புரிந்து கொண்டாள்—முள்ளைக் கொண்டு முள்ளை நீக்குவதுபோல, விசிறியை மெல்ல வைத்துவிட்டு அவள் எழுந்து நின்றாள். என் காலண்டை வந்து தலையைத் தாழ்த்தி வணங்கியதும் பாதங்களை ஒரு தரம் தடவிக் கொடுத்துவிட்டு அகன்றாள், பாவம்!

மீண்டும் கீதையைப் பிரிக்க வேண்டியதாயிற்று. சுலோகங்களுக்கிடையே துழாவும் கண்கள் ஒரொரு தரம் கதவையும் நோக்கும். ஆனால் அடிக்கடி வந்து போகும் அந்த உருவம் கண்ணில் படவில்லை. அதற்குப் பதிலாகப் பிரஸன்னாவே தோன்றுவாள். அவளைப் பின்பற்றி, வேறு பெண்மணிகளும் சிறந்த தியாகியான அண்ணாவின் காலை அழுத்திப் பிடிக்கப் போட்டி போட்டுக் கொண்டு வந்தார்கள். இன்ன தினத்தில் இன்னார் முறையென்பதையும் முன்னதாகவே அமியா வகுத்திருந்தாள். எனக்கு என்ன குறை? அப்பால் நான் கேள்விப் பட்டேன்; ஹரிமதி, யாருடனும் சொல்லாமல் கொள்ளாமல் கல்கத்தாவை விட்டுத் தன் குக்கிராமத்திற்கே போய்விட்டாளாம்.

* * *

மாதம் பிறந்தது; பத்து தேதியும் ஆயிற்று. ஆசிரியர்-நண்பர் தம் கெடு பிரகாரம் மறக்காமல் என் கட்டுரையைக் கேட்க வந்தார்; கொடுத்தேன். படித்துப் பார்த்தார். "கேலி செய்கிறீர்களா? இதுவா நான் கேட்டது?" என்றார்.

"ஆம், பூஜா மலருக்கு ஏற்றதாயிருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன்..."

"சுகமில்லை; மேல் வாரியாகத்தான் இருக்கிறது" என்று சப்புக் கொட்டினார் நண்பர்.

ஆசிரியரைக் குறை கூறுவதில் என்ன பயன்? சிறைக்குச் சென்ற பிறகே என் கண்ணீர் வெள்ளம் உள்ளத்துள் ஒளிகிறது. வெளியிலிருந்து பார்ப்பவருக்கு நான் மேல் வாரியான ஆளாகவே தோன்றும்.

கதையைத் திருப்பிவிட்டார் ஆசிரியர்.

அந்த சமயம் அகிலன் வந்தான். "என் வாயால் தெரிவிக்கும் விஷயமன்று. கடிதத்தை நீங்களே படித்துப் பாருங்கள்" என்று கடிதத்தை என்னிடம் கொடுத்தான்.

"அமியா என் இதயத்தில் வாழும் தெய்வம்; புதுமை யுகத்தின் பெண்ணரசி. அவளை மணந்து கொள்ள ஆசை எனக்கு. அவளும் இதற்கு இசைகிறாள்" என்று எழுதியிருந்தான்.

அப்போது அமியாவின் பிறப்பு வரலாற்றை அவனுக்குச் சொல்ல வேண்டியதாயிற்று. சொல்லியிருக்க வேண்டியதில்லை. அகிலன், ஜாதியில் தாழ்வு, இழிவென்பதை யெல்லாம் பார்க்காதவன். அதற்கு மாறாக இந்த மாதிரி சமூகச் சீர்திருத்தங்களில் அதிக ஆர்வம் அவனுக்கு. "பெற்றோர் செய்த பிழை மக்களை வந்து காக்கும் என்பதெல்லாம் சுத்தப் பாட்டு... இதோ அமியாவைப் பார்! பாசியிடையே பிறந்தாலும் அவள் பரிசுத்தமான செங்கமலந்தானே! தாயின் களங்கம் அவள் மீது ஒட்டிக் கொண்டிருக்கிறதா, என்ன?', என்றேன் நான்.

நவ வங்கத்தின் இளைஞர் கழகம் அன்று தொட்டு உத்ஸாகத்துடன் வேலை செய்வதை நிறுத்திக் கொண்டது. சகோதரியின் கையிலிருந்து வரும் வெற்றித் திலகமோ காத்திருந்தது. அதை ஏற்கும் பாக்ய நெற்றியைத்தான் காணவில்லை. அகிலன் கல்கத்தாவை விட்டுக் குமில்லாவுக்கு ஒரு முக்கிய அலுவலாகப் போன செய்தி, என் செவிக்கு அப்புறமே எட்டியது. அமியா காலேஜில் சேரவேண்டியதுதான் பாக்கி. இதற்குள் தீர்த்த யாத்திரை சென்றிருந்த என் அத்தையும் திரும்பிவிட்டாள். பலர் உள்ளுறப் புரியும் தொண்டிலிருந்து என் இரு கால்களும் விடுதலை பெற்றன!

ஞானோதயம்

வசு

“பவானி, இருட்டிப் போவதற்கு முன் ஊரணிக்குப் போய் ஒரு குடம் ஜலம் கொண்டு வந்துவிடு” என்று சமையற்கட்டிலிருந்து சொன்னாள் அம்மா.

வாசித்துக்கொண்டிருந்த புஸ்தகத்தை மூடி வைத்துவிட்டுக் குடத்தை எடுத்துக் கொண்டு குடி தண்ணீர் எடுத்துவர ஊரணியை அடைந்தேன். அங்கே என்னைப் போலவே ஜலம் எடுக்க வந்திருந்த என் சிநேகிதி சியாமளா, “அடியே, பவானி! சேதி தெரியுமா? நம்ம கிழக்குத் தெரு கிட்டாமணி அய்யர் பெண் கமலத்துக்குக்கூடக் கலியாணம் நிச்சயமாகி விட்டதாம்!” என்றாள்.

“ஆகவேண்டியதுதானே!” என்றேன் நிதானமாக.

“அது இருக்கட்டும்; உன் விஷயம் என்ன?” என்றாள் சியாமளா. அடங்கியிருந்த மனோவியாகூலத்தைத் தூண்டிவிட்டதுபோலிருந்தது சியாமளாவின் கேள்வி. ஆம்; சியாமளா என்னுடைய நன்மையில் சிரத்தையுள்ளவள்தான். இல்லாவிட்டால் அவள் அந்தக் கேள்வியை அப்போது போடவேண்டிய அவசியமில்லையல்லவா? ஆனால் அதை என்னிடம் கேட்டதின் தாத்பர்யம்? ஒரு வேளை, ‘அடி, அதிர்ஷ்டக் கட்டையே! போயும் போயும் நாம் எல்லோரும் சகல அம்சத்திலும் மட்டமென்று கருதிய கமலாவுக்குக்கூடக் கலியாணம் நிச்சயமாகி விட்டதே! மூன்று வருஷங்களாக உன் தகப்பனார் பிரயத்தனப்பட்டும் உனக்கு இன்னும் வழி பிறக்கவில்லையே?’ என்று நேரிடையாகக் கேட்பதற்குப் பதிலாக மறைமுகமாகக் கேட்ட கேள்வியோ அது? என்னால் நிச்சயிக்க முடியவில்லை. என்னுடைய மனக் கிளர்ச்சியை வெளியே காட்டிக் கொள்ளாமல் “அதற்கென்ன, வேளை வரும்போது எல்லாம் நடந்து விட்டுப் போகிறது” என்றேன் ஒரு வறட்டுச் சிரிப்புடன்.

இதற்குள் உள்ளூரிலேயே இருந்த சியாமளாவின் மாமியார் ஊரணிக்கு வரவே, எங்களுடைய சம்பாஷணை முற்றுப் பெற்றது. குடத்தில் ஜலத்தை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தேன். வருகிற வழியெல்லாம் கமலாவின் அதிர்ஷ்டத்தில் நமக்கு ஆயிரத்தில் ஒரு பங்காவது இருக்கவில்லையே என்று ஏங்கியது என் மனம். கமலாவுக்குக்கூடக் கலியாணம் நிச்சயமாகிவிட்டது என்று அம்மாவுக்குத் தெரிந்தால் மனம் உடைந்தே போவாள். இருந்தாலும், இதில் நான் செய்வதற்கு என்ன இருக்கிறது?

வீட்டிற்கு வருவதற்குள் நன்றாக இருட்டி விட்டது. அம்மா என்னிடம், “சரி, கூடத்திலிருக்கிற குத்து விளக்கை ஏத்தி லக்ஷ்மி படத்துக்கு அடியில் வை. படத்துக்குப் பூச் சரத்தை எடுத்துப் போட்டு, நெத்தியில் குங்குமம் இட்டுக் கொண்டு லலிதா ஸ்தோத்திரத்தைச் சொல்லி, நமஸ்காரம் பண்ணு!” என்று சொல்லிவிட்டு, முன் கட்டை நோக்கிச் சென்றாள். அம்மா சொன்னபடியே லக்ஷ்மி படத்திற்கு முன்னால் நின்று கொண்டு வாயால் ஸ்தோத்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தேன். ஆனால் என் மனம் என்னவோ அலை பாய்ந்து கொண்டிருந்தது.

“சாரதா!” என்று அம்மாவின் பெயரைச் சொல்லி அழைத்த வண்ணம் உள்ளே நுழைந்தாள் எதிர் வீட்டு அலமேலு அத்தை. “வாருங்கோ!” என்று வரவேற்றாள் அம்மா.

“கிட்டாமணி அய்யர் பெண் கமலாவுக்கு அடித்த யோகத்தைக் கேட்டாயா?” என்று ஆரம்பித்தாள் அத்தை.

“நீங்கள் சொன்னால் தானே தெரியும்” என்றாள் அம்மா அடக்கத்துடன்.

“அந்தப் பெண்ணுக்கு இன்னிக்கி மத்தியானம்தான் கலியாணம் நிச்சயமாச்சாம். பையன் பெரிய பரீக்ஷை கொடுத்திருக்கானும். அவனுடைய அப்பா மதுரையிலே நல்ல சம்பளத்திலே உத்தியோகத்தில் இருக்காராம்.”

“போகட்டும்; கமலா பாக்கியசாலிதான்!” என்றாள் அம்மா.

“இரு, அவசரப்படாதே! பூராவையும் கேட்டுக்கோ. மாப்பிள்ளைக்குக் கூடப் பிறந்தவா ஒருத்தருமே கிடையாதாம். அவனுடைய தாயார்கூடக் காலமாகி ஐந்தாறு வருஷங்களாகப் போகிறதாம். கமலாவுக்கு மாமியார், நாத்தனார் என்கிற உபத்திரவமே கிடையாது, போ!” என்று கூறி முடித்தாள் அத்தை.

"அப்படியானால் கமலா ரொம்ப அதிர்ஷ்டசாலிதான்" என்றாள் அம்மா.

"உன் பெண் பவானிக்கும் இந்தமாதிரி ஒரு வரன் கிடைக்கக் கூடாதா!" என்று அங்கலாய்த்தாள் அத்தை.

"ஹூம், அவளுக்குக் கலியாணமானால் போதும் என்று இருக்கு. இந்த லட்சணத்திலே மாமியாரும் நாத்தனாரும் இல்லாத இடமாகப் பார்க்கணுமனு முடியுமா?" என்று பெருமூச் செறிந்தாள் அம்மா.

வாசலில் வண்டிச் சத்தம் கேட்டது. ஏதோ வழக்கு சம்பந்தமாக வக்கீலைப் பார்க்கப் போயிருந்த அப்பா திருநெல்வேலியிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தார். எதிர்வீட்டு அத்தை அம்மாவிடம் விடைபெற்றுக்கொண்டு போனாள். அப்பா வண்டியிலிருந்து இறங்கி, கூடத்திலிருந்த ஊஞ்சல் பலகையில் வந்து உட்கார்ந்ததும் அம்மா "கேசு என்ன ஆச்சு?" என்றாள்.

"வாய்தா போட்டு விட்டார்கள். அதிருக்கட்டும். நான் போன இடத்தில் நம்முடைய பவானிக்கு ஒரு வரன் அமையும் போல இருந்தது. பையனுடைய ஜாதகத்தையும் இவளுடைய ஜாதகத்தையும் ஜோசியர்கள் பார்த்துப் பொருத்தம் இருக்கு என்று சொல்லி விட்டார்கள். பையனைப் பார்த்தேன்; எனக்குத் திருப்தியாய்ப் போச்சு. அவனுக்குப் பம்பாயில் உத்தியோகமாம். அவனுடைய தகப்பனார் பம்பாயிலேயே உத்தியோகம் பார்த்து 'பென்ஷன்' வாங்கிக்கொண்டிருக்கிறாராம். பையனைத் தாயாருடனும் தமக்கையுடனும் பவானியைப் பார்க்கிறதற்காக நாளைக்கு இங்கே அனுப்புவதாகச் சொன்னார்' என்று முடித்தார்.



எதிர் வீட்டு அத்தையுடன் பேசினதின் காரணமாகச் சோர்வடைந்திருந்த அம்மாவின் முகம் தெளிவடைய ஆரம்பித்தது. ஏன்! கமலாவின் அதிர்ஷ்டத்தை எண்ணி அலை பாய்ந்து கொண்டிருந்த என் மனம்கூட அந்த நிமிஷம் முதல் அடுத்த நாள் என்னைப் பார்க்க வரப்போகும் வரனைப் பற்றி நினைத்துப் பார்ப்பதிலேயே லயித்துப் போயிற்று!

அடுத்த நாளும் வந்தது. எனக்குக் கணவராகப் போகிறவர் அவர் தாயாருடனும் தமக்கையுடனும் வந்து சேர்ந்தார். என்னைப் பற்றி ஒன்றிரண்டு கேள்விகளை அப்பாவிடம் கேட்டுவிட்டு அவர் மௌனமாகி விட்டார். அதற்கு மாறாகச் சரமாரியாக என்னிடம் கேள்வி கேட்கத் தொடங்கி விட்டார்கள் அவருடைய தாயாரும் தமக்கையும். அவர்கள் வைத்த பரீட்சையில் வெற்றி பெறுவேனோ என்றுகூட இருந்தது எனக்கு. அவர்கள் என்னுடைய யோக்யதாம்சங்களைப் பற்றி அலசி அலசி என் தாயாரைக் கேட்ட கேள்விகள்! ஏன், மாமியார், நாத்தனார் ஸ்தானங்களைத் திறமையுடன் நிர்வகிக்கவே பூமியில் பிறந்தவர்களோ என்று ஐயுறும்படி இருந்தது அவர்கள் நடந்துகொண்ட தோரணை!

இந்தக் கட்டம் முடிந்ததும் அவர்களைத் தகுந்தபடி உபசரித்து வழி யனுப்பி விட்டுத் திரும்பி வந்தார் அப்பா. அவர் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடியது. காரணம் சொல்லவா வேண்டும்? வந்திருந்தவர்களுக்கு என்னை அவர்கள் குடும்பத்தில் ஒருத்தியா ஆக்கிக் கொள்ளச் சம்மதம்தானாம்! அப்பாடா, இப்பொழுதுதான் அம்மாவின் முகத்தில் நிஜமாகவே புன்னகை அரும்பியது.

அதற்கடுத்த வாரத்திலேயே ஒரு சுப முகூர்த்தத்தில் எனக்கும் 'அவரு'க்கும் கலியாணம் நடந்தது. கலியாணம் நடந்து முடிந்ததுமே என்னைப் பம்பாய்க்கு அழைத்துச் செல்ல விரும்பினார்கள் என் புக்ககத்தார்கள். அதை அவ்வளவு சீக்கிரமாக எதிர்பார்க்கவில்லை என் பெற்றோர்கள். இருந்தா



லும் மனதைத் தேற்றிக் கொண்டு எனக்கு விடை கொடுத்து அனுப்பினார்கள். நான் புறப்படுவதற்கு முன் அம்மா என்னைத் தனியாக அழைத்து, "பவானி, எந்தக் காரணத்தை முன்னிட்டும் உன் அகத்துக்காரர் மனம் கோணும்படி நடந்து கொள்ளாதே! ஆனால் அதேமாதிரி மாமியாரிடம் நடந்து கொள்ளலாம் என்று சொப்பனத்தில்கூட நினைக்காதே!" என்ற தாரக மந்திரத்தை உபதேசித்து அனுப்பினாள்.

இப்படியாகத்தானே, கமலாவின் கலியாணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்க எங்கள் கிராமத்தைத் திடீரென்று ஏற்பாடாகி முடிந்த என்னுடைய கலியாணத்தால் ஆச்சரியத்தில் மூழ்கடித்து விட்டு. பெருமிதம் நிறைந்த மனதுடன் புக்ககத்துக்காரர்கள் சகிதம் நான் பம்பாய்க்குப் பிரயாணமானேன்.

2

பம்பாய் மாதுங்காவிலுள்ள எங்களுடைய சிறிய குடியிருப்பு இடத்தை அடைந்ததும் கிராமத்தில் தட்டுத் தடங்கலில்லாமல் பெரிய வீட்டில் பழகிக் கொண்டிருந்த எனக்குக் கூட்டிலடைக்கப் பட்ட பட்சியைப் போல இருந்தது. தவிரவும் மாமியார் கொஞ்சம் கண்டிப்பானவர் என்று குடும்பத்திலுள்ள மற்றவர்கள் அவரிடம் நடந்து கொள்வதிலிருந்து நான் அறிந்துகொள்ள அதிக நாட்களாகவில்லை. ஆனால் எனக்கு இட்ட வேலையைச் செய்து முடித்து விட்டால் அதன் பிறகு மாமியார் என் வழிக்கு வரமாட்டார். ஏன், ஒவ்வொரு சமயம் என் அகத்துக்காரரிடம் சொல்லி என்னைப் பம்பாயில் பார்க்க வேண்டிய இடங்களுக்குக் கூட்டிக் கொண்டு போய்க் காட்டச் சொல்லுவார். இந்தமாதிரி சந்தர்ப்பங்களை 'அவ'ரும் பயன்படுத்திக் கொள்ளத் தயங்கமாட்டார். ஆனாலும் வாழ்க்கை என்னமோ இயந்திரம் போல் இயங்கிக்கொண்டிருந்ததே தவிர ருசிக்கவில்லை. ஒவ்வொரு சமயம் 'அவர்' நான் தனியாக இருக்கும் போது, "பவானி, ஏதோ மாதிரி இருக்கிறாயே!" என்பார். உடனே என்னுடைய பதிலுக்குக் காத்திராமல், "நீ கிராமத்திலேயே வளர்ந்தவள். கொஞ்ச நாள் கழித்தால் பம்பாய் வாசம் சரியாகப் போய்விடும்" என்பார். இப்படிப்பட்டவரிடத்தில் எப்படி நான் மனதைத் திறந்து பேச முடியும்? ஆனாலும் நாளடைவில் மாமியார் குணத்தை அறிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடி நடந்து வந்ததால் என்னால் குடும்பத்தின் அமைதிக்குப் பங்கம் நேரவல்லை. ஒவ்வொரு சமயம் மாமியார் காரணம் எதுவுமில்லாமல் சற்று உரத்த குரலில் பேசிவிட்டால் உடனே என்னுடைய கிராமத்து 'அதிர்ஷ்டசாலி' கமலாவை நினைத்து மனம் புழுங்குவேன். அவள் பாக்கியசாலி. அவளுக்கு மாமியார், நாத்தனார் என்ற பிடுங்கல் கிடையாது என்று எனக்குள்ளேயே சொல்லிக் கொள்வேன்.

பம்பாய்க்கு வந்து ஐந்து வருஷங்கள் ஓடி மறைந்தன. நான் கர்ப்பவதியானேன். சீமந்தத்திற்கு நாள் நிச்சயித்து என்னுடைய தகப்பனாருக்குக் கடிதம் போட்டிருந்தார் என் மாமனார். அன்று வெள்ளிக்கிழமை. ஆபீஸ் விடுமுறையும்கூட. தாதரிலிருந்து என் புக்ககத்துத் தூர பந்து ஒருவர் வீட்டில் என் புருஷரையும் என்னையும் விருந்துக்கு அழைத்திருந்தார்கள். விருந்து முடிந்ததும் அதே வீட்டில் மற்றொரு பகுதியிலிருந்த இன்னொரு உறவினரைப் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தேன். "பவானி!' என்று யாரோ கூப்பிடுவது காதில் விழுந்தது. பரிச்சயமான குரலாக இருந்தது. திரும்பிப் பார்த்தேன். வேறொருவருமில்லை; நான் அடிக்கடி நினைத்துக்கொள்ளும் எங்கள் கிராமத்துக் கிட்டாமணி அய்யரின் பெண்ணான 'அதிர்ஷ்டக்காரி கமலா'தான். ஆனால் அவள் உருத்தெரியாமல் அடியோடு மாறிப் போயிருந்தாள். உடலிலிருந்த

நகைகள் கழற்றப் பட்டிருந்தன. முகம் சோபையை இழந்திருந்தது.

"உன்னுடைய உடம்புக்கு என்ன கமலா?" என்றேன்.

"உடம்புக் கென்ன, சரியாகத்தா னிருக்கு. உள்ளே வாயேன்!" என்று அவள் இருந்த 'போர்ஷ'னுக்கு அழைத்துக் கொண்டு போனாள். நான் உள்ளே போய் உட்கார்ந்ததும், "பவானி, உன்னுடைய மாமியாரும் நாத்தனாரும் சௌக்கியமா?" என்றாள்.

"என், எல்லோரும் சௌக்கியந்தான்!" என்றேன்.

"நீ பாக்கியசாலி!" என்றாள். அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. துக்கம் நெஞ்சை அடைத்தது. கண்களில் நீர் மல்கியது.

"என்ன கமலா, உனக்கு என்ன கஷ்டம்? என்னிடம் சொல். நீ எப்போது பம்பாய்க்கு வந்தாய்?" என்றேன் பரிவுடன்.

"நீ பின்னைத்தாச்சி. சந்தோஷமாயிருக்க வேண்டிய சமயம். இதையெல்லாம் நீ எதற்காகக் கேட்கவேணும்?" என்றாள்.

"கமலா, நீயும் நானும் ஒரே ஊரில் பிறந்து சகோதரிகள் மாதிரி பழகினவர்கள். உன் கஷ்டம் என்ன என்று இப்பொழுதாவது சொல்லுவாயா? நீ எப்பொழுது பம்பாய்க்கு வந்தாய்?" என்றேன் மறுபடியும்.

"நான் என் அகத்துக்காரருடன் பம்பாய்க்கு வந்து கிட்டத்தட்ட ஒரு வருஷமாகப் போகிறது. அவருக்கு வேலையாகி ஆறு மாதமாகிறது. எங்கள் இரண்டு பேர் வயிற்றைக் கழுவப் போதுமான சம்பளமும் வருகிறது......"

"அப்படியானால்உன் மாமனார் மதுரையில் தான் இருக்கிறாரா?"

"ஆமாம். அப்பாவுக்கும் பிள்ளைக்கும்ஏதோ மனஸ்தாபம் காரணமாகத் திடீரென்று ஒருவரிடமும் சொல்லாமல் என் மாமனார் இரண்டாந் தாரம் கலியாணம் செய்து கொண்டு விட்டார். என் அகத்துக்காரருக்குச் சொத்தில் கூடப் பங்கில்லை என்று சொல்லி விட்டார். எல்லாம் அவர் சொந்தமாகச் சம்பாதித்த பணமாம். கோர்ட் வரை போய்ப் பார்த்தாச்சு. ஒன்றும் பயனில்லை. வேறு வழியில்லாமல் வயிறு பிழைக்கப் பம்பாய்க்கு வந்தோம். என் நகைகளை யெல்லாம் வித்து நாலைந்து மாதம் கஷ்ட ஜீவனம் செய்து கொண்டு வந்தோம். கடவுள் கண் திறந்தார். இப்போது ஆறு மாதமாக ஏதோ வேலையிலிருக்கிறார். என் அகத்துக்காரர்" என்றாள் கமலா.

"அது சரி; உன் அகத்துக்காரர் குடும்பத்தில் அவர் பக்கம் பேச ஆளில்லையா?" என்றேன்.

"அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறாய்? மாமனாருடைய பணத்துக்காக எல்லாப் பந்துக்களுமே அவர் பக்கம்தான் சேர்ந்தார்கள். கோர்ட்டிலேகூட எங்களுக்கு விரோதமாகச் சாட்சி சொன்னார்கள். நானும் என் புருஷனும் அநாதைகளாகப்போய் விட்டோம். பவானி, எனக்கு ஒரு மாமியாரோ, ஒரு நாத்தனாரோ இருந்திருந்தால் இந்தக் கதிக்கு என் புருஷர் வந்திருப்பாரா? நீயே சொல். நான் அந்த மாதிரி மாமியார், நாத்தனார் என்ற உறவுகூடக் கிடைக்கக் கொடுத்து வைக்காத துர்ப்பாக்கியவதி!" என்றாள் விசித்துக்கொண்டே.

கமலாவின் கடைசி வார்த்தைகள் என் நெஞ்சைத் திடீரென்று ஒரு தரம் உலுக்கின. ஒரு கணம் ஸ்தம்பித்தே போய் விட்டேன். கமலாவுக்கு என்னாலான ஆறுதல் மொழிகளைச் சொல்லிவிட்டு மாதுங்காவிலுள்ள என் விலாசத்தை



அவளிடம் தெரிவித்து விட்டு அவள் கொடுத்த தாம்பூலத்தையும் பெற்றுக்கொண்டு வெளியே வந்தேன். வெளியே காத்துக் கொண்டிருந்த என் புருஷருடன் தாதரிலிருந்து மாதுங்காவுக்குத் திரும்பினேன். வழி நெடுக, "நான் அந்த மாதிரி மாமியார், நாத்தனார் என்ற உறவுகூடக் கிடைக்கக் கொடுத்து வைக்காத துர்ப்பாக்கியவதி" என்று கமலா சொன்ன வார்த்தைகள் என் காதில் ரீங்காரம்செய்து கொண்டிருந்தன.

வீட்டிற்கு வரும் போது இருட்டி விட்டது. நேராகப் பூஜை

மாடத்திற்குச் சென்று தேவி படத்துக்கு அருகிலிருந்த குத்து விளக்குகளை ஏற்றி வைத்துப் படத்துக்குப் பூமாலையைச் சாற்றி நமஸ்கரித்துவிட்டு, வராந்தாவில் நின்று கொண்டிருந்த என் மாமியாரை நமஸ்கரித்தேன். வழக்கமாக வெள்ளிக் கிழமை தோறும் சம்பிரதாயமாக விளக்கு வைத்ததும் மாமியாரை நமஸ்கரிப்பது போல் அன்று நமஸ்கரிக்கவில்லை. அவருடைய அருமையை உணர்ந்து என் மனப் பூர்வமாகவே அவரை நமஸ்கரித்தேன். அவர் என் கையிலிருந்த குங்குமச் சிமிழிலிருந்து குங்குமத்தை எடுத்து என் நெற்றியிலிட்டு என்னை ஆசீர்வதித்தபோது என் உடம்பு சிலிர்த்ததை என் ஆயுள் பூராவும் நான் மறக்கவே முடியாது.

சீமந்தம் கழிந்து அப்பா துணையுடன் பம்பாயிலிருந்து கிராமத்திற்கு வந்து சேர்ந்தேன். வீட்டிற்குள் நுழைந்ததும் அம்மா என்னை ஆவலுடன் வந்து தழுவிக்கொண்டாள். அவள் என்னை முதன் முதலாகக் கேட்ட கேள்வி, "மாமியார் உன்னிடம் பிரியமாக இருக்கிறாரா?" என்பதுதான்.

"அவர் தெய்வம் அம்மா!" என்றேன்.

"அப்போ நீ ரொம்ப பாக்கியசாலி தான்!" என்றாள் அம்மா. அப்படிச் சொல்லும்பொழுதே அம்மாவின் கண்கள் ஆனந்த பாஷ்பத்தால் நிறைந்தன.

○ ○ ○ காலக்ஷேபம் ○ ○ ○

அப்பா:—ஏண்டா முட்டாள், இந்தச் சின்னக் கணக்கைப் போட முடியாதா? நன்றாய்க் கவனி!

மகன்:—முடியும், அப்பா! ஆனால் கணக்கை இன்னொரு தடவை சொல்ல வேணும்......

அப்பா:—பதினைந்து பேர் ஒரு வயலை ஐந்து மணி நேரத்தில் உழுகிறார்கள். முப்பது பேர் எத்தனை மணி நேரத்தில் அதே வயலை உழுவார்கள்?

மகன்:—ஊஹூம், அவர்கள் உழ மாட்டார்கள், அப்பா!

அப்பா:—ஏன்?

மகன்:—அந்த வயலைத்தான் அவர்களுக்கு முன்னாலேயே பதினைந்து பேர் உழுதுவிட்டார்களே!

○●○

"என்ன ஸார், இங்கே காத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"ஐந்து மணியிலிருந்து என் நண்பர் ஒருவருக்காக இங்கே காத்துக் கொண்டிருக்கிறேன், ஸார்! மணி ஆறுக்கு மேல் ஆகிவிட்டது. அந்த ஆசாமியைக் காணோம். சொன்னால் சொன்னபடி நடக்க வேண்டாமோ?"

"ஆமாம், உங்களை அவர் எத்தனை மணிக்குச் சந்திப்பதாகச் சொன்னார்?"

"நாலு மணிக்கு!"

○●○

மெயில் புறப்படும் சமயம் ஒரு வியாபாரி, வண்டியிலிருந்த தமக்கு அறிமுகமில்லாத ஒருவரிடம் சென்று, "ஸார், நீங்கள் இந்த வண்டியில்தானே வருகிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஆமாம்."

"எனக்கு ஒரு சின்ன உபகாரம் செய்ய வேண்டும். என்னுடன் இரண்டு பெட்டிகள் கொண்டு வந்திருக்கிறேன். நியாயமாய் 'லக்கேஜ்' சார்ஜ் கொடுக்காமல் ஒரு பெட்டிதான் கொண்டு வரலாம். நீங்கள் என் பெட்டிகளில் ஒன்றை உங்களுடையது என்று சொல்லிக் கொண்டால் போதும். டிக்கெட் இன்ஸ்பெக்டர் பேசாமல் போய்விடுவான்."

"அதெல்லாம் சரிதான்; நான் டிக்கெட் வாங்கவில்லையே!"

"நீங்களும் இந்த வண்டியில் வரப்போவதாக இப்பொழுது தான் சொன்னீர்களே?"

"ஆமாம், வரத்தான் போகிறேன்; நான்தான் இன்ஸ்பெக்டர்!"



கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

291. கொடியில் வீணை இல்லையே!

கும்பகர்ணன் ராவணனிடம் 'சீதையை விட்டுவிட வேண்டும்' என்று சொன்னான். ராவணனுக்கு என்றும் இல்லாத கோபம் உண்டாகி விட்டது. கும்பகர்ணனை ஒன்றுக்கும் உதவாதவன், கோழை என்றெல்லாம் சொல்லிவிட்டுத் தானே போர் செய்வதற்காக எழுந்து நடந்தான்.

அதன்மேல் கும்பகர்ணன் ராவணனை வணங்கினான்; ஆயுத சன்னத்தனாய்ச் சூலாயுதத்தைக் கையில் கொண்டான்; ராவணனிடம் ஒரு வார்த்தை சொன்னான்:

"நான் யுத்தத்துக்குப் போகிறேன். திரும்பி வரமாட்டேன் தான். உனக்கு வெற்றி என்பது ஒன்று உண்டானால் சீதையை விடுவிப்பதுதான் அது." இதைச்சென்ற இதழில் பார்த்தோம்.

• • •

மனம் இடிந்தவனாய் மேலும் பேசுகிறான் கும்பகர்ணன்:

"இதுவரை ஏதாவது குற்றம் செய்திருந்தால் என்னை மன்னித்துவிடு."

'இற்றைநாள் வரையயதா
    யான்முன் செய்தன
குற்றமும் உளஎனில்
    பொறுத்தி கொற்றவ!
அற்றதால் முகத்தினில்
    விழித்தல் ஆரிய!
பெற்றனென் விடை' எனப்,
    பெயர்ந்து போயினான்.

[பொறுத்தி கொற்றவ: பொறுத்து என்னை மன்னிப்பாயாக அரசே; அற்றதால் முகத்தினில் விழித்தல் ஆரிய: சகல சாஸ்திரங்களையும் கற்றவனே இனி உன் முகத்தில் திரும்பிவந்து விழித்தல் என்பது இன்றோடு தீர்ந்தது; பெற்றனென் விடை: உன்னிடத்தில் விடையும் பெற்றுக் கொண்டேன்; எனப் பெயர்ந்து போயினான்: என்று சொல்லி விட்டு ராவணன் இருந்த இடத்தை விட்டு நடந்தான்—கும்பகர்ணன்.]

* * *

"யுத்தத்துக்குப் போகிறேன்" என்று கும்பகர்ணன் சொன்ன மாத்திரத்திலேயே சந்தோஷம் உண்டாகி விட்டது ராவணனுக்கு.

உயிரை விடப் போகிறான் என்ற விஷயம் ராவணனைப் பாதிக்கவில்லை; அவன் காதிலேயே விழவில்லை என்று சொல்லலாம்.

"சரி, சரி, ரொம்ப நல்லதாய்ப் போய் விட்டது. பெரிய போர் முரசுகள் அவைகளுக்கான கோல்கள் எல்லாவற்றையும் எடுத்து அடித்துக் கொண்டு தம்பியோடு போகட்டும்" என்று கட்டளையிட்டான்.

கூடிவிட்டது சேனை. கும்பகர்ணன் பக்கத்தில் நடந்து செல்லுகிறது.

'இரும்பணை கடிப்பெடுத்(து)
    எற்றி ஏகுக
பெரும்படை இளவலோ(டு)'
    என்ற பேச்சினால்
வரும்படை வந்தது,—
    வானு ளோர்கள்தம்
கரும்படை மலர்முடி
    தூளி தூர்க்கவே.

[இரும்பணை: பெரிய முரசுகள்; கடிப்பு எடுத்து: முரசடிக்கும் கோல்களையும் எடுத்து; எற்றி ஏகுக: அடித்துக்கொண்டு செல்லுங்கள்; பெரும் படை இளவலோடு: பெரிய சூலாயுதத்தைக் கொண்ட கும்பகர்ணனோடு— ஏகுக: என்ற பேச்சினால்: என்ற கட்டளையால்; வரும்படை வந்தது: வரவேண்டிய படையெல்லாம் வந்து விட்டது,—நடந்தும் செல்லுகிறது; வானுளோர்கள் தம் கரும்பு



அடை மலர்முடி தூளி தூர்க்கவே: வான லோகத்தில் உள்ளவர்களுடைய தலையில் அணிந்த புஷ்பமாலை உலர்ந்து போகும்படி தூளி போய்ப் படிந்தது—சேனைக் கூட்டம் நடந்துபோன காரணத்தால்.]

•••

இனி நாம் யுத்தகளத்துக்குப் போக வேண்டியதுதான்.

ராமன் பக்கத்தில் நிற்கிறோம். எதிரே என்ன தெரிகிறது?

ஒரு தேர் வருகிறது. தேரின்மேல் ஒரு விசாலமான கொடி நீண்டு படர்ந்து வீசிக் கொண்டிருக்கிறது.

ராமன் விபீஷணனைப் பார்த்துக் கேட்கிறான்.

வீணை என்(று) உணரின்அ(து)
அன்று, விண்தொடும்
சேனையர் கொடியது:
வயவெம் சீயமாம்;
காணின்நின் முன்னின்மேல்
அரிய காட்சியன்,
பூண்ஒளி மார்பினன்,—
யாவன் போலுமால்.

[வீணை என்று உணரின் அது அன்று: ராவணனது கொடி வீணை,—கூர்ந்து பார்த்தால் வீணை என்று தோன்றவில்லை; விண் தொடும் சேனையர் கொடியது: ஆகாயத்தைத் தொடுகிறது என்று சொல்லும்படியான அத்தனை பெரிய கொடியில் எழுதிய அடையாளம்; வய வெம் சீயமாம்: வீணையல்ல ஆளுக்ப் பெரிய கோபங்கொண்ட சிம்மமாக அல்லவா இருக்கிறது; காணின் நின்முன்னின்மேல் அரிய காட்சியன்: நன்றாய்ப் பார்க்கும்போது உன் அண்ணன் ராவணனை விடக் கம்பீரமான தோற்றம் உடையவனும் அல்லவா இருக்கிறான்; பூண்ஒளி மார்பினன்: மார்பிலே அரிய ஆபரணங்கள் பிரகாசிக்கின்றன; யாவன் போலுமால்: இவன் யாரோ தெரியவில்லையே!]

ராமன் வீரதத்துவம் நிறைந்துள்ள மகா வீரன். அவனுடைய கண்ணுக்கு வீர தத்துவத்தைக் கண்ட போதெல்லாம் மகிழ்ச்சிதான் உண்டாகிறது. ராவணனைப் பார்த்தே வியந்தான். "ராவணனை விட அதிகமாக வியக்க வேண்டி யிருக்கிறதே இவனை (கும்பகர்ணனை)ப் பார்க்கும்போது" என்று சொல்லுகிறான்.

ராமனது வீரப் பண்பை இந்த இடத்தில் நாம் அனுபவிக்கவேண்டும்.

நமது இலங்கைக் கடிதம்

தமிழ் சர்வகலாசாலை ஏற்படுமா?

ரஜனி

கொழும்பு எப். 18—

யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஒரு தமிழ் சர்வகலாசாலையை ஏற்படுத்த வேண்டுமென்ற யோசனை இப்பொழுது மறுபடியும் கிளம்பி யிருக்கிறது. பிரதம மந்திரி ஸ்ரீ சேனநாயகா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் பொழுது இது சம்பந்தமாக அவரிடம் வட்டுக்கோட்டை கல்லூரித் தலைவர் ஒரு மகஜர் சமர்ப்பிப்பதாயிருந்தார். ஆனால் வட இலங்கைக்கு முதன் முறையாக உத்தியோக தோரணையில் விஜயம் செய்யவிருந்த பிரதம மந்திரி சுகவீனம் காரணமாகத் தமது யாத்திரையை ரத்து செய்ததால் மேற்படி மகஜர் சமர்ப்பிக்கப் படவில்லை.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு சர்வகலாசாலை அவசிய மென்பது நீண்டகாலமாகவே வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது. இதைப் பற்றி உதவி கல்வி மந்திரி ஸ்ரீ கே. கனகரத்தினம் அரசாங்கத்தினிடம் ஒரு விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்கப் போவதாயும் கூறப்பட்டது. பிரதி வருஷமும் யாழ்ப்பாணத்திலிருந்து அநேகம் மாணவர்கள் சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையில் சேர ஆவலுடன் சென்று ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள். இந்திய கலாசாலைகளில் முதலில் இந்திய மாணவர்களுக்கு இடமளித்த பிறகுதான் இலங்கையர்களுக்கு இடமளிப்பதென்ற கொள்கை கொஞ்ச காலமாக அனுஷ்டிக்கப்பட்டு வருவதினால் முன்போல யாழ்ப்பாண மாணவர்களுக்கு அங்கு இடம் கிடைப்பதில்லை. கொழும்பில் இலங்கை சர்வகலாசாலை இருந்தபோதிலும் அது தமிழர் பண்பாட்டுக்கு உகந்ததாயில்லை. ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு அதில் இடமில்லை யென்பதோடு யாழ்ப்பாணத்தவர்கள் அதிகம் விரும்பும் லலித கலைகளுக்கும் இலங்கை சர்வகலாசாலையில் இடம் கிடையாது. இதை முன்னிட்டு கர்னாடக சங்கீதம், நடனம் முதலியவைகளையும் தமிழ் மொழியையும் பயிற்றுவிக்கக் கூடிய அண்ணாமலை சர்வகலாசாலையைப் போன்ற ஒரு தமிழ் சர்வகலாசாலையை யாழ்ப்பாணப் பகுதியில் காலதாமதமின்றி ஸ்தாபிப்பது அவசியமென்று வற்புறுத்தப்படுகிறது.

சென்னை மந்திரியின் கோரிக்கை

சென்னைக் கடற்கரையில் 79 அடி உயரத்தில் காந்தி மகானின் மணி மொழிகளுடன் எழுப்பவிருக்கும் காந்திஜி ஞாபகார்த்த ஸ்தூபி நிதிக்குப் பண உதவி புரிய வேண்டுமென்ற ஆவல் இலங்கையில் ஏராளமானவர்களுக்கு இருக்கிறது. ஆனால் இங்கு அமுல் நடக்கும் செலாவணிக் கட்டுப்பாடுகளின் காரணமாக அவர்கள் சென்னைக்குப் பணம் அனுப்ப முடியவில்லை. மொத்தமாக நிதிவசூலித்து அனுப்ப அனுமதி கொடுக்கவேண்டுமென்று கண்ட்ரோலருக்கு எழுதிக் கேட்டதில் பர்மிட் கொடுப்பதற்கில்லையென்று பதில் வந்து விட்டது. காந்தி ஸ்தூபியின் புனிதத் தன்மையை விளக்கி இந்த நிதிக்குப் பணம் அனுப்புவதை அனுமதிக்க வேண்டுமென்று சென்னை பாரமத்து இலாகா மந்திரி கனம் எம். பக்தவத்சலம் பிரதம மந்திரி ஸ்ரீ சேனநாயகாவுக்குக் கடிதம் எழுதி யிருப்பதாய்த் தெரியவருகிறது. மகாத்மா காந்தியின் கொள்கைகளில் அபாரமான மதிப்பு வைத்திருக்கும் இலங்கைப் பிரதமர் சென்னை மந்திரியின் கோரிக்கைக்கு இணங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய யுக்தி

இலங்கை மந்திரி ஸ்ரீ. ஏ. இ. குணசிங்கா கம்யூனிஸம் இங்கு பரவி வருவதைத் தடுக்க ஒரு புதுமாதிரியான நடவடிக்கை யெடுக்க உத்தேசித்திருக்கிறார். உண்மையான மத பக்தி யுடையவர்கள் நாசவேலைகளில் இறங்கமாட்டார்கள். ஆகையினால் பொது ஜனங்களிடையே ஆத்மீக மறுமலர்ச்சி ஏற்படச் செய்வதே கம்யூனிஸத்தை வெற்றிகரமாக முறியடிக்கக் கூடிய ஆயுதமென்று ஸ்ரீ. குணசிங்கா நம்புகிறார். இதற்காகச் சர்வமத ஐக்கிய முன்னணியை ஏற்படுத்தும் இலட்சியத்துடன் இலங்கையின் நான்கு முக்கிய மதங்களின் தலைவர்கள் அடங்கிய ஒரு மகாநாட்டை அவர் சமீபத்தில் கூட்ட உத்தேசித்திருக்கிறார். தொழிலாளர் ஒவ்வொருவரும் தினசரி காலையில் வேலைக்குச் செல்லுவ

தற்கு முன்னால் சில நிமிஷ நேரம் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்று ஸ்ரீ குணசிங்கா சொல்லி வருகிறார். லேயார்ட்ஸ் பிராட்வேயிலுள்ள பௌத்த ஆலயத்தில் தினசரி காலையில் தொழிலாளர் பிரார்த்தனை செய்துவிட்டுப் போவதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

மாலத் தீவின் சிறப்பு

இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ வி. வி. கிரி நீர்க் கொழும்பு சமூக தேசாபி விருத்தி யூனியனில் “கிராமப்புனருத்தாரணமும் காங்கிரசும்” என்பது பற்றிப் பேசிய பொழுது சமூக க்ஷேமாபிவிருத்திச் சங்கங்கள் இலங்கையில் பூரண மது விலக்கை அமுலுக்குக் கொண்டுவரத் தீவிரமாகப் பாடுபடவேண்டுமென்றும், மது அரக்கனை ஒழித்துவிட்டால் மக்களிடையே சுபிட்சமும் சந்தோஷமும் அதிகரிக்குமென்றும் வற்புறுத்தினார். மாலத் தீவுகளில் மதுவிலக்கு வெற்றிகரமாக அமுல் நடப்பதைச் சுட்டிக்காட்டி உலகத்தில் வேறு எந்த நாடும் மாலத் தீவுகளைப் போல மது அரக்கனை வீழ்த்திப் பூரண வெற்றி பெறவில்லையென்றும் கூறினார்.

பவுன் விலை படும் பாடு!

இலங்கையில் பவுன் விலை இந்தியாவை விட எப்பொழுதும் பத்துப் பதினைந்து ரூபாய் அதிகமாகவே இருந்துவருகிறது. சென்னையில் இப்பொழுது பவுன் விலை 76-8-0 ஆக இருக்கையில் இங்கு ரூபாய் 90 ஆக இருக்கிறது. இதற்குக் காரணம் இலங்கையில் இறக்குமதி செய்யும் தங்கத்தைச் சீராக விநியோகிக்க வழிவகைகளைச் செய்யாததுதான். இதனால் அதிகம் பாதிக்கப்படுவது யாழ்ப்பாணத் தமிழர்களே. தென்னிந்தியர்களைப் போல யாழ்ப்பாணத்திலும் பெண்களுக்கு ஓரளவு நகை நட்டுகள் செய்து போட்டால்தான் கல்யாணமாகும் என்ற நிலைமை இருந்து வருகிறது.

நகை வியாபாரிகள் ஒவ்வொருவருக்கும் தங்கம் கிடைக்க வேண்டுமென்றில்லாமல் நகை செய்யும் பொற் கொல்லர்களுக்கெல்லாம் அரசாங்கத்திடமிருந்து ஒரு அளவு தங்கத்தைக் கட்டுப்பாடு விலைக்கு வாங்கிக் கொள்ளக் கோட்டா ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொற்கொல்லர்கள் கையில் பணமில்லாமல் நகைக் கடைகளிடமிருந்து கடன் வாங்கி அதைக் கொண்டு போய் பாங்கில் கொடுத்துத் தங்கள் கோட்டா தங்கத்தை வாங்குகிறார்கள். பிறகு அவைகளை சொற்ப லாபத்துக்கு நகைக் கடைக்காரர்களிடமே விற்றுவிட்டுப் பிறகு தங்களுக்குத் தங்கம் வேண்டிய பொழுது அதிக விலை கொடுத்து அதே நகை வியாபாரிகளிடம் வாங்குகிறார்கள். இதனால் பவுன் விலை அதிகரித்துள்ளது.

வர்த்தக மந்திரி ஸ்ரீ அமரசூரியா சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பொழுது, யாழ்ப்பாண ஜில்லா கிராமக் கமிட்டிகள் சபையின் தலைவர் ஸ்ரீ வேதாபரணம் தலைமையில் ஒரு தூதுகோஷ்டி மந்திரியைச் சந்தித்தது. கல்யாணப் பதிவு சர்டிபிகேட்டைக் காண்பிப்பவர்களுக்கு மட்டும்தான் அரசாங்கம் தங்கம் கொடுக்க வேண்டுமென்றும், ஒவ்வொருவருடைய பண நிலைமையையும் அந்தஸ்தையும் பொறுத்த அளவு தங்கமே கொடுக்க வேண்டுமென்றும், இப்படிக் கட்டுப் படுத்தினால்தான் ஏழைகளும் நடுத்தர ஜனங்களும் அதிகக் கடன் பளுவுக்கு உள்ளாகாமல் தங்களுடைய குழந்தைகளுக்குக் கல்யாணம் செய்விக்க முடியுமென்றும் தூதுகோஷ்டியினர் மந்திரியிடம் விண்ணப்பித்துக் கொண்டனர். இவ்வருஷ முடிவுக்குள் ரிசர்வ் பாங்க் இலங்கையில் ஏற்படப்போகிறதென்றும் அதன் பிறகு தங்க விலையை ரிசர்வ் பாங்க் கட்டுப்படுத்துமென்றும் மந்திரி சமாதானம் கூறினார்.

இரு புறமும் இடி!

இலங்கையில் குறைந்தது ஐந்து வருஷ காலம் வசித்ததை ருசுப்படுத்தி ‘வாச பர்மிட்’ பெற்றவர்கள் மட்டுமே இந்தியாவுக்குச் சென்றால் இலங்கைக்குத் திரும்ப அனுமதிக்கப்படுகிறார்கள். இலங்கையில் ஐந்து வருஷம் வசித்ததை ருசுப்படுத்துவது பிரம்மப் பிரயத்தனமாயிருப்பதினால் லஞ்சம் கொடுத்தேனும் வாச பர்மிட் பெறவேண்டுமென்று சிலர் முயற்சிக்கின்றனர். இதனால் சில விஷமிகள் லஞ்சமாகப் பெரும் தொகைகளைப் பெற்றுக் கொண்டு கள்ளத்தனமாகக் குடியேற்றக் கண்ட்ரோலரின் ஒப்பத்தைப் போட்டு வாச பர்மிட் கொடுத்து ஏமாற்றி வருகிறார்கள். எனவே, உண்மையான வாசபர்மிட்டுகளைப் பெற்றுச் சென்றவர்கள் கூட மண்டபத்தில் கடுமையான சோதனைக்கு ஆளாகிக் கஷ்டப்படுகிறார்கள். சுமார் இருநூறு இந்தியர்கள் இலங்கைக்குத் திரும்பக் கூடாதென்று மண்டபத்தில் தடை செய்யப்பட்டிருப்பதாயும் தெரிகிறது.


துப்பட்டிகள் வெண்மையாகச் சலவை செய்யப் பட்டுள்ளன...
துப்பட்டிகள் பிரகாசமாகச் சலவை செய்யப் பட்டுள்ளன...
ஸன்லைட் சோப்பில்
தான்
SUNLIGHT SOAP
துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!



3. புரியாப் புதிர்

நாட்டாண்மைக்காரரிட மிருந்தும், அவனைத் துரத்திய கூட்டத்தாரிடமிருந்தும் தப்பிய பிறகு மாது பிடித்தான் ஒரு ஓட்டம். திடீர் என்று மேகங் கவிழ்ந்து கொண்டல் கட்டி மழை பெய்யவே அவனால் ஓட முடியவில்லை. ஊரின் மேலண்டைக் கோடியிலிருந்த பிரும்மாண்டமான ஆலமரத்தடிக்குப் போய் மழைபடாமல் சௌகரியமாய் ஒதுங்கி நின்றான்.

அந்த இலைகள் அடர்ந்த பசும் ஆலமரம் அவனுக்குச் சௌகரியமாகவே இருந்தது. நாலாபுறமும் விழுதுகள் பூமி வரை இறங்கியிருந்த அந்த விசாலமான ஆலமரம் ஒரு ஆயிரங்கால் மண்டபம் மாதிரியே தோற்றமளித்தது. அந்த மரத்தின் பிரும்மாண்டமான உருவமே, ஊரார் அம்மரத்தில் பயமும் பக்தியும் கொள்வது நியாயம் என்று கூறுவது போலிருந்தது. சிலர் அதில் பேயும் பிசாசும் குடிகொண்டிருக்கின்றன என்றும் கதை கட்டி விட்டனர். ஆனால் நல்ல நரிக்காட்டுக் குழந்தைகள், சாயங்கால நேரங்களில், அந்த ஆலமரத்தின் விழுதுருவத்தைப் பார்த்து ஒரே அதிசயத்தில் மூழ்கிவிடுவார்கள். அதைப் பற்றி ஆயிரம் விதமான கற்பனைகள் அவர்கள் உள்ளத்தில் எழும். அந்த மரத்தின் கிளைகளில் காக்கைகள் கூடுகட்டி வசிக்கும். மாலை நேரங்களில் அந்தக் காக்கைகள் கூட்டுக்குத் திரும்பும்போது ஊர்க் குழந்தைகள், அவைகளை உற்சாகமாக எண்ணத் தொடங்கி விடுவார்கள். தூங்கும் போது கூட, அந்தக் காக்கைகள் அம்மரத்தில் அஷ்டக் குரங்குகளுடன் எப்படிச் சேர்ந்து வாழுகின்றனவோ என்று அதிசயத்துடன் படுப்பார்கள். நடு நிசியில் ஏதாகிலும் ஒரு குருட்டுக் காக்கை கரையும் சத்தம் கேட்டால், குழந்தைகள் தங்கள் கிழிந்த பாய்களிலுள்ள போர்வைகளை நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டு கண்ணை இறுக மூடிக் கொண்டு விடுவார்கள். ஏதோ ஒரு பிசாசு அந்தக் காக்கையைப் பிடித்து வதைக்கிறது, அதனால்தான் அது அப்படிக் கத்துகிறது என்றெல்லாம் பயந்து நடுங்குவார்கள்.

மாதுவுக்கு இம்மாதிரியான மூட பயங்களே கிடையாது. அவனுக்குப் பன்னிரண்டு வயதுதான் ஆகிறது. இருந்தாலும் அவன் உலகம் தெரிந்த நாள் முதல் யாரும் போகாத இடங்களில் பல இரவு பகல்கள் கழித்திருக்கிறான். அம்மாதிரி சமயங்களில் எல்லாம் இம்மாதிரி யெல்லாம் அவன் பயப்பட்டால் சாத்தியப்படுமா, என்ன?

அவன் பிறக்கும்போதே அவனுடைய தாய் இறந்து விட்டாள்; அவள் இறந்த சில நாட்களுக்கெல்லாம் தகப்பனும் இறந்து விட்டான். ஆகவே அவனுக்கு வீடு என்று ஒன்றிருந்ததாகக் கூட ஞாபகமில்லை. ஆனால் அவன் அடிக்கடி, 'நான் யார்? எனக்கு மாதவன் என்று பெயரிட்டுவிட்டு என்னை 'மாது' என்று ஏன் அழைக்கிறார்கள்? அந்த இடையன் மகன் கப்பனைவிட நான் எந்த விதத்தில் தாழ்த்தி? நான் எதற்காக இப்படி அலை

கிறேன் ?' என்று தனக்குத் தானே கேட்டுக்கொண்டு ஒன்றும் புரியாமல் வியந்திருக்கிறான். இம்மாதிரி தனக்குள் பேசிக்கொள்ளும் வழக்கம் அவனிடம் சாதாரணமாகக் கிடையாது. அப்படி எண்ண ஆரம்பித்தாலும் ஒரு கண நேரந்தான்! அடுத்த கணம் எப்பொழுதும் போல் சற்றும் கவலையின்றிப் பட்சிகளைப்போல் கூவிக்கொண்டு ஊர் சுற்ற ஆரம்பித்துவிடுவான். தனக்கென்று வீடு இல்லையே என்று அவன் கவலைப்பட்டதே கிடையாது. அவன் சென்ற இடமெல்லாம், இருந்த இடமெல்லாம் அவனுக்கு வீடுதான்!

இருள், தனிமை என்றெல்லாம் அவனுக்குப் பயம் கிடையாது. கனவிலாகிலும் சரி, நனவிலாகிலும் சரி, அவன் பயந்தான் என்பது கிடையாது. பாம்பைப் பற்றிய பயமோ, விஷப் பூச்சிகள் வழியிலிருக்குமே என்ற பயமோ, அவனுடைய அர்த்தமற்ற உல்லாச அலைச்சலைத் தடை செய்தது கிடையாது. பெரியவர்கள் பயப்படும் கொள்ளிவாய்ப் பிசாசுகளைக் கண்டு (அது காட்டில் ஏற்படும் தீ) சற்றும் பயப்படாமல் அதன் அருகிலேயே தைரியமாக நடந்து போயிருக்கிறான். இராக் காலங்களில் நாலாபுறமும் பயங்கரமாகக் காட்சியளிக்கும் மரங்களிலிருந்து வரும் விதவிதமான ஓசைகள், சத்தங்கள், ஒலிகள் இவைகள் எல்லாம் கேட்டுச் சற்றும் பயந்ததில்லை. ஏன், அவை, அவனுடைய மேலான சிந்தனைக்குரிய விஷயமாகக் கூடக் கருதியதில்லை. சாதாரணமாகக் காட்டுப் பிரதேசங்களில் இரவு நேரங்களில் தனியாக நடந்து போக நேர்ந்தால், மனசைத் தைரியப்படுத்திக் கொள்ள ஏதாகிலும் பாடிக்கொண்டோ, கை தட்டிக் கொண்டோ போவதுண்டு. மாது சும்மா 'விஸில்' அடித்துக் கொண்டு கூடப் போக மாட்டான்.

எத்தனையோ தடவை அவன் மீது முள்ளம் பன்றிகள் பாய்ந்திருக்கின்றன. காட்டில் எங்கு கண்டாலும் முள்ளம் பன்றிகள் இருக்கும் என்பதும் அவனுக்குத் தெரியும். இருந்தாலும் அவன் தற்காப்புக்காக ஒரு ஆயுதமும் எடுத்துச் சென்றதில்லை. கவி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் சொல்லிய படி, 'ஈயும் எனக்குத் தோழன் - ஊரும் எறும்பும் எனக்குத் தோழன்'- என்று எல்லாருடனும் அவனுக்குத் தோழமை உண்டு. ஆண்டவன் சிருஷ்டித்த உயிருள்ள வஸ்துக்கள் உயிரற்ற வஸ்துக்கள் எல்லாவற்றிடமும் அவன் நெருங்கிய உறவு கொண்டாடினான். ஏன், அவற்றிடையே தனக்கும் ஒரு ஸ்தானம் பெறச் சண்டை யிடவும் தயாராய் இருந்தான்.



அவன் ஒரே ஒரு விஷயத்தைக் கண்டுதான் பயந்தான். அப்படிப் பயந்த போதெல்லாம், தனக்குத் துணை ஒருவருமில்லையே என்றும் தன்னை அன்புடன் அரவணைத்துக் கொள்ளும் கைகள் பெற்றோரில்லையே என்றும் ஏங்குவான். இப்படியெல்லாம் அவன் பயந்தது இடியைக் கண்டுதான்.

அவன் எந்த மூட நம்பிக்கையின் காரணமாகவும் இடியைக் கண்டு பயப்படவில்லை. இடியின் அபாரமான அழிக்கும் சக்தியை நன்றாகக் கவனித்திருந்தான். அதனால்தான் பயந்தான். மின்னலின் கண்ணைப் பறிக்கும் ஒளி தாங்காது, பாதி மலர்ந்ததும் மலராமலுமிருந்த மொட்டுக்கள் மலர்ந்திருப்பதைப் பார்த்திருந்தான். அகலப் படம் விரித்து ஆடும் பாம்புகள், மின்னலின் ஒளி தாங்கமாட்டாது 'தொப்'பென்று அந்தக் கணமே இறந்து விழுவதைப் பார்த்திருந்தான். இயற்கையின் இந்த அபார சக்தியைக் கண்டு அவனுக்கு ஒரே பிரமிப்பு. ஆனால் அவன் பயந்தது மின்னலின் கண்ணைக் கூசும் ஒளியைக் கண்டல்ல; அந்த மின்னலுக்குப் பிறகு மண்டையைப் பிளக்க வருவதுபோல் சப்திக்கும் இடிச் சத்தத்தைக் கண்டுதான். அவன் பயந்தது எல்லாம் இடியைக் கண்டுதான்.

ஆனால் இன்று மாது அத்தகைய பயத்துக்கு ஆளாக வேண்டி நேரும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவன் ஆலமரத்தடியில் நின்றுகொண்டு, நாட்டாண்மைக்காரரின் பெண்சாதி மிகவும் சிரமப்பட்டுச் செய்து வைத்திருந்த ராகி அடையைக் கடித்துத் தின்றுகொண்டிருந்தபோது, அன்றைய வைபவங்கள் எல்லாம் மற்றும் ஒருமுறை அவன் ஞாபகத்துக்கு வந்தன. உடனே அவனுக்குச் சிரிப்பும் வந்து விட்டது.

மலையாத்தாள் வீட்டிலிருந்து இரண்டு அடையும், வெள்ளரிப் பிஞ்சும், கொஞ்சம் உப்பும் கொஞ்சம் சர்க்கரையும்தான் திருடிக் கொண்டு வந்திருந்தான். என்றாலும் இதற்காக, அவள் வாய்க்கு வந்தபடியெல்லாம் தன்னை வைது கொண்டிருப்பாள் என்பது அவனுக்குத் தெரியும். அவன் வேகமாக வெளியே ஓடி வந்து கொண்டிருந்த போது வழியிலிருந்த பானைகள், அவன் கால் பட்டு உடைந்து விட்டன என்பது உண்மைதான். ஆனால் அது அவன் குற்றமல்ல! எனினும் அதன் பொருட்டு அவளுக்குத் தன்மேல் எவ்வளவு ஆத்திரமும் கோபமும் வரும் என்று நினைத்தபோது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.

இம்மாதிரி ஏதெல்லாமோ கனவுகளில் ஈடுபட்டு, ஒரு மணி நேரத்துக்கு மேல் அவன் அந்த மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். மழை இன்னும் விட்டபாடில்லை. அவன் கொண்டு வந்திருந்த தின்பண்டங்கள் எல்லாம் தின்று தீர்த்துவிட்டான். காலை நீட்டிக் கொட்டாவி விட்டு, சோம்பல் முறித்தான். அப்போது அவன் பக்கத்தில் சல சல என்று சத்தம் கேட்டது. ஒரு கருநாகம் அவனை விஷப் பார்வை ஒன்று பார்த்துக் கொண்டிருந்தது. பாம்பின் பளபளப்பான மேனியையும், கூர்மையான வெறுப்பைக் கக்கும் பார்வையையும் அவன் எப்போதுமே வியந்திருக்கிறான். ஆனால் மற்றப் பாம்புகளை அவன் பிழைத்துப் போக விட்டாலும், இந்தவகைப் பாம்பை அவன் விட்டு வைத்ததில்லை. இந்தப் பாம்பு மிகவும் பயங்கரமானது என்று அவனுக்குச் சொந்த அனுபவத்திலேயே தெரியும். பாம்புகளைப் பிடிப்பதற்கு அவனுக்கு எவ்வித ஆயுதங்களும் தேவையில்லை. அதன் வழவழப்பான கழுத்தைப் பிடித்துப் பிடித்து அவன் கைகளுக்குத் தனியான லாகவம் ஏற்பட்டிருந்தது. எனினும் அந்தப் பயங்கர உருவத்தை உற்றுப் பார்த்தான். எந்தச் சமயம் பார்த்து அதன் கழுத்தைப் பிடிக்க வேண்டும் என்று தெரியும். அதனால் சர்வ ஜாக்கிரதையாக இருந்தான்.

அந்த நிமிஷம், அவன் பயப்பட்டு வந்த ஒரு மின்னல் மின்னி, பயங்கரமாக இடித்தது. சுற்று வட்டார வயல் வெளிகளை யெல்லாம் தேஜோமயமாக்கி, அவனை நடுங்கச் செய்தது. அந்தச் சத்தத்திலும் ஒளியிலும்தான் எங்கே இருக்கிறோம் என்பதையே மறந்து போனான். தன் முன் குச்சியைப் போல் விறைத்து நின்று கொண்டிருந்த நாகத்தையும் மறந்தான். அவன் அறிந்ததெல்லாம் மின்னலின் கோடி சூரியப் பிரகாசமும் பயங்கர இடி



ஒலியுந்தான். ஆம், யாரோ ஆயிரங் கற்கள் கொண்டு தன்னை அடிப்பது போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. பிறகு என்ன வாயிற்று என்பது ஒன்றும் அவனுக்குத் தெரியாது. மூர்ச்சையாகி விழுந்து விட்டான்.

* * *

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு மழையும் நின்றுவிட்டது. வானமும் தெளிந்து காணப்பட்டது. பூரண சந்திரன் கம்பீரமாகத் தவழ்ந்து வந்து அந்த வனப் பிரதேசம் முழுவதிலும் பால் நிலவைப் பொழிந்தான். அவன் கண்கள் மூடிக் கொண்டுதான் இருந்தான். அப்போது தான் ஆலமரத்தடியி லிருந்தது ஞாபகத்துக்கு வந்தது. அத்துடன் அன்று ஊரிலிருந்து தப்பி ஓடிவந்ததும், இந்த மரத்தடியில் ஒதுங்கியதும் நினைவுக்கு வந்தன. பிறகு திடீர் என்று அந்தக் கருநாகமும் நினைவுக்கு வரவே, ஒரு தூக்குத் தூக்கிப் போட்டது. உடனே கண்ணைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான். அவனுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது! சற்று முன் இருந்த பிரும்மாண்டமான மரம் இப்போது காணவில்லை. மாயமாய்



மறைந்து விட்டது. அவ்வளவு பெரிய மரம் அங்கேயிருந்தது என்பதற்கு இரண்டு அடி உயரமுள்ள அடி மரத்தைத் தவிர வேறு அறிகுறி ஒன்றும் காணவில்லை. சுற்றிலும் வெகு தூரத்துக்கு வெகு தூரம் மரத்தை அழகு படுத்திக் கொண்டிருந்த இலைகள் உதிர்ந்து கிடந்தன. கள்ளிகளாகக் கீழே கிளைகள் விழுந்து கிடந்தன! என்ன ஆச்சரியமான சம்பவம்! அவன் உள்ளம் முழுதும் இந்த வியப்பே நிறைந்திருந்தது. அவன் எழுந்து ஒரு அடி எடுத்து வைத்தான். அவன் பாதம் மிருதுவான வஸ்துவின் மேல் பட்டது. உடனே அவனுக்குப் பாம்பின் நினைவு வந்தது. காலைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு குனிந்து பார்த்தான். பாம்பு இறந்து கிடந்தது. சற்றுத் தூரத்தில் பறவைகளும் குரங்குகளும் இறந்து கிடப்பதைப் பார்த்தான். சற்று முன் நிகழ்ந்த இடியின் பயங்கரக் கூத்தில் அவன் ஒருவன்தான் தப்பினான் என்பதை உணர்ந்தான்.

"இன்னுமா நீ இங்கேயிருக்கிறாய்?" என்று வந்த ஒரு பரிச்சயமான குரல் அவனைப் பகல் கனவிலிருந்து எழுப்பியது!

மாதவன் திரும்பிப் பார்த்தான். அந்த நிலவொளியில் தலையாரி அவனை நோக்கி வருவது தெரிந்தது. அவனுக்கு இப்போது பயந்து ஓடவேண்டும் என்று தோன்றவில்லை. ஏனெனில் அந்தக் கிழவன் அவன்மேல் எப்போதுமே பிரியமாகத்தான் இருப்பான். போதாததற்கு அன்று சாயந்திரம் நடந்த விஷயங்களைப் பற்றி அவன் முடிந்துபோன அத்தியாயமாகக் கருதினான்.

கோவிந்தன் "விசித்திரப் பிள்ளையாயிருக்கிறாயே? இந்த மழை, இடியெல்லாம் பார்த்தால் உனக்குப் பயமாக இல்லையா? உனக்குக் காட்டில் இம்மாதிரி தனியாகச் சஞ்சரிப்பது பயமாக இல்லை? என்னோடு வந்து இன்று இராத்திரி எங்கள் வீட்டில் தங்கி விடு. பொழுது விடிந்ததும் போகலாம்" என்றான்.

"அதெல்லாம் முடியாது!" என்று சொல்லிக் கொண்டே நடந்தான் மாது.

"நில், மாதவன்! உன் அப்பா அம்மா எல்லாரும் எனக்கு நன்றாகத் தெரிந்தவர்கள். அவர்கள் இரண்டு பேரும் எனக்கு எவ்வளவோ நல்லது செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காகவாவது என்னுடன் வா. அசட்டுத்தனமாக நடந்து கொள்ளாதே" என்றான் கோவிந்தன்.

இந்த அன்பழைப்பை மாது ஏற்கவில்லை. நேரே காட்டுக்குள் சென்று மறைந்து விட்டான். கோவிந்தன் இந்தச் சிறுவனின் விசித்திரப் போக்கைக் கண்டு பிரமித்து நின்றான்.

4 முத்தண்ணாவும் தோழர்களும்

முத்தண்ணாதான் எல்லா நரிகளாலும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்ட தலைவர். அது எல்லோரையும் விட வயதில் மூத்தது என்பதற்காகவோ, எல்லோரையும்விடப் பருமன் என்பதற்காகவோ, அதற்கு அந்தப் பதவி கிடைக்கவில்லை. எல்லா நரிகளையும்விட அதற்குத்தான் அதிக புத்தியிருப்பதை மற்ற நரிகள் உணர்ந்ததால்தான் அதற்கு அந்தப் பதவி கிடைத்தது.

அது எந்த விஷயத்திலும் ஒரு முடிவுக்கு வர அதிக நேரம் எடுத்துக் கொள்ளும். அவசரக் குடுக்கை போன்ற 'இளவட்டங்கள்' முத்தண்ணாவின் நிதானத்தைக் கண்டு பொறுக்காமல் துடி துடிக்கும்; கோபம்கொள்ளும். ஆனால் கடைசியில் முத்தண்ணாவுக்குத்தான் வெற்றி கிடைக்கும். அது நிதான புத்தியுடன் செய்யும் முடிவுதான் நரி உலகுக்கு

க்ஷேமமானது; சரியானது என்று ஏற்படும். ஆனால் மூத்தண்ணுவைப் பற்றிப் பொதுவாகக் கூறப்படும் குறைகள் என்னவோ உண்மைதான். மூத்தண்ணுவுக்குச் சோம்பல் அதிகம்; சுறுசுறுப்பில்லாமல் எங்கேயாவது ஒரு புதரில் சதா தூங்கிக் கொண்டிருக்கும். அதன் தூக்கத்தைத் தெளியவைத்து சுய புத்திக்குக் கொண்டு வருவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடும் அதன் மனைவி உம்மணு மூஞ்சிக்கு. அவ்வப்பொழுது நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலைமையை மூத்தண்ணுவை எழுப்பி உணர்த்துவதற்குள் தாவு தீர்ந்துவிடும். உம்மணு மூஞ்சிக்கு மூத்தண்ணு இப்படிச் சோம்பிக் கிடந்துவிட்டு விழித்தாலும் உடனே ஒரு வருஷத்துக்கு வேண்டிய உணவுத் திட்டத்தை அலட்சியமாகத் தயாரித்து விடும். அந்தத் திட்டத்தை மற்ற நரிகள் பயமின்றிப் பின்பற்றலாம். மூத்தண்ணு, தான் இருந்த இடத்திலிருந்து எந்த எந்த இடத்தில் நண்டுகள் அதிகம் கிடைக்கும், எந்த இடத்தில் எந்தப் பருவ காலத்தில் எலிகள் மலிந்து கிடைக்கும் என்றெல்லாம் ஞானதிருஷ்டியில் சொல்வதுபோல் கூறும். மூத்தண்ணுவின் பழுத்த அனுபவத்திலிருந்து வரும் மேற்கண்ட யோசனைகள், நரிகளைப் பஞ்சத்தில் பட்டினி கிடந்து சாகாமலும், பேர் ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றியும் வந்திருக்கின்றன. ஆகவே, இந்த மூத்தண்ணு மட்டும் இப்படி மூன்றும் புதருமாயுள்ள காட்டில் நரியாகப் பிறக்காமல் பக்கத்திலிருக்கும் கிராமத்தில், ஏதாகிலும் ஒரு குடிசையில் பிறந்திருந்தால் கூடப்போதும், அது தன்னுடைய கூர்மையான சமயோசித புத்தியினாலேயே மனித உலகிற்குத் தான் ஒரு தவிர்க்க முடியாத தலைவன் என்பதை நிரூபித்திருக்கும் — என்றெல்லாம் மூத்தண்ணுவின் இல்லாள் உம்மணு மூஞ்சி நினைப்பாள். இவ்விதம் அவள் நினைத்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

மேற்கண்ட குணங்களுக்காக மூத்தண்ணுவைக் கண்டு உம்மணு மூஞ்சி வியந்தது என்றாலும், அது மூத்தண்ணுவின் மேல் ஒரே அடியாகக் காதல் கொண்டு மயங்கிப் போய்விடவில்லை. மூத்தண்ணு எப்போதும் ஏதோ ஒரு சிந்தனையில் ஆழ்ந்த வண்ணமிருக்கும். இதை உம்மணு மூஞ்சி, தன்னை மூத்தண்ணு அலட்சியப் படுத்துவதாக முட்டாள்தனமாக எண்ணியது. மூத்தண்ணு போன்ற அரசியல் வாதிக்கும், வேதாந்திக்கும் உம்மணு மூஞ்சி ஏற்ற மனைவி யல்லதான்.

இதனால் உம்மணு மூஞ்சி மூத்தண்ணுவுக்குக் கீழ்ப்படியாமல் முரட்டுத்தனமாக நடந்து கொண்டது. அத்துடன் உம்மணு மூஞ்சி செய்த ரொம்பவும் ஆத்திரமூட்டும் படியான காரியம், அவசரக் குடுக்கை போன்ற இளவட்டங்களுடன் சேர்ந்து கொண்டு, மூத்தண்ணுவுக்குத் தொந்தரவளிக்கும் வகையில் கூத்தடித்ததுதான். மூத்தண்ணுவின் சாந்த சுபாவமும், இந்தச் சில்லறை விஷயங்களைப் பெரிது படுத்தாத பெருந்தன்மையும்தான் அவசரக் குடுக்கையைக் காப்பாற்றியது. இல்லையெனில், எப்பொழுதோ, மூத்தண்ணுவின் வயதுவந்த சிஷ்யகோடிகள் அவசரக் குடுக்கையை அடித்துக் கொன்றிருக்கும்.

அவசரக் குடுக்கையும் தனக்கென்று ஏற்பட்ட ஒரு அலாதி முறையில் மூத்தண்ணுவிடம் ஈடுபட்டிருந்தது. அவசர புத்தியும் பொறுமையற்ற சுபாவமும் இருந்தாலும், தலைவரின் உத்தரவு மீறி நடந்தது கிடையாது. கோணவால், மண்டு, மொட்டை என்ற நரிகளும் அவசரக் குடுக்கையைப் பின்பற்றி மூத்தண்ணுவை எதிர்த்துப் பேசும். கடைசியில் அவசரக் குடுக்கையே, 'மூத்தண்ணு சொல்வதுதான் சரி' என்று பின்பற்றத் தொடங்கியவுடன், இவையும் பின்பற்றத் தொடங்கிவிடும்.

நரி உலகில் பிரபலமாயுள்ள மேற்கண்ட பிரமுகர்களை, நல்ல நரிக்காட்டுவாசிகளில் ஒரு சிலர்தான் அறிவார்கள். ஏன், நரிக்குறவன் போந்தலிக்கு, இந்தப் பிரமுகர்களையெல்லாம் தெரியும். ஆனால் அவன் அறிந்ததெல்லாம் குறுகிய நோக்குடன்தான். அவன் கண்களில் நரிகளின் முதுகின் அகலமும், தோலின் நேர்த்தியும்தான் பட்டுவந்ததே யொழிய உள்ளப் பாட்டை அவன் உணர்ந்ததில்லை.

ஆனால் இவ்விஷயத்தில், மாதவன் மற்றவர்களுக்கு முற்றும் மாறுபட்டிருந்தான். ஒவ்வொரு நரியையும் பற்றித் தனித் தனியாக அவனால் சொல்லமுடியும். அவனால் மூத்தண்ணுவுடன் சரிசமமாகப் பழக முடியும்; உம்மணு மூஞ்சியின் ஊடல் விளையாட்டுக்களைச் சரிக்கட்டி வழிக்குக் கொண்டுவர முடியும்; அவசரக் குடுக்கையின் அவசர புத்தியைக் கண்டிக்க முடியும். மொத்தத்தில், அவனால் நரிகளுடன் நரியாக வாழமுடியும். ஏன், அவனே ஒரு தடவை கூறியபடி, அவன் நரிகளின் கஷ்ட சுகங்களை உணர்ந்தான்; நரிகளும் அவனுடைய உணர்ச்சிகளை உணர்ந்து மதிப்பளித்தன.

5. பிச்சை முத்து

ஊரின் நாட்டாண்மைக்காரனை பிச்சைமுத்து ஒரு மாதகாலமாகப் படுத்த

படுக்கையிலிருந்தான். அவன் நகர முடியாத அளவுக்கு அசக்தனாக இருந்தான். அவன் வீட்டு வாயிலில் தொங்கிய வேப்பிலைக் கொத்தே, அவனுக்கு என்ன நோய் வந்திருக்கிறதென்பதை அறிவித்து வந்தது. ஆம்; ஊர்க் குழந்தைகள்கூட, அதைப் பார்த்ததும், அவனுக்குப் பெரியம்மை போட்டியிருக்கிறது என்பதை அறிந்து கொண்டார்கள்.

ஊரின் நாட்டாண்மைக் காரனாகத் தான் இருக்கட்டுமே, வயலுக்கு ஒருநாள் போகவில்லை என்றால், பயிர் கருகிப்போய் வீணாக முடியும் என்றிருந்தது பயிர் நிலைமை. வயலுக்குப் போய் ஒவ்வொருவரும் உழைத்தால்தான் பலன் உண்டு. ஆனால் பிச்சைமுத்துவோ, ஒரு மாதகாலமாக வயல் பக்கமே போகவில்லை. அவன் மனைவியும், காலமெல்லாம் அவனையே கவனித்து வந்ததால், வயலுக்குப் போய்ப் பயிரைப் பார்வையிட முடியவில்லை.

ஊரிலேயே பிச்சைமுத்துத்தான் எல்லாவற்றிலும் முதல் ஸ்தானம் பெற்று வந்தான். சித்திரைத் திருவிழா என்று வந்தால் முதல் மரியாதை இவனுக்குத்தான் நடக்கும்; பொங்கலன்று விரட்டப்படும் முதல் மாடு, இவன் மாடாகத்தான் இருக்கும். அக்கம் பக்கங்களில் நடக்கும் கல்யாணங்களில் எல்லாம் முதல் தாம்பூலம் இவனுக்குத்தான். ஊருக்கு எந்த சர்க்கார் உத்தியோகஸ்தர் வந்தாலும் முதல் வரவேற்பு இவனுடையதாகத்தான் இருக்கும். ஆனால் இப்பொழுது அவனுடைய நோயின் காரணமாக ஊராரால் ஒதுக்கப் பட்டவனாகி விட்டான்; சமூகப்பிரஷ்டனாகி விட்டான்.


இவனுக்கு எதிலும் முதல் ஸ்தானம் என்று தொன்று தொட்டு வந்த பழக்கம் மாறி, ஊரில் செல்வாக்குள்ளவர்கள் அந்த ஸ்தானங்கள் பெறலாயினர்.

இவையெல்லாம் கேட்கும்போது, பிச்சைமுத்து மனக்கசப்பும் கோபமும் கொண்டு கத்துவான். அவன் மனதில் அவன் வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கியமான சம்பவங்கள் மாறி மாறி வரும். இம்மாதிரி பழைய சம்பவங்களை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தபோது, இந்த ஊரில் படிப்படியாகத் தான் செல்வாக்குப் பெற்றதை நினைத்தான். அவனுக்குப் பெருமையாக இருந்தது.

சிறுவயதில், அவனுடைய வளர்ச்சியைப் பாதிக்கவந்த இரு பயங்கர விரோதிகளின் நினைவு வந்தது. அவர்கள் இருவரும் இப்பொழுது அவன் முன் உருவெளித் தோற்றமாக வந்தார்கள். அவனுக்கு எவ்வளவு கஷ்டங்களையும், வேதனைகளையும் அந்தக் காலத்தில் அவர்கள் அளித்தார்கள். அவர்களில் ஒருவனை மெல்ல வென்றான். அவன் செல்வாக்கிழந்து விழ இருந்த சமயத்தில் திடீர் என்று இறந்து விட்டான் என்பதை நினைத்தபோது பிச்சைமுத்துவுக்குத் திருப்தியாக இருந்தது. இந்தச் செய்தி, பிச்சைமுத்து அன்று ஊர்க் குளத்தில் குளித்துக் கொண்டிருந்த போது கிடைத்தது. உடனே, அவன் சந்தோஷம் தாங்கமாட்டாமல், அவனுக்காக மூக்கைப்பிடித்து ஆழ முங்கி இன்னொரு முழுக்குப் போட்டான். இந்தக் காட்சி அவனுக்கு விரிவாக ஞாபகம் வந்தது. அத்துடன் சிரிப்பும் வந்தது.

அவனுடைய மற்றொரு விரோதி இறந்து விடவில்லை. என்றாலும், அவனுக்குக் கழுத்துக்கு மேலே கடன் சேர்ந்து விட்டதால் இலங்கைக்கு ஓடிப்போய் விட்டான். அங்கே போய் உழைத்துச் சம்பாதித்து, ஏராளமான பணத்தைத் திரட்டி வந்து பிச்சைமுத்துவுடன் சண்டை போடவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் போனான். ஆனால் அவன் பிறகு திரும்பவே இல்லை. ஆகவே நாட்டாண்மைக்காரன் அதிருஷ்ட தேவதை தனக்கே இத்தனை நாளும் அருள் பாலித்து வந்ததாக நினைத்தான். இந்த எண்ணம் தோன்றியவுடன் அவனுக்கு உற்சாகமாக இருந்தது.

ஆனால் இந்த உற்சாகம் ஒரு கணம் இருந்து மறைந்து விட்டது. பிச்சைமுத்து, தான் வென்ற இரு விரோதிகள் உருவெளித் தோற்றமாகத் தோன்றிய இடத்தில் தன்னுடைய உருவமே தோன்றுவதைப் பார்த்தான். (தொடரும்)



கற்றுக்குட்டி கார் ஓட்டிகள் L போர்டு மாட்டிக் கொள்ளுவது போல் நடைவண்டி ஓட்டிப் பழகும் அம்பியும் L போர்டு மாட்டிக் கொண்டான்!

வட்ட மேஜை

★ மறக்கருணை காட்டுங்கள்!

புலால் உண்ணுவது தவறு என்றோ, பாபம் என்றோ, அதைத் தடுக்க வேண்டும் என்றோ நான் சொல்லவில்லை. நம் நாட்டில் இப்பொழுது உணவுப் பொருள்களுக்கு ஏகக் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. பெரும்பாலோர் புலால் உண்ணுவதால் உணவுப் பொருள்கள் (தான்ய வகைகள்) எப்படியோ ஈடு கட்டி வருகின்றன. இந்த நிலையில் புலால் உண்ணுதலைத் தடுப்பதானால் நாட்டின் நிலை இன்னும் சீர்கேடு அடையும் என்று சொல்ல வேண்டியதில்லை. முதலாவதாக, இன்று வரை மாமிசம் சாப்பிட்டு வந்தவர்களுக்கு அவ்வுணவுக்குப் பதிலாகத் தான்யவகைகள் 'சப்ளை' பண்ணவேண்டும். இரண்டாவதாக, விருத்தியாகும் ஆடுகளுக்கு வேறு உணவு போட்டு வளர்க்க வேண்டும். ஆதலால் புலால் உணவைத் தடுப்பது என்பது முடியவே முடியாத காரியம்.

ஆனால் கசாப்புக் கடைகளிலே கொலை செய்யப்படும் ஆடுகள் சித்திரவதை செய்யப்படுகின்றன. இதைத்தான் பொது ஜனங்கள் தடுக்க முயல வேண்டும். நான் சில பரிதாபகரமான காட்சிகளைப் பார்க்க நேர்ந்தது. அவைகள் என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தன. இந்த வாயில்லா ஜீவன்களின்மேல் எழுந்த இரக்கமே என்னை இக் கடிதம் எழுதத் தூண்டியது.

நம் நாட்டில் இரண்டு மாபெரும் அஹிம்சா மூர்த்திகளாகிய கௌதம புத்தரும், மகாத்மா காந்தியும் அவதரித்தார்கள். இவ்விரு மகான்களும் போதித்த அஹிம்சா தர்மத்தை நம்மால் முழுதும் கடைப்பிடிப்பது என்பது முடியாத காரியம். ஏனென்றால் உணவுக்கும், மருத்துவக் கல்லூரியின் அவசியத்திற்கும் விலங்குகளைக் கொல்லத்தான் வேண்டும் அல்லவா? ஆனால் நம்மால் கூடுமானவரை அஹிம்சையை மேற்கொள்ள நாம் முயலவேண்டும். அதற்கு உடனுக்குடன் சில சீர்திருத்தங்கள் நடைபெற வேண்டியது ரொம்பவும் அவசியம்.

யாகங்கள், பூஜைகள், பிரார்த்தனைகள் இவற்றின் பெயரால் விலங்குகளைக் கொல்லுவது தடுக்கப்பட வேண்டும்.

கசாப்புக் கடைகள் திறந்த வெளியில் பொது மக்களின் கண்களுக்கு எதிரில் அருவருப்பைத் தரும் முறையில் அமையக் கூடாது. நல்ல கதவு வைத்து மூடப்பட்டிருக்க வேண்டும். கசாப்புக் கடை என்று போர்டு போட்டால் தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் தெரிந்து கொள்ள மாட்டார்களா?

ஆடுகளைக் கொலை செய்வதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கொலை செய்யப்படும் ஆடுகளைச் சற்றுத் தொலைவில் (கசாப்புக் கடைக்கு மறைமுகமாக) மேயவிட்டு அவைகளை ஒவ்வொன்றாகத் தனியே கொண்டுவந்து கொல்லட்டும். பத்து ஆடுகள் கொல்ல வேண்டுமென்றால் மொத்தமாக அவற்றை ஒரு இடத்துக்குக் கொண்டுவந்து கொல்ல வேண்டாம். ஒவ்வொன்றாகக் கொண்டு வந்து கொல்லட்டுமே! மேற்கண்டபடி மொத்தமாகக் கொண்டு வந்து ஒவ்வொரு ஆடாக வெட்டும்போது, மிச்சமிருக்கும் ஆடுகள் அந்தக் கன்னாராவிக் காட்சியைக்கண்டு அலறுகின்றன. இதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. அவற்றின் இதயக் குரல் உள்ளத்தைப் பிளக்கிறது. ஆகவே, தான் சாகப்போகும் நிமிஷம் வரை அதற்கு அறிவுறுத்தாமல் கொல்லக்கூடாதா? இறக்கப்போகும் இந்த வாயில்லா ஜீவன்களுக்கு இச்சிறு உபகாரமாவது செய்யக்கூடாதா? அவைகளை வீணில் ஏன் சித்திரவதை செய்ய வேண்டும்?

நல்ல கதவுகள் ஜன்னல்கள் வைக்கப்பெற்று நன்றாகக் கட்டப்பட்ட கட்டிடங்களில் இறைச்சி விற்பனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆடுகளைச் சம்ஹாரம் செய்யும் இடம் ஒரு ஒதுப் புறத்தில் அமைய வேண்டும். சம்ஹாரம் செய்துவிட்டு, கொண்டு வரும் இறைச்சியை நல்ல வண்டிகளில் மூடிக் கொண்டுவர வேண்டும். மொத்தத்தில் கசாப்புக் கடைகள் சுத்தமாக இருக்க வேண்டும். இவ்விஷயங்களில் சுகாதார மந்திரியும், எஸ். பி. ஸி. ஏ. ஸ்தாபனத்தாரும் முக்கியமாகப் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும். பொது ஜனங்களும் அவர்களை ஆதரித்தால் இக் கொடுமைகளை எளிதில் ஒழிக்கலாம். மகாத்மா காந்தி எந்த லட்சியத்திற்காகப் பாடுபட்டுத் தம்முயிரைத் தியாகம் செய்தாரோ அந்த லட்சியமாகிய அஹிம்சை தர்மத்திற்காக இச்சிறு உபகாரத்தைச் செய்ய நாம் முன் வருவோமாக!

தாம்பரம்
4—4—50 — **லலிதாம்பிகா**

ஆந்திரரின் தமிழ்

இலங்கையில் பைந்தமிழ் படுகொலை செய்யப் படுகிறதென மார்ச்சு 12உ 'கல்கி'யின் வட்டமேஜையில் ஒரு அன்பர் எழுதியிருப்பதைக் கண்டேன். சமீபத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றையும் கூற விரும்புகிறேன்.

அன்று 'கல்கி'யும் கையுமாகக் கல்கத்தா மெயிலில் ஏறினேன். நான் இறங்க வேண்டிய ஊர் தெனாலி. வண்டி நெல்லூர் வந்து நின்றது. நான் இருந்த பெட்டியில் என் அருகே ஒரு ஆந்திரர் ஏறி உட்கார்ந்தார். என் கையிலுள்ள 'கல்கி'யை அவர் வாங்கி ஆர்வத்துடன் படித்துப் புகழ்ந்தார். இவ்வளவு தெளிவாக ஒரு ஆந்திரர் தமிழ் மொழியைக் கற்றிருக்கின்றாரே என நான் மிகவும் வியந்தேன். தீந்தமிழைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள அவர் அரும்பாடுபட்டுப் படித்துப் பாண்டித்யம் கூடப் பெற்றிருக்கின்றார் என அறிந்தேன். அவருடன் வெகு நேரம் சம்பாஷித்தேன். தமிழர்களாகிய நாம் 'வந்திச்சு' என்று சாதாரணமாகப் பேசுமிடத்தே அவர் 'வந்தது' என்றும், நாம் 'வாளப்பளம் துண்றீங்களா' என்று சர்வ சாதாரணமாகக் கூறுமிடத்து அவர் 'வாழைப் பழம் உண்கின்றீர்களா' என்றும் மிக இலக்கண சுத்தமாகப் பேசினார். அவருடைய தமிழறிவைப் போற்றிய நான், அதே இடத்தில் அவருடைய முன்னிலையிலேயே தலைகுனிய வேண்டியதாயிற்று. ஆம்; என்னையறியாது நானே தமிழைக் கொலை செய்யும் வகையில் அவருடன் பேசிவிட்டேன்.

சென்னை
27—3—50 பி. கோபால்

○●○

நியாயம் இல்லையா?

ஏப்ரல் 2உ 'கல்கி' இதழில் வெளியான "பூனா அனாதைகள்" என்ற கட்டுரையைப் பார்த்தேன். யானும் இந்த அனாதைகளில் ஒருவன். நாங்கள் படும் கஷ்டங்களில் சிலவற்றை நேயர்கள் எழுதியிருக்கிறார்கள். மற்றவை பூராவையும் எழுதப் பத்திரிகையில் இடம் போதாது என்று எண்ணுகிறேன். இந்தச் சம்பளக் குறைவு எல்லோரையும் விடத் தென்னிந்தியர்களைத்தான் அதிகம் பாதிக்கிறது. இவர்கள் பாகிஸ்தானிலிருந்து வந்திருக்கும் அகதியின் கதியைத்தான் இங்கு அனுபவிக்கிறார்கள். அன்றாடம் கஷ்டப்படுவதுடன் மீதி வைத்திருந்த பணத்திலாவது அல்லது கடன் வாங்கியாவது தாய் நாட்டுக்கு வருடம் ஒரு முறையாவது குடும்பத்துடன் தாய் தந்தையர்களையோ, பந்துக்களையோ பார்ப்பதற்கு ரூபாய் 200, 300 என்று ரயில் செலவு செய்து கொண்டு வர வேண்டியிருக்கிறது. இந்தக் கடனை அடைப்பதற்குள் அடுத்த தடவைப் பிரயாணம் வந்து விடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாதம் 30, 40 என்று சம்பளம் குறைக்கப் பட்டால் என்ன செய்வது என்று தோன்றவில்லை. எவ்வளவு மனுச் செய்தும், மத்திய வகுப்பினருக்காக ரொம்பவும் பாடுபடுகிறேன் என்று பறை சாற்றும் மந்திரிகளுக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் இந்த அநியாயம் புலப்படுவதில்லை. இவர்கள் காரியம் "பூசணிக்காய் போவது தெரியாமல் கடுகை எண்ணினாளாம்" என்னும் தமிழ்ப் பழமொழியைப் போல் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் காரணம் நாங்கள், மத்திய வகுப்புக் குமாஸ்தாக்கள் என்பதனால்தான். பெரிய உத்தியோகஸ்தர்களாக இருந்தால் தங்கள் காரியங்களை வருவில் சாதித்துக் கொள்ளத் திறமை உண்டு. எங்களிடம் வேலை வாங்க ஆட்கள் இருக்கிறார்களே தவிர எங்கள் கஷ்ட சுகங்களை அறிந்து நியாயம் வழங்க ஆட்கள் இல்லை.

பூனா
4—4—50 ரா. நாதன்

○●○

மனம் திருந்தவேண்டும்!

இலங்கைத் தமிழன்பர்கள் எழுதியிருந்த "தமிழ் படும்பாடு" "மொழிக் கொலை" என்ற இரு கடிதங்களையும் 'வட்டமேஜை'யில் படித்து மகிழ்ந்தேன். ஆ! அதை மகிழ்ச்சியென்றா குறிப்பிடுவது? கண்ணீர் பெருக்கினேன் என்றே கூறவேண்டும். இலங்கையில் நடக்கும் மொழிக் கொலையை யல்லவோ உதாரணங்களுடன் எழுதியிருந்தார்கள். தமிழ் நாட்டில் இலங்கையைவிட மோசமான தமிழ்க் கொலை நடக்கிறதென்றே கூற வேண்டும்.

நமது அருமைத் தலைவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரவர்கள் ஒரு சமயம் "மரத்தின்மேல் 'மரம்' என்று எழுதிப் போடவேண்டும். அவ்வெழுத்துக்களைப் பல தடவை பார்க்கும் படிக்கத் தெரியாதவன் எழுத்துக்களின் வரி வடிவங்களைப் புரிந்து கொள்வான்" என்று கூறியிருந்தார்கள். அதே மாதிரி பிழையாக எழுதப்படும் விளம்பரப் பலகைகள், பிழைகளைப் பரவச் செய்யப் பயன்படும் அல்லவா?

கண்ணில் காணும் பிழைகளைத் திருத்தும் பணியை எங்கள் 'மதுரை மாவட்டத் தமிழ்த் தொண்டர் கழகம்' மேற்கொண்டு சென்ற நான்கு ஆண்டுகளாகத் தன்னாலியன்ற தொண்டைத் தளராது செய்து வருகிறது. ஒவ்வொரு தமிழனும் தனது கடமையாகக் கருதி இத்தொண்டில் இறங்குவானானால் சில நாட்களில் தமிழ்நாட்டெங்கிலும் பிழையாக எழுதப்பட்ட விளம்பரப்

பலகைகளைக் காணுதல் அரிதாகிவிடும். பிழையாக எழுதிப்போடுபவர்கள் யாரும் வேண்டுமென்று செய்வதில்லை. இருக்கும் பிழையைச் சுட்டிக் காட்டினால் யாரும் மறுக்காது உடனே திருத்திக் கொள்வார்கள்.

ஒரு சினிமாக் கொட்டகையில் வெளிவழி என்று பல பலகைகளில் எழுதப்பட்டிருந்தன. (தமிழுக்குச் சிறப்புக் கொடுப்பது இந்த சிறப்பு ழகரம். அதனால் அந்த எழுத்துக்கு மிகவும் சிறப்புக் கொடுக்க வேண்டுமெனக் கருதினார்கள் போலும்!) சினிமா மானேஜரைக் கண்டு பேசினேன். உடனே திருத்தச் செய்தார். 'ஞாயிறு தோறும் விடுமுறை' என்ற விளம்பரம் படும்பாடு சொல்லத்தரமன்று. ஞாயிரு. தோரும், விடுமுரை, இவையெல்லாம் சர்வ சாதாரணமாகக் காணப்படும் பிழைகள். இன்னும் முக்கியமாகக் குறிப்பிடக் கூடிய பிழைகள் பிறதி, தொழிலாழர், உற்ப்பத்தி, நிற்க்குமிடம், முதலியன.

சர்க்காருடைய நிர்வாகத்தின் கீழுள்ள ஓர் பூங்காவிற்குச் (Park) சென்றிருந்தோம். பல இடங்களில் "புல் தரையில் மெதிக்கக் கூடாது" என்று எழுதப்பட்ட பலகைகளைக் கண்டோம். மிதிக்கக்கூடாது என்று திருத்த வேண்டுமென அப்பூங்காவை மேற்பார்வை செய்யும் பி. டபிள்யூ. டி. எக்ஸிகியூடிவ் இன்ஜினீயருக்குக் கழகத்திலிருந்து வேண்டுகோள் விடுத்தோம். பதிலேயில்லை. பிழைகள் திருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி எழுதிக் கொண்டேயிருந்தோம். அசைவதாக இல்லை. வேறு வழியில்லாமல் சென்னை சர்க்காருக்கு எழுதி, கல்வி மந்திரியவர்களுக்கு நகல் கொடுத்தோம். ஆறு மாதக் கடிதப் போராட்டத்திற்குப் பின் வெற்றி கிட்டியது. அதே எக்ஸிகியூடிவ் இன்ஜினீயரவர்கள் பிழைகளைத் திருத்தி விட்டதாகப் பதில் எழுதினார்கள் கழகத்திற்குப் பல நன்றியும் தெரிவித்து!

பஞ்சாயத்து போர்டு, அல்லது முனிசிபாலிடிகளுக்கு ஓர் அதிகாரம் வழங்கப்படல் வேண்டும். பலர் பார்க்கும்படி வெளியே தொங்கவிடும் விளம்பரப் பலகைகளில் பிழைகள் தென்பட்டால், அக்குற்றத்திற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்துத் தண்டிக்க அவர்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டும். சட்டத்தின் மூலமாக எல்லாச் சீர்திருத்தங்களையும் செய்வதென்பது சாத்தியமேயில்லை. மக்களாகவே மனந்திருந்த வேண்டும். தமிழ்ப் பற்று மிக்க அன்பர்கள் முனைந்தால், தமிழ் நாட்டிலுள்ள தமிழ்க் கொலைகளையெல்லாம் ஒரு நொடியில் மாற்றிவிடலாம்.

கோவை
15—4—50

க. சண்முகசுந்தரம்

★ பரிசு கொடுங்கள்!

ஈ. எஸ். எல். சி. பரீட்சை சம்பந்தமான கடிதங்களைப் படித்தேன். ஆயிரம் மாம்பழக் கணக்கு பலே ஜோர்! பதினைந்து ரூபாய்க்கு வாங்கி இரண்டரை ரூபாய்க்கு அனுப்பிவிட்டு, போதாக் குறைக்கு 160 பழங்களை அழுக விட்டுவிட்டு, மூன்று ரூபாய் லாபத்தையும் எதிர்பார்க்கும், அந்தப் பயித்தியக்கார மாம்பழ வியாபாரியைப் போல், நம் ஊரில் ஒரு பழ வியாபாரி இல்லையே என்று வருத்தப்படுகிறான் என் குறும்புக்காரத் தம்பி. இந்தக் கணக்கை மொழி பெயர்த்தாரே. அவர் சிறந்த ஹாஸ்ய ரஸிகராய் இருக்க வேண்டும். அவருக்குப் பரீக்ஷை எழுதிய மாணவ மாணவிகள் ஆளுக்கு ஒரு அணா வீதம் சேர்த்துப் பரிசுத் தொகை அளித்து, வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளும்படி சொல்ல வேண்டும் என்று நான் சிபார்சு செய்கிறேன்.

பரீக்ஷை எழுதிய மாணவ மாணவிகளுக்கு ஒரு வார்த்தை. இப்படிப் பட்ட பரீக்ஷைகளில் தேறியவர்களை விடத் தோற்றவர்கள் அதிகப் புத்திசாலிகள். இந்த மொழிபெயர்ப்பில் உள்ள ஹாஸ்யத்தை உங்கள் சகாக்களுடன் கூடி அனுபவித்துச் சந்தோஷமாகச் சிரித்து விளையாடிக் கொண்டிருங்கள். அதை விட்டு விட்டு மனதில் ஏக்கம் பிடித்து, 'ஐயோ, பரீக்ஷையில் சரியாக எழுதவில்லையே?' என்று கவலைப் பட்டுக் கொண்டு அந்தப் பயித்தியக்கார மாம்பழ வியாபாரியைப் போல், நீங்களும் பயித்தியக்காரப் பிள்ளைகளாய் இருக்க வேண்டாம்.

பரீக்ஷையில் மார்க்குப் போடும் அதிகாரிகளுக்கு ஒரு வேண்டுகோள். மாம்பழக் கணக்குக்கு ஏற்பட்ட மார்க்குகளை எல்லாப் பிள்ளைகளுக்கும் கொடுக்க வேண்டும். மேலும், "எவனும் 1000 பழங்கள் ரூ. 15-க்கு வாங்கி ரூ. 2-8-0 க்கு அனுப்ப மாட்டான். ஆகையால் கணக்குத் தப்பு" என்று எழுதிய பிள்ளைகளுக்கு அவர்களுடைய புத்திசாலித்தனத்துக்காக 5 மார்க்கும், அதை எழுதிய அவர்களின் மனோதைரியத்துக்காக 5 மார்க்கும் ஆக 10 விசேஷ மார்க்குகள் கொடுக்க வேண்டும்.

பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்த மாதிரி அபத்தப் பரீக்ஷையில் பிள்ளைகள் சரியாய் எழுதவில்லையே என்று அவர்களைக் கடிந்து கொள்வது சுத்தத் தப்பான காரியம். இந்த வருஷப் பரீக்ஷைக் கேள்வித் தாள்களை, ஆசிரியர்களும், பள்ளிக்கூட நிர்வாகிகளுமே குறை கூறுகிறார்கள் என்பதையும் அவர்கள் கவனிக்க வேண்டும்.

திருநெல்வேலி
16—4—50

ராஜலக்ஷ்மி

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "மறக்காதே காட்டுங்கள்!" என்ற கடிதம் எழுதிய தாம்பரம் ஸ்ரீமதி லலிதாம்பிகாவுக்கும், "பரிசு கொடுங்கள்!" என்ற கடிதம் எழுதிய திருநெல்வேலி ஸ்ரீமதி ராஜலக்ஷ்மிக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.



வளர்ச்சி மிக அவசியமானது!

ஆரோக்கியமாயுள்ள குழந்தைக்கு எடை ஏறிக் கொண்டே போகிறது. கொழுப்பல்ல, உறுதியான எலும்பும் தசையும். நிறுப்பதைத் தவிர, உயரம் மார்பின் அளவு இவற்றை மாதா மாதம் எடுப்பதால் இதைப் பரிசோதனை செய்ய முடியும். உங்கள் குழந்தை வளர்ச்சியின்றியோ, கிரமத்துக்கு மேலாக வளரவோ செய்யாதபடி நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகாரத்தில் போதுமான வைடமின்கள்* இருந்தால் தான் சரியான வளர்ச்சி சாத்தியமாகும், தற்காலம் அகப்படும் உணவு போதுமான அளவு வைடமின்கள் இல்லாதபடியால், அதிகப்படியான வைடமின்கள்* கொடுப்பது அவசியமாகிறது. ஒவ்வொரு சாப்பாட்டுடனும் சில சொட்டு அடமின் கொடுப்பதால், A, D * வைடமின்களின் முழு அளவும் கிடைக்கிறது. பழரசத்திலோ, பாலிலோ அடமின் கலந்தால் அநேகமாய் வாசனை தெரியாது. தவிர அது யாதொரு வயிற்றுக் கோளாறையும் உண்டு பண்ணாது.

அடமின்

ஷார்க் லிவர் ஆயிலின் புதிய சத்து.

* விடமின் A : உடல் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் சாதகமானது. ஜலதோஷம், சின்னம்மை, நீர்க்கோளுவன், கணைக்கட்டு முதலிய நோய்களைத் தடுக்கிறது - வெட்டுக்காயம், சிரங்குகளைப் போன்றவைகள் இவற்றிலிருந்து விஷம் பரவாமல் பாதுகாக்கிறது.

* விடமின் D : கணைச்சூட்டைத் தவிர்க்கிறது. உறுதியான எலும்பு, பற்கள் வளர்ச்சிக்கும் சுகத்துக்கும் இன்றியமையாதது.

MGB

எம். ஜி. பி. ஷார்க் லிவர் ஆயில்

உங்களுக்கு காட் லிவர் ஆயில் பழக்கமானதாகில், உங்களால் அடமினை வாங்க வசதியில்லாவிட்டாலும் எம்.ஜி.பி. ஷார்க் லிவர் ஆயில் வைடமின், A, D இரண்டின் முழு சக்தியையும், நீங்கள் உட்கொள்ளும் கொழுப்பு சத்துள்ள தாவர எண்ணெய்களையும் சேர்க்கிறது. விலை நாளொன்றுக்கு ½ அணா.

தயாரிப்பாளர்கள்—

கவர்மெண்ட் ஆயில் பாக்டரி, கள்ளிக்கோட்டை

டிபார்ட்மெண்ட் ஆப் இண்டஸ்ட்ரீஸ் & காமேர்ஸ்,

கவர்மெண்ட் ஆப் மெட்ராஸ்

தென் இந்தியாவுக்கு வினியோகஸ்தர்கள்

பாரி & கோ., லிட்., மெட்ராஸ்.

SISTA'S-OO-5 B-TAMIL




Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI ஏப்ரல் 30,1950 4



"கல்கி" ஆசிரியர் எழுதிய இருபெரு நவீனங்கள்

சிவகாமியின் சபதம்

பரிசுப் பதிப்பு ரூ. 15   மலிவுப் பதிப்பு ரூ. 9

•

பார்த்திபன் கனவு

விலை ரூ. 6-8-0

தமிழ் நாட்டுச் சரித்திரத்தின் மகோன்னத காலத்தை இவ்விரு நவீனங்களும் அற்புதமாக விளக்குகின்றன

•

(தபால் செலவு பிரத்தியேகம்)

கிடைக்குமிடம்: கல்கி காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை


டால்டாவில்
பொரித்த மசாலாதிணித்த
குடமிளகாய்களினால் உங்கள்
உணவை அதிக
சத்துடையதாகச் செய்யுங்கள்!